நெஞ்சமே அஞ்சாதே நீ!

டாக்டர்

எம்.எஸ்.உதயமூர்த்தி



வானதி பதிப்பகம்

(1)

நெஞ்சமே அஞ்சாதே நீ!

டாக்டர். எம். எஸ். உதயமூர்த்தி

வானதி பதிப்பகம்
13. தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை-17.

முதற் பதிப்பு : டிசம்பர், 1980
இரண்டாம் பதிப்பு : ஆகஸ்ட் 1981
மூன்றும் பதிப்பு : அக்டோபர் 1983

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை : ரூ. 5-00

அச்சிட்டோர் : லீப்ஸிக் பிரிண்டர்ஸ் சென்னை-14



என் நண்பர் மணியன்
உள்ளத்தால் உயர்ந்தவர்,
சுய முயற்சியால் முன்னுக்கு வந்தவர்,
நாட்டின் ஓட்டத்தைக் கணிப்பதில் மேதை,
பிரச்சினைகளுக்கு முடிவு காண்பதில் மன்னன்,
அரசியல் ஞானத்தில் மாக்கியவல்லி.

ஒத்த லட்சியங்கொண்ட
ஒரு தனிப்பெரும் தமிழ்மகன் மணியனுக்கு
இந்நூலைப் பெருமையுடன் காணிக்கை
ஆக்குகிறேன்.

எம். எஸ். உதயமூர்த்தி

பொருளடக்கம்

முன்னுரை

வாழ்வில் எல்லா நலன்களேயும் பெற்று நாம் வாழப் போகிறோம் என்பதில் நமக்கு நம்பிக்கை வேண்டும்; அசைக்க முடியாத நம்பிக்கை வேண்டும். அதை அடைய நமக்குச் சிலநெறிகள் வேண்டும். தைரியம், தன்னம்பிக்கை, நேர்மை, சத்தியம் என்ற சில நெறிகள் வேண்டும். இதைத் தாண்டி— நாம் நமக்காக மட்டும் வாழாமல் நம் நாட்டிற் காகவும் வாழத் துவங்கும்போதுதான் நமது அதி மனிதப் பண்புகளான, கருணே, தியாகம், லட்சிய ஈடுபாடு, எதிரியை மன்னிக்கும் மனேபாவம் போன்ற உயர் பண்பு கள் நம்மிடமிருந்து புறப்படும்.

அப்படி ஒரு வாழ்க்கையை நாம் வாழாமல் நம்மை நாமே மறைத்துக் கொண்டு நமக்காகவே வாழ்ந்து முடிப் போமானல் அதில் அர்த்தமில்லே. அது மட்டுமல்ல. அப்படி வாழ்ந்தால் இந்த உலக தர்மத்திற்கு—உலக நியதிகளுக்கு அப்பாற்பட்ட, புறம்பான காரியத்தைச் செய்தவர்களா வோம். ஏனெனில் இவ்வுலகமும் இப்பிரபஞ்சமும்—அதில் உள்ள எல்லா உயிர்களும் ஒன்றை ஒன்று நாடி ஒன்றுக் கொன்று உதவி செயல்படுகின்றன.

ஒரு சாதாரண புல் தன் வளர்ச்சிக்கு ஒளியை நாடு கிறது; சூழ்நிலேயில் இருக்கும் காற்றைத் தேடுகிறது. பூமிக்கடியில் இருக்கும் நீரைத் தேடி ஓடுகிறது. சமயம் வாய்க்கும்போது தன்னேத்தானே கொடுக்கிறது.

இப்படிப் பிற பொருள்களும் மக்களும் கொடுப்பதனுல் தான் நம் வாழ்க்கை சாத்தியமாகிறது. இப்படிப் பெறும் நாம், கொடுக்க வேண்டாமா? கொடுங்கள்; அள்ளிக் கொடுங்கள்; தாராளமாகக் கொடுங்கள். கொடுங்கள் என்று சொல்லும்போது காசில்லாத ஊரில் வாழும் நாம், நமது பணத்தைக் கொடுப்பதைப் பற்றித்தான் நினேக் கிறோம்.

அல்ல. காசு பணம் எல்லாம் சிறு கருவிகள். பண்ட மாற்று சாதனங்கள். பாரதியார் கூறியது போல, "அதுவு மற்றவர் வாய்ச்சொல் அருளீர்!". காசு பணம்தான் கொடுத்து உதவவேண்டுமென்பதில்லே. அதைக் கொடுக்க முடியாதபோது நம்மால் எதைக் கொடுக்க முடியுமோ,

நம் உழைப்பை, நல்ல சொல்லை, பாராட்டை, ஒரு படிப்பு சொல்லிக் கொடுப்பதை, ஒரு பஸ் ஸ்டாண்டில் வழி காட்டும் சிறு உதவியை, தெருவில் கிடக்கும் அசுத்தத்தை அப்புறப்படுத்தும் சிறு காரியத்தை—எதெது முடியுமோ நாம் அதைச் செய்யவேண்டும். இதுதான் வாழ்க்கையின் தாத்பரியம்; உண்மைப் பயன்.

இதை நாம் உணரவில்லை என்றால், செய்ய முடியவில்லை என்றால் நாம் எதற்காக வாழ்ந்தவர்களாவோம்?

மனிதனுக்குள் மிகப் பெரிய சக்தி இருக்கிறது. மனித உடல் ஒரு சாதனம். நம்முள் இருக்கும் மிகப் பெரிய சக்தியை நாம் உணர்ந்து, அந்த ஆக்க சக்திகளை வெளிக் கொணரும்போது அதை நமக்கும் பிறருக்குமாகப் பயன் படுத்தும்போது ஓர் கர்மயோகி தோன்றுகிறான்; ஓர் கடமைஞானி பிறக்கிறான்; ஒரு பொதுமகன்—பெருமகன் அப்போது நாட்டில் உலவுகிறான். நாம் இதை சதி வாழ்க்கையில் நினைவு கொள்ள வேண்டும்.

உலகில் இரண்டே இரண்டு வகைப் பிரச்சினைகள்தான் இருக்கின்றன என நான் எண்ணுவதுண்டு. ஒன்று இயற்கைச் சக்திகளான காற்று, மழை, மின்னல், பூகம்பம், எரிமலை என்று நம் கைக்கு அப்பாற்பட்ட சக்திகள் விளைக்கும் பிரச்சினைகள். மனிதன் இவற்றைத் தன் சக்திக்கு அப்பாற்பட்டவை என்று விட்டு விடவில்லை. அடிக்கும் காற்றை உபயோகித்துத் தன் பாய்மரக் கப்பலைச் செலுத்துகிறான்; கொட்டும் மழையை பயன்படுத்தி நீரைத் தேக்கி நிரந்தரமாகத் தண்ணீர் வசதி செய்து கொள்கிறான். மின்சாரம் எடுக்கிறான். இப்படித் தன் வாழக்கைக்கு, அப்பாற்பட்ட சக்தியையும் பயன்படுத்திக்கொள்ளும் அறிவும் சாமர்த்தியமும் அவனிடம் இருக்கிறது.

இப்படி இயற்கை விளைக்கும் பிரச்சினைகளுக்கப்பால் மனிதன் தானே விளைக்கும் பிரச்னைகள் இருக்கின்றன. இவை அனைத்தும் மனப்பிரச்னைகள். ஒவ்வொருவர் மனதிலும் நிலவும் எண்ணங்களால் விளைந்த பிரச்னைகள்.

முன்னேறத் துடிக்கும் மனிதனின் மனத்தில் சில பிரச்சினைகள். முன்னேற முடியாது என்று கவலைப்படும் மனதில்

வேறு சில பிரச்சினைகள். முதலாளி—தொழிலாளர் என்ற இருதரப்பாரிடை நியாயம் சம்பந்தமான வேறுபட்ட எண்ணங்கள். அதே போல அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் ஒருவர்மீது ஒருவர் பயங்கொண்டிருப்பதால், நம்பாததால் ஏற்படும் எண்ணச் சிக்கல்கள்.

இவை அனைத்தும்—மன எண்ணங்களால் விளைபவை. இந்த எல்லாப் பிரச்சினைகளும் - நாமே உண்டாக்கியவை; ஆகவே அவற்றை நாமே போக்கி விடலாம்.

நான் சென்ற முறை வந்தபோதும் சரி இம்முறை தமிழ் நாட்டுக்கு வந்த போதும் சரி பல தரப்பட்ட அறிஞர்களையும் அதிகாரிகளையும், தொழிலதிபர்களையும், மாணவர்களையும், அரசியல்வாதிகளையும் சந்தித்தேன். ஒரு இரண்டு மணி நேரம், நம்மிடமுள்ள பல்வேறு நிலைகளையும் கூறி என்னை நம்ப வைக்க முயன்றார்கள். ' நமது சிக்கல்கள் தீர்க்க முடியாதவை; நமது பிரச்சினைகள் பெரியவை. அவற்றிற்கு முடிவு காண முடியாது'' என்று சொன்னார்கள்.

''எல்லாம் அரசியலால்—அரசியல்வாதியால் விளைந்த கேடுகள். அவை நிவர்த்திக்க முடியாதவை. அரசியல்வாதிகளை நாம் அப்புறப்படுத்த வேண்டும்'' என்றார்கள் பலர். ''நமது தேக்கத்திற்கு காரணமே நமது அரசாங்க அதிகாரிகள்தான். சட்டதிட்டங்களுக்குள் அகப்பட்டு மனிதத் தன்மையை இழந்து விட்டார்கள். அவர்களை முதலில் ஒழிக்க வேண்டும்'' என்றார்கள் சிலர். ''கற்பனையும், துணிவும், தீர்க்க தரிசனமுமில்லாத தலைவர்களை நாம் பெற்றிருக்கிறோம். அவர்கள் அன்றாடங் காய்ச்சிகளாகக் கண் முன்னே இருக்கும் அன்றாடப் பிரச்சினைகளில் மூழ்கி விடுகிறார்கள். தனது லாபம், பதவி, கட்சிக்குப் பணம், செல்வாக்கு, குண்டர்கள் என்று அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்'' என்று பலர் ஆற்றுப்போனார்கள் 'சாதி அடிப்படையைக் காட்டி என் முன்னேற்றத்தை ஒடுக்குகிறார்கள்'' என்று புலம்பினார்கள் பலர்.

மொத்தத்தில் இவை எல்லாம் மாற்ற முடியாதவை என்று சொன்னார்கள். என்னை நம்பிக்கை இழக்க வைக்கும் முயற்சியில் தெரிந்தோ தெரியாமலோ ஈடுபட்டார்கள்.

அவர்கள் நிலை எனக்குப் புரிந்தது; நிலையின் அவலம் எனக்கு விளங்கியது.

இதில் விசித்திரம் என்னவென்றால், நாடு ஏன் முன்னேறவில்லை என்று யாரும் கவலைப்படவில்லை. முன்பிருந்ததைவிட எல்லாம் கீழே போய்க் கொண்டிருக்கிறதே என்றுதான் கவலைப்பட்டார்கள். நாட்டில் பண்புகள் கீழ்த்தரமாகி வருகிறது என்று ஒருமுகமாகக் கவலைப்பட்டார்கள்.

அதாவது, ஒரு தொழில் செய்கிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதில் லாபம் சம்பாதிக்க வேண்டுமே என்று எண்ணி முன்னேக்கிச் செயல்படுவதற்குப் பதில் "நஷ்டம் ஏற்படுகிறதே; இருப்பவர்கள் உள்ளுக்குள்ளேயே சுரண்டுகிறார்களே, இன்னும் எத்தனை நாளைக்குத் தாக்குப் பிடிக்க முடியும்?" என்று எண்ணுவதைப் போலிருக்கிறது.

நமது பதினெட்டு வயது மகன் கிரிக்கெட் போட்டியில் ஈடுபட்டு நல்ல பெயரும் புகழும் பெறவேண்டும் என்கிற ஆசைகளெல்லாம் போய், இப்போது அவன் டி. பி. நோயிலிருந்து விடுபடுவானா என்று அவன் கட்டிலருகே ஆஸ்பத்திரியில் உட்கார்ந்திருப்பதைப் போலிருக்கிறது நிலைமை.

கடந்த முப்பதாண்டுகளில் நமது பொருளாதார வளர்ச்சி 1.6 சதந்தான். வேலையில்லாத் திண்டாட்டம் 36 சதமாகி நாளும் இளைஞர்களை உயிரை வதைத்துக் கொன்று கொண்டிருக்கிறது. இந்தியாவில் வாழ்வதே "கடவுள் அளித்த பெரும் தண்டனை" என்பது போல் நிலவுகிறது வாழ்க்கை. கேவலம், நம்மையும் நம் சுற்றுப்புறத்தையும் சுகாதார முறையில் வைத்துக் கொள்ள நம்மால் முடியவில்லை.

முப்பதாண்டு சுதந்திரத்திற்குப் பின்னும் ஏராள பொறியியல் நிபுணர்களையும், மருத்துவர்களையும் உற்பத்தி செய்த பின்னும், ஐந்து முறை ஐந்தாண்டுத் திட்டங்களை வகுத்து நிறைவேற்றிய பின்னும தமிழ் நாட்டின் தலைநகராம் சென்னைமாநகரில் கேவலம் மனிதனின் அடிப்படைத்தேவையான குடிநீரை நம்மால் கொடுக்க முடியவில்லை. குடிநீர் கொடுக்கும் அளவை விட்டுத் தள்ளுங்கள். சுத்தமான,

பூச்சி, பொட்டுக்கள், பாக்டிரியாக்கள், கிருமிகள் அற்ற முறையில் நம்மால் தமிழ்நாட்டின் தலைநகருக்குக் குடிநீர் வழங்க முடியவில்லை. எல்லோரும் தண்ணீரைக் கொதிக்க வைத்துத்தான் குடிக்க வேண்டியிருக்கிறது. குடிநீரில் பாதுகாப்பு இல்லை.

என்ன கேவலம் இது? ஏன் இந்த நிலை? என்ன செய்யத் தவறிவிட்டோம்? ஏன் செய்யத் தவறிவிட்டோம்? ஏன்? ஏன்?

தமிழ் நாட்டின் புகழ் பெற்ற சட்டக் கல்லூரிக்குச் சென்றிருந்தேன். ஆசிரியர்கள் அறைக்கு என்னை அழைத்துச் சென்றார்கள். எனக்கு ஏற்பட்டது பிரமிப்பா, அதிர்ச்சியா என்று கூற இயலவில்லை. வழக்கறிஞர்கள்—பேராசிரியர்கள் கூடும் அறை; அளவளாவும் இடம்; சிந்திக்கும்— விவாதிக்கும் கூடம்.

அங்கே கையொடிந்த நாற்காலிகள்; துருப்பிடித்த மேஜைகள்; ஹாலுக்கருகே உள்ள கழிவு அறையிலிருந்து வரும் மூத்திர நாற்றம். ஹைதர் அலி காலத்துக் கட்டிடங்கள். நான் அதிர்ச்சியால் விக்கித்து நின்றேன். உலகப் பேரறிஞர்களுக்கு ஈடாக வழக்கறிஞர்களை உருவாக்கும் ஒரு தமிழ் நாட்டின் பெரும் சட்டக் கல்லூரியில் என்ன மாற்றம் ஏற்பட்டிருக்கிறது முப்பதாண்டுகளில்?

வழக்கறிஞர்கள் ஊமைகளாய் வாழ்கிறார்களா? நீதிபதிகள் சகாயம் கிடைக்குமிடம் சார்ந்து வாழ முயல்கிறார்களா? ஆட்சி புரிபவர்களுக்காக நீதி வழங்கும் ஒரு நிலை எந்த நாட்டில் உருவாகிறதோ அங்கே உரிமைகள் இல்லை. அங்கே Checks&Balances இல்லை. நீதி, நேர்மை, நியாயம், சத்தியம் எல்லாவற்றிற்கும் எந்த நாட்டில் முதுகெலும்பில்லையோ அந்த நாட்டில் வீரம் விலை போகாது; செல்வம் சேர்க்கும் மனோபாவம் நிலவாது; மகிழ்ச்சி மறைந்து போகும்.

அந்த நிலையில்தான் முப்பதாண்டுகளுக்குப் பின் நாம் இருக்கிறோம். இப்போது என்ன நேரும்? இதே போல ''அரசியல் செல்வாக்குப் படைத்த சிலருக்கே சகாயங்கள்'' என்ற அளவில் அவலங்களை ஏற்றுக்கொள்ளும் அடிமைப்

புத்தியில் நாடு இன்னும் பல ஆண்டுகள் இப்படியே போகலாம். இதுவே நம் விதியாக இருக்கலாம்.

மாறாக, பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் நீதியையும் நேர்மையையும் பற்றிப் படித்த இளைஞர்கள், வாழ்க்கையை வாழ வாய்ப்பில்லாத இளைஞர்கள்—பொங்கி எழலாம்; புரட்சி செய்யலாம். நாடுகள் பல அந்தச் சரித்திரத்தைக் கண்டிருக்கின்றன. இது புதிதில்லை. என்று படித்தவர்களும், அறிஞர்களும், வாயிருந்தும் ஊமைகளாய், காதிருந்தும் கேளாதவர்களாய் கண்ணிருந்தும் பார்க்கவிரும்பாதவர்களாய் இருக்கிறார்களோ அன்று, வரை நம் தலை நிமிரப் போவதில்லை. என்று படித்தவர்கள் வழக்கறிஞர்கள், பேராசிரியர்கள், பொறியியலாளர்கள், மருத்துவர்கள், அரசியல்வாதிகளால் ஒதுக்க முடியாத இனம் என்று உணர்கிறார்களோ, உணர்ந்து வீறு கொண்டு எழுகிறார்களோ, எழுந்து நாட்டின் பொது நீரோட்டத்தில் எனக்கும் பங்குண்டு என்று தன் உரிமைகளை நிலைநாட்டுகிறார்களோ அன்றுதான் நாட்டுக்கு விடிவு காலம் ஏற்படும்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து ஆசிரியர் சங்கத்தினர் பலரை நான் சந்தித்தேன். அவர்கள் போராட்டம் துவங்கியிருக்கிறார்கள். சில அடிப்படை உரிமைகளுக்காகப் போராட்டம் நடத்துகிறார்கள். பலரும் தாங்கள் விரும்புவதை அரசாங்க அதிகாரத்தின் மூலம்—அரசாங்கத்தை நம்பி—சாதித்துக்கொள்ளலாம் என்று பேசினார்கள். நான் கூறினேன்: மனிதன் தன் வாழ்க்கையில் நல்ல காரியங்களுக்காகப் பாடுபட வேண்டும். அதே போல கெட்ட காரியங்கள், அநீதிகள், அக்கிரமங்கள் நடக்கும்போது நாம் போராட வேண்டும்.

மோகன்தாஸ்காந்தி தென்னாப்பிரிக்காவில் இந்தியர்கள் பாரபட்சமாக நடத்தப்படுவதை ஏற்றுக் கொண்டிருக்கலாம். 'நிறபேதத்தைக் காட்டி அடிப்பதை, கொடுமைப் படுவதை, போனால் போகட்டும், நாம் ஒன்றும் செய்ய முடியாது என்று ஏற்றுக் கொண்டிருக்கலாம்.

அப்படி அவர் ஏற்றுக் கொண்டிருந்தால் நியாயத்திற்காக அநீதியை எதிர்த்துப் போராடவில்லை என்றால் உரிமை

களைப் பெற்றிருக்க முடியாது. அக்கிரமங்களை எதிர்த்துப் போராடுவதற்குத் துணிவுவேண்டும்; நெஞ்சுரம் வேண்டும். அதனுல் விளையும் பயன்களை ஏற்றுக்கொள்ளத் தயாரா யிருக்க வேண்டும்.

மகாத்மா காந்தியை அடித்துப் போட வந்தார்கள். அவமானப்படுத்தினுர்கள் —உயிருக்கே ஆபத்தான நிலை வந்தது.

அதேபோல அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தில் பேரா சிரியர்களைக் குண்டர்களை ஏவி அடித்தார்கள். பேராசிரியர் ஒருவர் அடிபட்டு எலும்பு முறிந்து ஆஸ்பத்திரிக்குப் போனுர்.

போராட்டம் என்று வந்தால் சாமர்த்தியமாகவும் சாகசமாகவும் போராட வேண்டியதுதான். அதே சமயம் உயிரைத் திரணமாக மதிக்கும் அஞ்சா நெஞ்சமும் நமக்கு வேண்டும். கஷ்ட நஷ்டங்களை ஏற்றுக்கொள்ளும் மனப் பக்குவமும், எதையும் லட்சியத்திற்காகத் தியாகம் செய்யும் உள்ளமும் நமக்கு வேண்டும். கஷ்டப்படாமல், தியாகம் செய்யாமல் பலன்கள் வந்ததில்லை.

நாடுபூராவும் படித்த மக்கள், பல துறையிலுமுள்ள நல்லவர்கள் நாடு இப்படியே போய்க் கொண்டிருக்க முடியாது, கூடாது, என்று தீர்மானித்து, செயல்பட முன் வரவேண்டும். ''எனக்கென்ன வந்தது?'' என்றே, ''நான் ஓர் ஆள் முன்வந்து தியாகம் செய்ததனுல் என்ன ஆகும்?'' என்றே நாம் கருதி வாளாயிருந்தால் ஒரு காரியமும் நடை பெருது. நாம் இருந்த இடத்திலே இருப்போம். தேங்கிக் கிடக்கும் குட்டை நாற்றமெடுக்கும் என்பது பழமொழி.

ஓர் எண்ணம்—காரல் மார்க்சுக்கிருந்த ஓர் எண்ணம்— பெரிய நாட்டையே கொள்கை அடிப்படையில் உருவாக் கியது. ஒரு தனிமனிதன் பொட்டி ஸ்ரீராமுலு, ஆந்திரப் பிரதேச மாநிலம் தனியே உருவாகக் காரணமாக இருந் தார். ஆகவே, ஓர் எண்ணம் — ஒரு மனிதர் - செய்யக் கூடிய சாதனைகள் அளவிட முடியாதவை. ஆகவே நாம், நான் என்ன செய்ய முடியும் என்று நம்மைக் குறைத்து

மதிப்பிடக்கூடாது. ''பூனேக்கு யார் மணி கட்டுவது?'' என்று நாம் ஆள் பார்த்துக் கொண்டிருக்கக்கூடாது.

உலகம் 'முடியும்' என்று நம்பியவர்களால்தான் மாறு பட்டிருக்கிறது.

நாட்டில் தரம்—பண்பு குறைந்துவிட்டது. பொது வாழ்க்கையில் நேர்மையும் நீதியும் மங்கிவிட்டது என்பது நமது குறையானுல், நாமேதான் அதை நிவர்த்தி செய்ய முன் வர வேண்டும். படித்தவர்கள்—நல்ல உள்ளம் படைத் தவர்கள் தங்களேப் போல் ஒத்த உள்ளம் படைத்தோரை ஒன்று திரட்ட வேண்டும். அரசியல் உலகம் புறக்கணிக்க முடியாத அளவிற்கு அவர்கள் மாபெரும் சக்தியாக உரு வாக வேண்டும்.

உருவாக முடியுமா?

நிச்சயமாக முடியும்.

கடந்த முப்பதாண்டுகளில் ஒரு டாக்டர்கள் ஸ்டிரைக் செய்து நான் பார்த்ததில்லே. கடந்த முப்பதாண்டுகளில் ஒரு வழக்கறிஞர்கள் கூட்டம் ஒன்றுபட்டு ஓர் அநியா யத்தைக் கண்டித்ததை, போராடியதை நான் கண்ட தில்லே. கடந்த முப்பதாண்டுகளில் ஊமைகளாய் உரிமை யற்றவர்களாய் வாழ்ந்த பேராசிரியர்கள் ஒரு மறியல், ஒரு போராட்டம், ஓர் எதிர்ப்பு ஊர்வலம் நடத்தி நான் அறிய வில்லே.

அந்தப் புதுமை இப்போது நடைபெறுகிறது. வன் முறையையோ, சுயலாபத்திற்கான மறியல்களேயோ நான் பாராட்டுவதில்லே. ஆனுல் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு போராட்டத்தின் போதும், படித்தவர்கள் அசட்டையாக இருந்துவிடாமல் நியாயத்திற்காகப் போராடி இருக் கிருர்கள். தியாகங்களே மேற்கொண்டிருக்கிருர்கள்.

ஆகவே, வருங்காலத்தைப் பற்றிய நம்பிக்கை எனக் கிருக்கிறது. படித்தவர்களும் நல்லவர்களும், நாட்டின் பொது நீரோட்டத்தில் பங்கு பெற்று நாட்டை வளப் படுத்தும்—வலுப்படுத்தும் நாள் அதிக தூரத்திலில்லே.

எம். எஸ். உதயமூர்த்தி

1

எண்ணங்களும், உணர்வுகளும்!

நாம் வாழப் பிறந்திருக்கிறோம்; வருத்தப்பட அல்ல. வாழ்வின் எல்லா வசதிகளையும் அனுபவிக்கப் பிறந்திருக்கிறோம்; அழுது குமைய அல்ல. அதற்கு நாம் என்ன செய்யவேண்டும்?

நமது செயல்களின் ஆரம்பம் நமது எண்ணங்கள். நமது எண்ணங்களின் பிறப்பிடம் நமது மனம். ஆகவே நமது மனத்தை நம் கைவசத்தில் வைத்திருக்க வேண்டும். அதன் உள்ளே புகும் எண்ணங்களையும் ஆசைகளையும் பற்றி நாம் சர்வஜாக்கிரதையாக இருக்கவேண்டும். ஆகவேதான் நம் மனத்தில் நல்லெண்ணங்களை — ஆரோக்கியமான எண்ணங்களை—மகிழ்ச்சிகரமான எண்ணங்களை—புனிதமான எண்ணங்களை உள்ளே விடவேண்டும். அவற்றை அடைகாக்க வேண்டும்.

மாறாக, துயர எண்ணங்களையும் பயம் நிறைந்த எண்ணங்களையும் பொறாமை நிறைந்த எண்ணங்களையும் கெட்ட எண்ணங்களையும் நம்முள்ளே விடுவதன் மூலம் நமக்கு நாமே தண்டனை கொடுத்துக் கொள்கிறோம். நமது வாழ்வைத் துயர் நிறைந்ததாக்கிக் கொள்கிறோம்.

"வாழ்விலே துயரமும், துன்பமும் இல்லை என்று சொல்லிவிட முடியுமா? அப்போது துயரப்படாதிருக்க முடியுமா?" என்று கேட்கக்கூடும். வாழ்க்கை மேடு பள்ளம் நிறைந்தது. உண்மைதான். அந்தப் பள்ளத்தில் நிற்கும்போது—துயரத்தில் நிற்கும்போது—அதற்கான மாற்று யோசனைகள், மாற்று எண்ணங்களை நாம் யோசிக்க வேண்டும். துயரத்தை மேக்கரித்து வரும், தைரியமான நம்பிக்கை கொண்ட வழிமுறைகளைக் காணும் போதுதான் வாழ்வின் சுமை எளிதாகிறது; வாழ்வு ஒரு சவாலாய் அமைகிறது.

"புத்திசாலித்தனம் என்பது, வாழ்வைச் சந்தோஷமாக அமைத்துக் கொள்வதுதான்" என்றான் ஓர் அறிஞன். ஆனால் நம்மில் பலரோ, விஷயங்களைத் தெரிநது கொள்வது, அதிக விஷயங்களைத் தெரிந்து வைத்திருப்பதுதான் புத்திசாலித்தனம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அது சரியல்ல. உண்மையல்ல. கலைக்களஞ்சியம்கூடத்தான் விஷயங்களைச் சுமந்து நிற்கிறது. நம்மிடம் மனக்களஞ்சியம் இருக்கிறது. எல்லாவற்றையும் சாதிக்கக்கூடிய வழிமுறைகள் அங்கே இருக்கின்றன. நாம் பெற்ற அறிவைக் கொண்டு நல்வாழ்வு வாழ உபயோகிக்கும்போதுதான் நமது படிப்பறிவு பூர்த்தியாகிறது.

நாம் பெற்ற அறிவை எப்படி வாழ்க்கைக்கு உபயோகிப்பது?

அது ஒரு பழக்கம். மனப் பழக்கம். ஒவ்வொரு முறையும் நடக்கின்ற ஒவ்வொரு விஷயத்தையும் அறிவு பூர்வமாக ஆராய்ந்து, 'ஏன்? எப்படி?' என்று கேட்டுப் புரிந்து கொள்ளும்போது நமது மன இயக்

கத்தை நாம் புரிந்து கொள்கிறோம். நமது மன இயக்கத்தை நம் கைக்குள் கொண்டு வருகிறோம்.

“நம் மன இயக்கத்தை நிர்வகிக்கும் முழுப் பொறுப்பும் நம் கைக்குள் இருக்கிறது என்ற எண்ணம் நம் அடி மனத்தில் சதா ஓடிக்கொண்டிருக்க வேண்டும்” என்கிறார் ஹிப்னடிசத்தைப் பற்றிப் புத்தகம் எழுதியுள்ள ஒரு மருத்துவ அறிஞர்.

நமது மனம் எப்படி இயங்குகிறது என்பதை, நம் வாழ்வில் நிகழும் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் அலசி ஆராய்வதன் மூலம் உணர்ந்து கொள்ளலாம்.

பிறர் கூறும் ஒரு சொல் நமது கோபத்தை மூட்டி விடுகிறது. ஒரு நிகழ்ச்சி நமது வருத்தத்தை தூண்டி விடுகிறது. ஒரு கண்ணசைவு வெறுப்பையோ, காமத்தையோ, காதலையோ, மகிழ்ச்சியையோ தூண்டி விடுகிறது.

இதனால், நாம் உணர்ச்சிகளுக்குள்ளாகிறோம். கோபம், பயம், மகிழ்ச்சி போன்ற உணர்வுகள் நமக்கு நேரிடுகின்றன.

உணர்வுகள் எண்ணங்களின் பிரதிபலன். எண்ணம்தான் மூலம். எண்ணத்திலிருந்துதான் உணர்வுகள் தோன்றுகின்றன.

இதை உணர்ந்து கொள்ளும்போது நம்மை நாம் கட்டுப்படுத்த முடியும். நமது உணர்ச்சிகளின்—கோப உணர்ச்சியின்—காரணம் மனத்தில் தோன்றிய ஓர் எண்ணம், ஒரு நினைவு என்பதை நாம் புரிந்து கொள்ளும்போது, “ஆ! இதற்கா நான் இவ்வளவு மனம் நொந்தேன். பயப்பட்டேன்” என்கிறோம். “சே!

இந்த எண்ணம்தானு இத்தகைய வருத்தத்தை என்னுள் மூட்டியது?'' என்று நம்மைப் பார்த்தே நாம் சிரிக்கிறோம்.

சகஜமாக இப்படி நாம் சிந்திப்பதில்லை.

திடீரென்று காலையில் ஏதோவொன்று நிகழ்கிறது. நமது 'மூடே'—மன நிலையே கெட்டு விடுகிறது. ஏன் இப்படி எதற்கும் கோபப்படத் தயாராயிருக்கிறோம்? ஏன் திடீரென்று நமது வழக்கமான இயல்பை இழந்து விட்டோம் என்று நமக்குப் புரிவதில்லை. அந்தக் கோப எரிச்சல் கொண்ட மனநிலை நம் மனத்தை நிறைத்து விடுகிறது. "இந்த மனநிலை ஏற்பட என்ன நிகழ்ந்தது, யாரைப் பார்த்தேன், என்ன சொல்லக் கேட்டேன்?'' என்று நாம் கேள்வி கேட்டுக் கேட்டுப் பின்னோக்கிப் போகும்போதுதான், நமக்கு மூல காரணம் புரிகிறது.

அந்த மூல காரணம் மனத்துள் புகுந்த ஓர் எண்ணம், யாரோ சொன்ன ஒரு சொல் என்பது நமக்குத் தெளிவாகிறது.

உணர்வுகளைக் கட்டுப்படுத்துவது எப்படி? அதன் பின்னல் நிற்கும் எண்ணங்களைப் புரிந்துகொள்வதன் மூலம் உணர்வுகளைக் கட்டுப்படுத்தலாம். பல உணர்வுகள்—கோப உணர்வு—வெறுப்புணர்ச்சி—பய உணர்வு என்று பல உணர்வுகளும் நமது உடலில் அதன் பலன்களை நிகழ்த்தாமல் போவதில்லை.

உடல் முறுக்கேறுகிறது. இதயம் படபடப்படைகிறது. கை கால்கள் நடுங்குகின்றன. உடம்பு வியர்க்கின்றது. இதன் விளைவாக உடல் இயற்கைக்கு மாறுபட்ட நிலையை அடைகிறது. மாறுபட்ட நிலை உடலை நோய்க்கு உள்ளாக்குகின்றது.

ஆஸ்துமா என்றும், ரத்த அழுத்தம் என்றும், இதய பலவீனம் என்றும், நரம்புக் கோளாறு என்றும் மனிதன் அல்லலுறுகிறுன். பலவித நோய்கள் மனக் கோளாறுல் விளைபவைகளே.

உணர்வுகள் உடலிலிருந்து புறப்படுகின்றன. அதன் மூல காரணமான எண்ணமோ மனத்துள் உதயமாகிறது. எண்ணம் உங்களுடையது. ஏனெனில் உங்கள் தலைக்குள் வேறு யாரும் புக முடியாது. ஆகவே அதனுள் புகும் எண்ணங்களைப் பற்றிக் கவனமாயிருக்க வேண்டும்; அந்த எண்ணங்களை நாம் மாற்றலாம்; நல்லவற்றைத் தேர்ந்தெடுக்கலாம்; உயர்ந்தவற்றை அனுமதிக்கலாம்.

தலை நமது தலை.

நாம் அனுமதித்தாலொழிய அதற்குள் யாரும் எந்த எண்ணமும், புக முடியாது என்பதை உணர்வோம்.

2

எனது நிறம் கறுப்பு!

நம்மை நாம் எப்படி மதிக்கிறோமோ அப்படித்தான் உலகம் நம்மை மதிக்கிறது. 'எனக்கு ஒன்றும் தெரியாது' என்று சொல்பவனை விஷயம் தெரியாதவனாக உலகம் எடுத்துக் கொள்கிறது. நமது குறைகளையும் நிறைகளையும் பற்றி நாம் சிந்தித்து ஒரு நிதானமான அபிப்பிராயம் கொண்டிருப்பது நல்லது.

சிலர் தங்கள் உடல் வளர்ச்சியைப் பற்றியும், உயரத்தைப் பற்றியும், நிறத்தைப் பற்றியும், பல் அமைப்பு பற்றியும், முக அழகு பற்றியும் குறைப் பட்டுக் கொண்டு, "கண் மட்டும் சற்றுப் பெரிதாக இருந்தால்...மூக்கு மட்டும் இப்படி இல்லாமலிருந்தால்" என்று கவலைப்படுகிறார்கள். தாங்கள் கறுப்பு நிறம் என்று பல பெண்களுக்குத் தங்கள் மீதே கோபம்.

அமெரிக்காவில் எனது நண்பர் ஒருவர் தன் மகளைப் பார்த்து, "அம்மா, நீ குள்ளமாயிருக்கிறாய்!" என்று பரிகாசம் செய்தார். அந்தப் புத்திசாலிப் பெண் உடனே, "அப்பா! அது உங்கள் தவறு. நீங்கள் குள்ளம். உங்கள் பாரம்பரியம் என்னுடையது!" என்று கூறிச் சிரித்தாள்.

சில குறைகளை நாம் திருத்திக் கொள்ளலாம்.

சில குறைகளைத் திருத்திக்கொள்ள முடியாது.

பற்களை வரிசையாக அமைக்க நல்ல பல் டாக்டர்கள் இருக்கிறார்கள். வளராத மார்பகங்களை வளர்க்க நல்ல மருந்துகள் இருக்கின்றன. மூக்கு நீளத்தைச் சரி செய்ய அறுவைச்சிகிச்சை இருக்கிறது. முகச் சுருக்கங்களை அகற்ற 'பிளாஸ்டிக் சர்ஜரி' என்ற அறுவை முறை கையாளப்படுகிறது. தலை வழுக்கையைப் போக்க, தலை முடியைப் பதிக்கும் முறை கையாளப்படுகிறது. இவையெல்லாம் திருத்திக் கொள்ளக்கூடிய குறைகள்.

நாம் உயரமாயில்லை என்றோ, எனது நிறம் கறுப்பு என்றோ, எனது கணையீரல் எனக்குப் பிடிக்கவில்லை என்றோ வருத்தப்படுவது, திருத்த முடியாத விஷயங்களை எண்ணி வீணே வருந்துவதாகும். திருத்த முடியாத விஷயங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும். 'அது அப்படித்தான். புலம்புவதால் பலனில்லை. அதை வைத்துக்கொண்டு மேலே என்ன செய்யலாம்?" என்று சிந்திக்க வேண்டும்.

> "திருத்தக்கூடியவற்றைத் திருத்தும் தைரியமும் திருத்த முடியாதவற்றை ஏற்றுக் கொள்ளும் மனப் பக்குவத்தையும்—இவ்விரண்டிற்கும் உள்ள வித்தியாசத்தைப் புரிந்து கொள்ளும் அறிவையும் எனக்கு அருள்!"

என்றொரு கருத்துமிக்க வாசகம் இருக்கிறது. இந்த வாசகத்தைப் பல அமெரிக்க வீடுகளில் கண்ணாடியிட்டு மாட்டியிருப்பதைக் கண்டிருக்கிறேன். நமது வீடுகளில் சினிமாப் படங்களை மாட்டுவவற்குப் பதில் நல்ல

வாசகங்களை எழுதி மாட்டி வைப்பது உள்ளத்திற்குத தெம்பையும் உற்சாகத்தையும் நம்பிக்கையையும் கொடுக்கும்.

நமது ஊர் நடிகர் நாகேஷை எடுத்துக் கொள்ளுங்கள். அவரை வெளியூரில் அழைத்துக் கொண்டு போய் இவர் பிரபல நடிகர் என்றால் அவரை மேலும் கீழும் பார்ப்பார்கள். நம்புவது கொஞ்சம் கஷ்டமாயிருக்கும். ஆனால் அவரை அறிந்த நாமோ அவரது முகததைப் பார்ப்பதில்லை. முகப் பல் வரிசையைக் கவனிப்பதில்லை. நிறத்தை, உருவத்தை, உயரத்தைக் கவனிப்பதில்லை. அவரைப் பார்க்கும்போது அவர் திறமையைக் காண்கிறோம், நடிப்பாற்றலைக் காண்கிறோம்.

முதல் தடவை பார்க்கும்போதுதான் ஒருவரது நீள அகல உயரங்களைக் கவனிக்கிறோம். நாளடைவில் அவர் குணநலன்தான் அவர் உருவமாக நம் நினைவில் தேங்குகிறது. ஆகவே பொதுவாக, திருத்த முடியாதவற்றை எண்ணி வருத்தப்படுவதை விட்டுவிட்டு நாம் நம் குணநலன்களைப் பற்றிச் சிந்திப்பது நல்லது. எந்த எண்ணங்கள் நம் மனத்தில் மலர்ந்து, செயலில் பிரதிபலித்து நமது குணநலன்களாக மாறுகிறதோ அதைப்பற்றி எண்ணுவது நல்லது.

> 'எங்கே தெரிகிறது கண்ணனின் கருமை நிறம்? அவன் குழலோசையை அல்லவா நான் கேட்கிறேன். எங்கே தெரிகிறது பாலசரஸ்வதியின் வயது? நாட்டியக் கற்பனைகளிலல்லவா நான் மிதக்கிறேன்.'

கல்கிக்குச் சற்றுக் கீச்சுக் குரல். அண்ணா நெப்போலியனைப்போல் சற்றுக் குள்ளம். ராதாகிருஷ்ணன்

ஈர்குச்சி போல் நெடுநெடுவென்ற உயரம். ஆனாலும் என்ன? எதை நாம் காண்கிறோம்? எண்ணிப் பாருங்கள்.

"படிப்பில் நான் புத்திசாலியல்ல" என்பதும், "கார் ஓட்ட எனக்குத் தெரியாது" என்பதும், "நான் இதுவரை பேண்ட் போட்டதில்லை" என்பதும் ஒரே மாதிரியான விஷயங்கள். இதுவரை நாம் செய்ய வில்லை; இதுவரை நாம் அத்துறைகளில் தீவிரமாகக் கவனம் செலுத்தவில்லை என்பதுதான் உண்மை. சிலர் சீக்கிரம் இவற்றைக் கற்றுக்கொண்டு விடலாம். சிலர் கற்றுக் கொள்ள நாளாகும். எடுத்துக் கொள்ளும் நேரம்தான் வித்தியாசப்படும். இவையெல்லாம் பயிற்சிகள். மனப்பயிற்சி, உடற்பயிற்சி. நாம் இவற்றில் மெனக்கெடவில்லை என்பதுதான் உண்மையே தவிர, நமக்குப் பூரணமாக வராது என்று நம்மை நம்ப வைத்துக் கொண்டிருப்பது சரியல்ல.

பல்வகைப் பயிற்சியும் பிறவியுடன் வருவதல்ல. ஆர்வத்தின் மூலம், பயிற்சி மூலம் ஒத்திகை மூலம் பெறப்படுவதுதான். நமது நடையுடை பாவனைகள் சரியில்லை என்றால் அதை நாம் மாற்றிக் கொள்ளலாம். இது பெரிய விஷயமல்ல. "என்னால் மாறமுடியாது வளர முடியாது" என்று கூறிக்கொண்டு இருக்கிறோமே அதுதான் அவலம்; அறியாமை.

இங்கிலாந்தில் குச்சிப் பூச்சிபோல் கையும் காலும் கொண்ட ஒரு பெண் 'டுவிகி' (Twiggy) பெரிய மாடலாய் ஆகிவிட்டார். அதே போல 'மோனா லிசா' படத்தில் என்ன அப்படி ஒரு மோகனப் புன்னகை இருக்கிறதோ, மோனாலிசாவின் படம் உலகின் தலைசிறந்த ஓவியமாகப் போற்றப்படுகிறது. நினைவில் கொள

ளுங்கள். இவையெல்லாம் சமுதாயம் காட்டும் அளவு கோல்கள். இந்த அளவுகோல்கள் மாறிக்கொண்டே இருக்கும். இதற்காக அந்த அளவில் நாம் இல்லையே என்று வருத்தப்பட்டுக் கொள்வது மதியீனம். நாம் நாமாக இருப்பதில் ஒரு தன்னிறைவையும் பெருமை யையும் காணவேண்டும்.

சிலர் சில விஷயங்களைத் தாங்களே சொல்லப் பயந்துகொண்டு என் மனைவி சொன்னாள் என்று கூறு வார்கள். எனது உறவினர் ஒருவர் எதையும், "அஞ்சு கம் சொன்னாள்" என்றுதான் ஆரம்பிப்பார். அஞ்சுகத் திற்கு அவர் பயப்பட வேண்டும். அதற்காக உலகம் பயந்துவிடுமா? என் மேலதிகாரி சொன்னார் என்ற சப்பைக்கட்டுடன் வரும் கணவரைக் கண்டிருக்கிறீர் களா? மேலதிகாரிக்குக் கணவன் பயப்பட வேண்டி யது உண்மையாயிருக்கலாம்; ஆனால் வீட்டு நிர்வாகி யான மனைவி அதை ஏன் வேத வாக்காய் எடுத்துக் கொள்ள வேண்டும்?

இப்படிப் பிறரைத் துணைக்கழைப்பவர்களின் அடிப்படைப் பிரச்னை, தங்கள் செயலில், தங்கள் எண்ணங்களில் நம்பிக்கை இல்லாததுதான். பிறரது காலில் சார்ந்து நிற்க முயல்வார்கள். இவர்கள், பிறரது ஆதரவுக்கு ஏங்கி நிற்பார்கள். இவர்கள் அடிப்படைக் கோளாறு தன்னைப்பற்றிய தாழ்வு மனப்பான் மைதான்.

தாழ்வு மனப்பான்மைக்கு மருந்து, நம்மை நாமே குறை நிறைகளுடன் ஏற்றுக்கொள்வது. திருந்த எளிதான முறை குறைகளுக்கெதிராக நல்ல மாற்று எண்ணங்களையும் பழக்க வழக்கங்களையும் கடைப் பிடிப்பது.

3

எண்ணங்களின் உருவகமே நம் கடவுள்கள்...

சதா நமது குறைகளை எண்ணி நமக்கு நாமே சவுக்கடி கொடுத்துக் கொள்வது நல்லதல்ல. மனத்தில் புண் ஏற்படும். வடு ஏற்படும். நம்மை நாமே தாழ்த்தி விடும் முயற்சியாகும் அது.

குறை கூறும் நபர்களையும், ஏன் குறை கூறு கிருர்கள் என்பதையும் பற்றிச் சிந்திததுப் பாருங்கள். ''சே! என்ன மழை, என்ன பேய்க் காற்று. சே! என்ன புழுக்கம்'' என்று அடிக்கடி குறைப்பட்டுக் கொள் கிறோம். நாம் குறைப்படுவதால் நிலைமை மாறி விடுவ தில்லை. அப்படி மாருதபோது, ''அது அப்படித்தான்!'' என்று சாதாரணமாக எடுத்துக் கொள்வதன் மூலம் அந்தப் பிற நிகழ்ச்சிகள் நம்மைப் பாதிப்பதைக குறைக்கலாம்.

இருக்கின்ற நிலைமைகளை ஏற்றுக்கொள்வது புத்தி சாலித்தனமானது. மாருக, கூக்குரலிடுவதன் மூலமும் ரகளை செய்வதன் மூலமும் நாம் எங்கும் போவதில்லை; எதையும் மாற்றுவதில்லை. 'குறை சொல்வது தன்னம் பிக்கை யில்லாதவர்களின் கடைசிப் புகலிடம்' என்று மனேதத்துவ நூலார் அபிப்பிராயப்படுகிருர்கள்.

அதுவும் நமது ஊரில் அரசியலிலே குறை சொல்வதே தொழிலாகப் போய்விட்டது. "குறை சொல்கிறீர்கள். சரிதான். மாற்று வழி சொல்லுங்கள்" என்றால் நமது பல அரசியல்வாதிகள் திகைத்துப் போவார்கள். குறை சொல்வதன் மூலம் ஏதோ நாம் குறையே இல்லாத மனிதன் போல ஒரு பிரமை ஏற்படுகிறது. குறை சொல்லப்படுபவனைவிட நாம் உயர்ந்தவன் என்ற எண்ணம் ஏற்படுகிறது. ஆனால் உள்ளத்திலோ அனுவசியமான கோபம், எரிச்சல் கலந்த மன உளைச்சல் இவை துவங்குகின்றன. இவை நல்லதல்ல.

அரசியலில் இவன் அவனைக் குறை கூறுவதும், அவன் இவனைக் குறை கூறுவதுமே தொழிலாக இருந்தால் மக்கள் முடிவில், "இரண்டு பேருமே சுத்த அயோக்கியர்கள்; உபயோகமில்லாதவர்கள்" என்ற முடிவுக்கு வருவார்கள்.

தனனிடமுள்ள குறைகளைப் பிறரிடம் கூறி அழ விரும்புபவன் பிறரது அனுதாபத்தை எதிர்பார்க்கிறான். "பாருங்கள்! எனது அப்பாவையும் அம்மாவையும் கொன்றுவிட்டேன்' என்று என்னைத் தூக்கில் போடுகிறார்களே. நான் யாருமற்ற அநாதையாகி விட்டேனே. இதைக் கேட்பாரில்லையா?" என்று ஒருவன் அழுதானும். அப்படித் தங்கள் குறைகளைச் சொல்லிப் பிறரது அனுதாபத்தில் வாழ முயல்கிறார்கள் பல அரசியல்வாதிகள்.

நாம் குறைப்படுவதும் நல்லதல்ல; பிறர் கூறும் குறைகளைக் கேட்கும் சுமைதாங்கியாய் இருப்பதும் மன வளர்ச்சிக்கு ஏற்றதல்ல.

குறை சொல்வதே தொழிலாய் வாரம் இருமுறை தன் அழுகுரல் மூட்டையை அவிழ்த்துவிட உங்களிடம் ஒரு நபர் வருகிறார் என்றால் என்ன நினைப்பீர்கள்? நம் குறையைக் கேட்டுப் பிறர் என்ன செய்யக்கூடும்? "வேண்டும் இந்தப் பயலுக்கு" என்று சந்தோஷப்படக் கூடும். "வேறு வேலை இல்லையா?" என்று கூறி ஓடி ஒளியக்கூடும்.

நமது குறைகளை, வருத்தங்களை அந்நியோன்ய மானவர்களுடன் பகிர்ந்து கொள்வது தவறல்ல. மனப்பாரத்தை அது குறைக்கும். நண்பர்களோ, மனை வியோ வழிகாட்டக்கூடும். ஓரோர் சமயத்தில் இப்படி நமது உணர்ச்சிகளைச் சமாதானப்படுத்தலாம்.

ஆனால் வாழ்க்கையில் நம்பிக்கையில்லாதவர்கள் எதிலும் குறை காணும் பிறவிகளாய் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் வாழ்வையும் பிறர் வாழ்வையும் நரக மாக அடிக்க முயல்பவர்கள். அவர்களுக்கு வாழ்வதில், வாழ்வைச் சுகமாக அனுபவிப்பதில் நம்பிக்கை இருப்ப தில்லை. சாவை நோக்கி நாள் எண்ணி, இவ்வுலகில் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் பிரகிருதிகள் அவர்கள்.

குறைப்படும் சொற்கள் இருக்கின்றனவே, அவற் றிற்கே மனத்தைக் கீழே தள்ளும் சக்தி உண்டு.

சோக பாத்திரங்களில் நடித்த ஒரு மலையாள நடிகை அடிக்கடி சோர்ந்து போவதாகக் கூறித் தனது 'ரோலை' மாற்றிக் கொண்டார் என்று சமீபத்தில் படித் தேன். 'நான் சோர்ந்து போனேன்' என்ற தலைப்பில் ஒரு பாடல் அமெரிக்காவில் ஒரு காலத்தில் பிரபலமாக இருந்தது. அதை அனுபவித்துப் பாடிய அந்தப்

பாடகியோ தினமும் பல மணி நேரம் களைத்து ஓய்ந்து போய்விடுவாராம், அதைப் பாடிய பின். பிறகு அதைக் கச்சேரியில் பாடுவதை நிறுத்தி விட்டார்.

பாடலிலும் பேச்சிலும் சொற்கள் இருக்கின்றன. சொற்கள் எதைக் குறிக்கின்றனவோ அந்த வலிமை அந்தச் சொற்களுக்கு உண்டு. அதனால்தான் சில வார்த்தைகளைச் சில மந்திரங்களாக்கி வைத்திருக் கிறோம்.

சில சொற்கள் உற்சாகத்தை ஏற்றும்; சில உற்சா கத்தைப் போக்கும். குறைப்படும் சொற்கள் மனித சக்தியை வடித்து விடுபவை. அதற்கு மாறாகச் சில ஸ்தோத்திரங்களை — சில அர்ச்சனைச் சொற்களைக் கவனித்தால், "எல்லாம் வல்லவனே போற்றி! எனக்குத் துணையிருப்பவனே போற்றி..." என்று அமைந் திருக்கும்.

வல்லமையை உச்சரிக்கும்போது வல்லமை பெறு கிறோம். அதுதான் தாத்பரியம்.

'ஆகவேதான் சில நல்ல சொற்களை வாசகங்களை ஒரு சிறு நோட்டில் எழுதி வைத்துக்கொண்டு அவற் றைப் பாராயணம் செய்வது நல்லது; பலன் தருவது. குமரகுருபர சுவாமிகள் எழுதிய சகல கலாவல்லி மாலை யைப் பாராயணம் செய்வது-படிப்பது-காரிய சாதனை களை நிறைவேற்றுகிறது என்று பரணீதரன் எழுதுகிறா ரென்றால் அதில் அர்த்தமிருக்கிறது.

எதை நாம் நினைக்கிறோமோ அதாக ஆகிறோம். எதை நாம் விரும்புகிறோமோ அதை நாம் அடை கிறோம். எந்த எண்ணங்கள் நம் மனத்தில் உலவு கிறதோ அந்த எண்ணங்கள் அதன் பிரதிபலனை நமக்குக் கொடுக்கின்றன. அந்த ரீதியில் இந்து

மதத்தைப் பற்றியும் நமது எண்ணற்ற கடவுள்களைப் பற்றியும் நான கல்லூரிகளில் பேசுவதுண்டு.

எண்ணற்ற கடவுள்கள் ஏன்? நமது நிலையினுக் கேற்ப தேவைகள் ஏற்படுகின்றன. போருக்குச் செல்ப வனுக்கு வீரம் தேவைப்படுகிறது; ஆகவே வீரத்திற் கென ஒரு முருகன். படிக்கும் மாணவனுக்குக் கல்வி அறிவு தேவை. 'கல்வியறிவு எனக்குப் பூரணமாகக் கிடைக்கும' என்ற நினைவுகளை எழுப்பக் கலைமகளைக் கடவுளாகத் தொழுகிறோம்.

பொருளில்லாதவனுக்குத் தேவைப்படுவது செல் வம். அந்தச் செல்வ நினைவுகளை லட்சுமி என்ற தெய் வத்தின் பெயரால் நம் மனத்தில் எழுப்பிக் கொள் கிறோம். மனித தேவைக்கேற்ப மாரியம்மனிலிருந்து சனிஸ்வரன் வரை எண்ணங்களைத் தெய்வமாக வழிபடுகிறோம்.

நமக்குத் தேவைப்படும் எண்ணங்களின் புறவடி வம் நம் கடவுள்கள். நம் முன்னோர்கள் ஒன்றும் முட்டாள்களல்ல. பலவற்றையும் சிந்தித்துத் தேர்ந்து ஒரு வழிமுறை கண்டுபிடித்திருக்கிறார்கள்.

எண்ணங்களை, எண்ணங்களாகப் பலரால் அறிவு பூர்வமாகக் கொண்டுவர இயலாது. ஆனால் அவற்றை உருவகப்படுத்தி உருவ வடிவில் கொண்டு வருவது எளிதான செயலாகும்.

வலிமைக்கு மார்க்கம் வலிமை நிறைந்த எண்ணங் களை மனத்தில் நிறைப்பது. செல்வத்திற்கு மார்க்கம் அது சம்பந்தமான எண்ணங்களில் மனத்தை ஊறப் போடுவது. அதுவல்லாமல் அந்தத் தெய்வங்களை எண்ணும்போது நம் மனத்தில் அதே எண்ணங்கள் தான் உருவாகின்றன.

4

தன்னை மதித்து வாழ்வோம்

நம்மில் பலரிடம் நம்மைப் பற்றிய தாழ்வு மனப்பான்மை குடிகொண்டிருக்கிறது. இந்தத் தாழ்வு மனப்பான்மை பலவிதங்களில் நாம் பேசும் பேச்சுக்கள் மூலமாகவும் செயல் மூலமாகவும் வெளிப்படுகிறது.

மாணவன் ஒருவன் கடைசிப் பெஞ்சை நோக்கிச் சென்று அமர்கிறான். எல்லாரும் பேசும் விஷயத்தைப் பற்றி விவாதித்தால்கூட ஒரு மனிதன், "எனக்கு அதிகம் தெரியாது" என்று ஒரு முன்னுரை போடுகிறான். அப்படியே ஏதாவது அவன் வெற்றி பெற்றால் கூட, "ஏதோ அதிர்ஷ்டம்!" என்று அடக்கமாகக் கூறுகிறான்; தன்னைத்தானே சமாதானம் செய்து கொள்கிறான். இரவு கண் விழித்துப் படித்து முதல் மார்க் வாங்கினால்கூட, "எல்லாம் சுதேசி ஓட்டலின் மகிமை" என்கிறான். பெருமை அவனுக்குச சேர வேண்டிய இடத்தில்கூட, "எல்லாம் அவர் தந்த—மேலதிகாரி தந்த—பிச்சை" என்கிறான். தன்னைத் தாழ்த்திக் கொள்வதன் மூலம்—ஒரு போலியான அடக்கத்தின் மூலம்—நாம் உண்மை நிலையை மறுக்கிறோம். அது மட்டுமல்ல, நம் மனத்திற்குத் தேவைப்படும் ஓர் ஊக்கத்தை—ஒரு நம்பிக்கையைக் கொடுக்கத் தவறிவிடுகிறோம்.

ஒரு ஹோட்டலுக்கு, கோயிலுக்கு, ஒரு பொது இடத்திற்குப் போனுல், என்னவோ எல்லோரும் தன்னையே பார்ப்பதுபோல் உணர்கிருன். அவன் கால்கள் பின்னுக்கு இழுக்கின்றன. அவரவர்களுக்கு எத்தனையோ வேலை; நினைவுகள். யாரும் இவன் வருவதை, நடப்பதைக் கவனிப்பதில்லை. எனினும் இவனுக்கு இப்படிப்பட்ட ஒரு நினைவு. அதில் ஏற்படும் பயம், தன்னைப் பற்றிய ஒரு கேவலமான அபிப்பிரா யத்தில் விளைவது.

ஆங்கிலத்தில், "உங்களது நல்ல நிலையினை எண்ணிப் பாருங்கள்; இன்றிருக்கும் நிலைக்கு நன்றி செலுத்துங்கள்" (Ccunt your Blessings) என்ெருரு வாசகம் இருக்கிறது. பலர் பொதுவாக நமது நல்ல குணங்களை, வாழ்வில் இருக்கும் நல்ல நிலையினை எண்ணிப் பார்ப்பதில்லை. எண்ணிப் பார்ப்பதால் கிடைக்கும் மகிழ்வை, மன நிறைவைத் தவறவிட்டு விடுகிருர்கள். நாம் நம்மை ரசிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். சமயத்தில் நம்மைத் தட்டிக் கொடுத்துப் பாராட்டி மகிழக் கற்றுக்கொள்ள வேண்டும்.

தாழ்வு மனப்பான்மைக்கு ஒரு காரணம் நம்மிட முள்ள அளவுகோல். ஒரு நல்ல மனிதன் இவ்வளவு உயரமும், இவரைப்போல் புகழும், இவரைப்போல பேச்சு வன்மையும், இன்னுரைப்போல பணவசதியும் இருக்கவேண்டும் என்று தன்னைத்தானே பிறருடன் ஒடபிட்டுப் பார்த்து சதா அளந்து கொண்டிருக்கிருன். யாரிடமாவது நீங்கள் செய்த காரியத்தைப்பற்றிக் கூறினீர்களானுல், அவர்கள் சட்டென்று தான் ஏன் அதைச் செய்யவில்லை என்ருே, செய்ய முடியவில்லை

என்றோ, சமாதானம் கூறுவதைக் கண்டிருக்கிறீர்களா? அவர்கள் உடனே தங்களை நம்முடன் மனத்தில் ஒப்பிடத் துவங்குகிறார்கள்.

“அடுத்த வீட்டுக்காரன் ரேடியோ, டெலிவிஷன் வைத்திருந்தால் நாம் அதில் தோற்றுவிடக்கூடாது. அடுத்த வீட்டுக்காரன் ஊட்டி போனாலோ, நமக்கும் அங்கோர் வீடு வேண்டும். எதிர்வீட்டுப் பெண் வாங்கியிருக்கும் புடைவைபோல், நகைபோல், பாத்திரம்போல் நாமும் வாங்கவேண்டும்” என்று பலர் சதா பிறருடன் ஒப்பிட்டுக் கொண்டு துன்பப்படுகிறார்கள். சொல்லப் போனால் பிறர் இவர்கள் வாழ்க்கையை ஆட்டுவிக்கிறார்கள். நாம் நமது வாழ்க்கையை வாழவேண்டும்.

ஒரு மரத்தில் ஒரு பறவை உட்கார்ந்திருந்தால் அதற்காக நாமும் ஏறி அங்கே உட்கார்ந்து கொள்வதில்லை. அது போல நாம் பிறர் பெருமைகளையும் சாதனைகளையும் பார்த்து ரசிக்க, மகிழ வேண்டுமேயல்லாது அவர்களது அளவுகோல்களுக்கும் லட்சியங்களுக்கும் ஏற்ப வாழ முயலக்கூடாது.

எனது நண்பர் ஒருவர் வீட்டுக்குப் போனால்,போனவுடன், அவர் தன் அரசியல் கருத்துக்களைக் கூறுவார். பின், சினிமாவில் எந்த டைரக்டர், நடிகை சிறந்தவர் என்று அலசுவார். பின், சமுதாயத்தின் குறைபாடுகள் என்ன என்று கோபப்படுவார். பின், தன் மேலதிகாரி எத்தனை பெரிய மடையன் என்று சம்பவங்களை விவரிப்பார். எல்லாவற்றிலும் நமது உடன்பாட்டை எதிர்பார்ப்பார். நமது உடன்பாடு இல்லை என்றால் அவர் கோபப்படுவார். ரொம்ப கோபம் வந்தால், நம்மை சுத்த அறிவில்லாத—விஷயம் தெரியாத மனிதர் என்று

நம்மையே நிரூபித்து வீட்டுக்கு அனுப்புவார். இத்தகையோரை நீங்கள் கண்டிருக்கக்கூடும்.

தனது நம்பிக்கைகளில் ஏற்படும் சந்தேகமே பிறரது உடன்பாட்டை எதிர்நோக்கச் செய்கிறது. இவர்கள் தன்னம்பிக்கையில்லாதவர்கள். சுய மதிப் பற்றவர்கள். நாம், நம்மிடம் ஒரு 5 அடி 5 அங்குல அளவுகோலை வைத்துக்கொண்டு எல்லோரும் இப்படித் தான் இருக்க வேண்டும் என்று எடைபோடுவது மதியீனம். நாம் சுப நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தால் அவர் அவர் இயல்புக்கேற்ப பேச, நடந்து கொள்ள நாம் அனுமதிப்போம். பிறரை, அவர்களது இயல்பான குணங்களுக்காக என்று நாம் அவர்களைத் தனியாக விடுகிறோமோ, மதிக்கிறோமோ, அவர்கள் சொந்த அபிப்பிராயங்களைக் கொள்ள அவர்களுக்குப் பூரண உரிமை இருக்கிறது என்று ஏற்றுக் கொள் கிறோமோ அப்போதுதான் நமக்கு ஒரு வளர்ந்த மனோபாவம் ஏற்படுகிறது.

எல்லோரும் நம்மைப் போலவே இருந்தால் இவ் வுலகம் எப்படி இருக்கும் என்பதை ஒருகணம் யோசித் துப் பாருங்கள். ஒரே விதமான வீடு, ஒரே விதமான உடை, ஒரே மாதிரியான உணவு என்றால் உலகம் உப்புசப்பற்றிருக்கும். நாம் பிறரை அவர்கள் போக்கில் விடக் கற்றுக்கொள்ளவேண்டும். வளர்ந்த பிள்ளைகளை யும், மனைவியையும் அவர்களது குணங்களுக்காக தனித் தன்மைக்காக என்று அவர்கள் போக்கில் விடு கிறோமோ அப்போதுதான் மனம் நமது உண்மை நிலைகளை அனுசரித்து ஒழுகுகிறது. இல்லாவிட்டால் மனத்தில் சுமையும் வலியும் ஏறிவிடுகிறது.

நாம் நம் வீட்டில் வசிப்பது போல, பிறரை அவர் கள் எண்ண வீட்டில் வாழ, குண வீட்டில் நடந்து

கொள்ள நாம் அனுமதிக்க வேண்டும். அதே போல் பிறர் நம்மை நெருக்காமலிருக்கவும் நாம் எல்லை வகுத்துக் கொள்ள வேண்டும்.

நாம் வாழ்கிறோம். அதற்காக நாம் மன்னிப்புக் கேட்க வேண்டியதில்லை. தலைகுனிந்து நடக்க வேண்டியதில்லை. தலை நிமிர்ந்து வாழுமுன் தலை நிமிர்ந்து நினைக்க முதலில் நாம் பழகவேண்டும். அதற்குத் தன்னைப் பற்றிய ஒரு நல்ல மதிப்பு தேவை. நாம் செய்யும் காரியங்களுக்கெல்லாம், அவை பிறரது உரிமைகளைப் பாதிக்காதவரை, நாம் பிறருக்கு விளககமும் சமாதானமும் கூற வேண்டியதில்லை.

நம்மைப் பற்றிய சுய மதிப்பீடு, 'நல்லவன் திறமைசாலி' என்ற எண்ணம், நம் உள்ளத்திற்கும் உடலுக்கும், நம் வாழ்க்கைக்கும் நல்லது.

வெளியே கிளம்பும்போது ஒரு நல்ல சட்டையைப் போட்டுக் கொள்ளுங்கள்; குளித்துவிட்டுக் கிளம்பிப் பாருங்கள். கொஞ்சம் மல்லிகையை வாங்கி பையிலோ, தலையிலோ வைத்துக் கொண்டு புறப்படுங்கள். நம் மனத்திலே ஒரு மகிழ்வும் நிறைவும் உலவுவதைக் காணலாம். சூழ்நிலையே மணம் வீசத் துவங்கும். உலகம் உங்களை வரவேற்கத் தயாராயிருக்கிறது.

5

பிறர் அபிப்பிராயத்திற்காக வாழக் கூடாது

மக்கள் பேசுகின்ற விதத்தைக் கூர்ந்து கவனித்தால், எப்படிப் பலர் பிறர் ஆமோதிப்பதற்காக, அங்கீகாரத்திற்காக ஏங்குகிறார்கள் என்பது தெரியவரும். சிலர் பிறர் முகத்தைப் பார்த்துக்கொண்டு தங்கள் அபிப்பிராயத்தைக் கூறுவார்கள். சிலர் கவனத்துடன், பிறர் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்பதைக் கணித்து அதன்படி பேசுவார்கள். கேட்பவர்கள் மாறுபட்ட கருத்தைத் தெரிவித்தால், சொல்பவர்கள் உடனே தங்கள் கூற்றைப் பிறருக்கேற்ப மாற்றிக் கொள்வார்கள்.

பிறர் நாம் சொல்வதை ஆமோதிக்கவேண்டும்; பிறர் நாம் சொல்வதை ஏற்றுக்கொள்ளவேண்டும், பாராட்டவேண்டும் என்பதில் துவங்கும் ஒரு மனோபாவம், சில சமயம் மனிதனைத் தனது தனித்தன்மையை இழக்கும் பரிதாப நிலைக்கு எடுத்துச் செல்கிறது.

பாராட்டை—ஒரு நல்ல சொல்லை—எதிர்பார்ப்பது தவறல்ல. ஆனால் அதற்காக ஏங்குவது, எதிர்பார்ப்பது, அதை அடிப்படைத் தேவையாக்கிக் கொள்வது ஒரு வளர்ந்த மனப் பண்பல்ல.

"நீங்கள் நன்ருக எழுதுகிறீர்கள். நீங்கள் நன்ருக நடனம் ஆடுகிறீர்கள். நீங்கள் நன்ருகப் பேசுகிறீர்கள்" என்று யாராவது பாராட்டும்போது கேட்க இனிமையாக இருக்கிறது. நமக்கேற்படும் திருப்தியில் ஒரு வளர்ச்சி இருக்கிறது. அதை எல்லாம் விட்டுவிட்டு நிச்சலனமான துறவித்தன்மையை நாம் மேற்கொள்ள வேண்டும் என்று கூறவில்லை.

ஆனால் பிறர் ஆமோதிப்பதையும் அங்கீகாரத்தையும் எதிர்பார்த்து அது கிடைக்காதபோது, மனம் இடிந்து ஒடுங்கி, நாம் சிறுத்துப்போகும் ஒரு மனோபாவம் இருக்கிறதே அதுதான் தவறு. இதன் மூலம் நமது வளர்ச்சி முடக்கப்படுகிறது. சிறகடித்து பறக்க வேண்டிய நமது எண்ணங்கள் இத்தகைய மனோபாவத்தினுல் சிறகொடிந்து கீழே விழுகின்றன. இதன் மூலம் பிறர் நம்மை வெகு எளிதில் ஆட்டிவைக்க அனுமதிக்கிறேம். இதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். அடுத்த முறை அப்படியொரு நிகழ்ச்சி நம் வாழ்வில் நிகழும் போது அதுபற்றிக் கவனமாயிருக்க வேண்டும்.

எனது நண்பர், பிரபல நிர்வாகி ஒருவரை சமீபத்தில் கண்டேன். வலுவில் சிலர் வந்து பாராட்டிய போதும் மெதுவாகப் புன்னகைத்துப் பேச்சை வேறு விஷயங்களுக்கு மாற்றினுர் அவர். அவருக்கு அவர் செய்யும் காரியத்தில்—தன்பேரில்—நம்பிக்கை இருக்கிறது. அந்த தனித்தன்மை—சுயமதிப்புடன் கூடிய தோற்றமும் செயலும்—அவரைத் தனித்துத் தூக்கிக் காட்டுகிறது. அது பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டிய மனப்பழக்கம்.

அதேபோல் எல்லோரிடமிருந்தும், தான் செய்கின்ற ஒவ்வொரு காரியத்திற்கும் பாராட்டைச் சிலர்

எதிர்பார்ப்பார்கள். அது உலக இயல்பை உணராத தன்மையாகும். உதாரணமாக, மகாத்மா காந்தி ஒரு மகத்தான மனிதர். எனினும் அவரை வெறுத்த ஒரு சிறுபான்மைக் கூட்டமும் இருக்கத்தான் செய்தது. உலகிலே எல்லோரையும் திருப்திப்படுத்துவதென்பது யாராலும் முடியாது. தேர்ந்தெடுக்கப்படும் தலைவர்கள் கூட சில சமயம் பாதிக்குமேல் மக்களது நல்ல அபிப்பிராயத்தைப் பெற்றிருந்தால் பெரிய விஷயம். பல சமயம் தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு அதுகூடக் கிடைப்பதில்லை.

இப்படிப் பிறரது நல்ல அபிப்பிராயத்திற்காக எதிர்பார்ப்பது—ஏங்குவது—அப்படி ஒரு தேவையைச் சுமப்பது—நிம்மதியின்மையையும் மன உளைச்சலையுமே தரும்.

பிறர் அபிப்பிராயங்களை எண்ணி அதற்காகக் காரியங்கள் செய்பவர்கள்—அதற்காகக் கவலைப்படுபவர்கள்—தனித்தன்மை இல்லாதவர்கள். தன்னை ஆட்டுவிக்கும் சூத்திரக் கயிற்றைப் பிறர் கையில் ஒப்படைப்பவர்கள் இவர்கள். பிறர் அபிப்பிராயங்களைப்பற்றி லட்சியம் செய்யாமல், தான் நம்பியதைக் கருத்தில் கொண்டு போராடியவர்களே வாழ்க்கையில் வெற்றிவாகை சூடியிருக்கிறார்கள். பிறரது அபிப்பிராயத்தை எதிர்நோக்கி வாழ்வது முட்டாள்தனம் மட்டுமல்ல; நம் சிண்டைப் பிறர் கையில் கொடுத்துவிடுவதற்குச் சமமாகும். சில சமயம் பிறரது அபிப்பிராயங்களை எதிர்த்துப் போராட நேரிடும். அதற்கு வேண்டிய துணிச்சல் உள்ளவனே, தன்னம்பிக்கை உள்ளவனே தலைவனாகிறான்.

நம் நாட்டில் எத்தனையோ மனிதர்கள்—கட்சிப் பிரமுகர்கள்—தாய்க்கட்சியிலிருந்து பிரிகிறார்கள். பின்

நமோதில்லாமல் போகிறார்கள். ஆனால் ஒரு சிலரோ யாரை எதிர்த்து வெளியே வருகிறோம் என்பது பற்றி லட்சியமில்லாமல் வெளியே வருகிறார்கள். தொடர்ந்து போராடுகிறார்கள். வெற்றியடைகிறார்கள். அன்று பெரியாரை எதிர்த்து அண்ணா வெளியே வந்து தனிக் கட்சி துவங்கினார். அத்தகையோர் தன்னம்பிக்கை கொண்டவர்கள். பிறர் அபிப்பிராயங்களை நம்பி வாழ்பவர்களல்ல.

அன்று குறை சொன்னவர்கள் இன்றும் அதே இடத்தில்தான் குந்தியிருக்கிறார்கள். ஆனால் தன்னம் பிக்கையுடன் எதிர்த்துப் போராடியவர்களோ லட்சியப் பாதையில் வெகு தூரம் போய்விட்டார்கள். தான் கொண்ட எண்ணங்களுக்கேற்ப உலகைத் தங்கள் பக்கம் அவர்கள் வளைய வைக்கிறாகள்; அவர்கள் தலைவர்கள்.

பிறர் ஆமோதிப்பை நம்பி வாழ்வது—எதிர்நோக்கி நிற்பது—தனிமனித வாழ்வில் மட்டுமல்ல,சோக முடிவு களுக்குக் காரணம். பெரிய பெரிய அரசியல் தலை வர்கள் வாழ்விலும் இது சரிவைத் தந்திருக்கிறது. மனிதர்களும் தலைவர்களும் பிறர் ஆமோதிப்பை எதிர் பார்க்கிறார்கள் என்பதை உணர்ந்த ஒரு காக்காய் கூட்டம், தலைவன் எது செய்தாலும் சரி என்று தலை யாட்டுகிறது. இத்தகைய ஒரு கும்பலை வளர்த்துக் கொண்டதன் மூலம், நாட்டின் உண்மை நிலை அறிய முடியாமல் போய், தோல்வியடைய நேரிட்டது என இந்திராகாந்தியைப்பற்றி அரசியல் வல்லுநர்கள் அபிப் பிராயப்படுகிறார்கள். பிறர் ஆமோதிப்பை நம்பி வாழ்வதும், ஆமோதிப்புத் தரும் கும்பலை நம்பி வாழ்வதும், வாழ்வைக் குட்டிச்சுவராக்கும் குறுக்கு வழிகள்.

பிறர் ஆமோதிப்பை எதிர்பார்ப்பவர்கள், 'பிற ருக்கு என்ன சொன்னால் இனிக்கும்' என்று யோசிக் கிறார்களே ஒழிய அவர்களுக்கென்று ஒரு கொள்கை ஏதும் கிடையாது. பல விற்பனையாளர்களிடம் இந்தப் போக்கினைக் காணலாம். "இந்த எருமை மாடுகளே சுத்த மோசம். சேற்றிலும் சகதியிலும் உழல்கின்றன" என்றால், "ஆமாம்! சுத்த மோசம்!" என்பார்கள். அடுத்த வாய் திறப்பில், "நமது நாட்டுக்கு மிக ஏற்ற பால் தரும் பிராணி இந்த எருமை மாடுதான். இதற்கு ஈடு இணை கிடையாது!" என்று சொன்னால், அவர்கள் "ஆகா! எருமை மாடு! நான்கூட நாலு வாங்கிக் கட்டி வைத்திருக்கிறேன். கழுத்தில் கட்டிக்கொள்ளலாமா எனப் பார்க்கிறேன்! என்ன பிராணி போங்கள்!" என்பார்கள்.

இதைப்போலவே பல அரசியல்வாதிகளும், அது வும் தேர்தல் சமயத்தில் எதெது எங்கு எடுபடுமோ, அதற்கேற்ப பேசும், நடந்துகொள்ளும் அரசியல் பச்சோந்திகள் அவர்கள்.

பிறர் கூறும் அபிப்பிராயத்திற்கு மாறுபட்டு நாம் கருத்து தெரிவித்தால் என்ன ஆகிவிடும்? எதிரி கோபப் படக்கூடும், நம்மைத் திட்டக்கூடும். நம் அறிவையும் சிந்திக்கும் திறனையும் பற்றிச் சந்தேகப்படும்படி எதிரி கேவலமாகப் பேசக்கூடும்.

நம்மைப் பற்றி நாமே ஓர் எடை போட்டு வைத்துக் கொண்டிருக்கும்போது பிறரது அபிப்பிராயம் நம்மிடம் ஒரு சலனத்தையும் ஏற்படுத்தாது. பிறர் என்ன சொல் வார்களோ எனப் பயப்படும்போது நமது தனித் தன்மையை, சுய மதிப்பை அடகு வைக்கிறோம்.

6

பிறர் அதிருப்தியைக் கண்டு அச்சம் கொள்வதா?

நம்மைப் பற்றிய நம் அபிப்ராயத்தைவிட, நம்மைப்பற்றிய பிறர் அபிப்பிராயம் பெரிது என்று எப்போது கருதுகிறோமோ அன்றே நம்மை நாம் மனத்தளவில் தாழ்த்திக் கொள்ளத் துவங்கிவிட்டோம். பிறர் கூறும் பாராட்டையும், புகழையும் ஆமோதிப்பையும் எதிர்பார்ப்பது பிறரால் ஆட்டுவிக்கப்படும் பாதையின் முதல் படி. நம்மைப்பற்றி நமக்கே சந்தேகம் இருக்கிறது. தெளிவில்லை. பயம் உண்டு. இந்நிலையில் பிறர் ஆமோதிப்பிற்காக மனிதன் ஏங்குகிறான். "நீயும் வாழலாம்" என்று பிறர் கூறிவிடும்போது குச்சு நாய்க்குட்டிபோல மனிதன் மகிழ்ந்து போகிறான்; வாலைக் குழைத்துக்கொண்டு வளைய வருகிறான்.

தனி மனித வாழ்வில் மட்டுமல்ல இத்தகைய ஏற்பாடு. பொது வாழ்விலும், சமுதாயம் தனது அங்கீகாரங்களையும், ஆமோதிப்பையும் தருவதன் மூலம் பல பழக்கவழக்கங்களை நம்மிடையே நிலைநாட்டிவிடுகிறது. உதாரணமாக, ஒரு பெண் கணுக்காலுக்குக் கீழ் போட்டிருக்கும் காலணிகளை மறைத்துக்கொண்டு தெருவைக் கூட்டும் வகையில் புடைவை அணிந்து

செல்கிறாள். மற்றோர் பெண் கணுக்காலுக்கு மேல் புடைவை அணிந்து செல்கிறாள். தழையத் தழையப் புடைவை கட்டியிருப்பவளைப் பார்த்து சமுதாயம், "இவள் குடும்பப் பாங்கானவள். பதவிசான பெண்" என்று தன் ஆமோதிப்பைத் தெரிவிப்பதன் மூலம், சமுதாயத்தில் ஒரு பழக்கம் நிலை பெறுகிறது எது நல்லது, எது சரி என்பதில் யாரும் கருத்துச் செலுத்து வதில்லை. பிறர் ஏதாவது கூறி விடுவார்களோ என்ற அச்சம் பல பழக்கங்களை நிர்ணயிக்கிறது. சமுதாயத் தின் ஆமோதிப்பு ஒரு நாட்டின் கலாசாரமாக உரு வெடுக்கிறது.

நாம் குழந்தை வளர்க்கும் முறையில், தொட்டிலி லிருந்து சுடுகாடு முற்றும், பெரியவர்களது ஆமோ திப்பை எதிர்நோக்கி வாழும் ஒரு முறையைக் கையாளு கிறோம். யாராவது ஏதாவது கொடுத்தால் வாங்கிக் கொள்ளலாமா கூடாதா என்று அம்மாவின் முகத்தை எதிர்பார்க்கும் குழந்தை, அடுத்தவீட்டுப் பையனுடனோ பெண்ணுடனோ விளையாடப் போக அனுமதியை எதிர்நோக்கும் குழந்தை, பள்ளியில் ஒன்றுக்குப் போகக்கூட ஆசிரியர் அனுமதி கோரும் குழந்தை என்று இப்படிப் பலவாறாக! குழந்தையிடம் மறைமுக மாகக் கூறுகிறோம், "நீ உன் யோசனைகளை, முடிவு களை, தேவைகளை நம்பாதே. எதற்கும பெரியவர் களைக் கேள்" என. குழந்தையின் வாழ்க்கையை நெறிப்படுத்துகிறோம் என்ற நினைப்பில் அதன் சுய நம்பிக்கையின் மண்டை யிலடித்துச் சார்ந்து நிற்கும் ஒரு சமுதாயத்தை நாம் உருவாக்கிக் கொண்டிருக் கிறோமோ என்று நான் சிந்திப்பதுண்டு. இதன் விளை வாக எதற்கும் அதிகாரிகளையும், அரசாங்கத்தையும், பிறர் உதவியையும் சார்ந்து நிற்கும் ஒரு சமுதாயத்தை

உருவாக்கியிருக்கிறோமா, இல்லையா என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

அதே போலத்தான் பல ஆசிரியர்களும், வழக்க மான, கேட்டுக் கேட்டு போரடித்த ஒரு ஹாஸ்யத்தை வகுப்பில் உதிர்த்துவிட்டு முன் பெஞ்சு மாணவர்களின் முகத்தைப் பார்க்கும் ஒரு கூட்டம் மாணவர்களின் ஆமோதிப்பை நோக்குகிறது.

ஓர் அலுவலகத்தில் வழக்கம்போல மேலதிகாரி ஒரு வழக்கமான ஜோக்கை எடுத்துவிட்டாராம். ஆனால் ஒருவர் மட்டும் சிரிக்கவில்லை. மேலதிகாரி கேட்டார். "என்ன உனக்கு வந்தது? ஏன் நீ சிரிக்கவில்லை?" என்று. "நான் இனி சிரிக்க வேண்டியதில்லை. நான் நாளையிலிருந்து கம்பெனியிலிருந்து ராஜிநாமா செய் கிறேன்" என்றாராம் அவர். 'ஆமோதிப்பு' எத்தனை விதங்களில் செயல்படுகிறது என்பதைக் கவனி யுங்கள்.

ஒரு மனிதன் மதத்திலோ, அரசியலிலோ அல்லது எந்தத் துறையிலோ தலைவனாகிவிட்டால் அவன் எதிர்ப்பைச் சமாளிக்கவேண்டியிருக்கிறது. அதிருப்தி யையும், கண்டனங்களையும் சமாளிக்க வேண்டியிருக் கிறது. வேண்டுமென்றே ஆமோதிப்பைத் தர மறுப் பார்கள் எதிர்க்கட்சிக்காரர்கள். அப்போது அவர்கள் என்ன எண்ண வேண்டும்? "ஆகா! இது என்னைத் தேர்ந்தெடுக்காத அந்த 49 சதம்! அவர்கள் அப்படித் தான்" என்று எடுத்துக் கொள்ளவேண்டும். தனி மனித வாழ்விலும் அர்த்தமில்லாத கண்டனங்களும், நியாயமில்லாத அதிருப்தியும் நம்மைச் சீண்டிவிட முயலும் சுடுசொற்களும் வரும்போது, "இது அந்த 49 சதம். என்னைத் தேர்ந்தெடுக்காத கூட்டம்" என்று

நாம் மனத்திற்குள் புன்னகை புரியக் கற்றுக்கொள்ள வேண்டும். "அவர்கள் என் கொள்கைகளைத் தாக்கு கிறார்களே ஒழிய என்னைத் தாக்கவில்லை" என்று நாம் பிரித்து உணரக் கற்றுக் கொள்ள வேண்டும். இல்லா விட்டால் நாம் அதைச் சொந்த முறையில் எடுத்துக் கொண்டு உணர்ச்சிகளுக்கு ஆளாக நேரிடும். முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் ஒரு முறை கூறினார்: "என்மீது சாட்டப்படும் குற்றங்களுக்கு விடையளிப்பது ஒருபுறமிருக்கட்டும்; நான் அவற் றைப் படிக்கத் துவங்கினாலே நான் வேறு வேலை எதையும் செய்ய முடியாது.

நானறிந்த வரையில், என்னால் முடிந்த வரையில் என் காரியத்தைச் சிறப்பாகச் செய்யவே முயல்கிறேன். அதன் முடிவுகள், நான் செய்தவை சரி என்று நிரூபிக்குமானால் எனக்கெதிராகத் தொடுக்கப்படும் கணைகள் அர்த்தமில்லாதவையாகப் போகும். அந்த முடிவுகள் நான் செய்த காரியங்கள் தவறு என்று நிரூபிக்குமானால், பத்து தேவதைகள் வந்து எனக்குப் பக்கபலமாக நின்றால்கூட எனக்கு உதவி செய்யாது."

அரசாங்கத்தில் செயல் புரியும் வாய்ப்பில் அமைச் சர்களாக அமர்ந்திருப்போர், ஆபிரகாம் லிங்கன் கூற்றை எழுதி வைத்துக் கொள்வது நல்லது. ஏனெனில் நன்மையும், செயலும், நல்ல முடிவுகளும் தான் அவர்கள் சாதனையை உயர்த்துமே தவிர, எதிர்க் கட்சியின் சீண்டிவிடும் கண்டனமல்ல என்பதை நினைவில் கொள்ளவேண்டும். சட்டமன்றத்தை வெறும் வாய்ச்சிலம்ப மேடையாக்குவதை இதன் மூலம் தவிர்க் கலாம்.

பிறர் ஆமோதிப்பையும், அதிருப்தியையும் கண்டு அஞ்சும் மக்களுக்காக மன நூலார் கூறும் யோசனைகள்:

பிறர் அபிப்பிராயத்திற்காக உங்கள் கொள்கைகளை மாற்றிக்கொண்டே இருக்காதீர்கள். பிறர் நம் அபிப்பிராயத்தை ஏற்கவில்லை என்பதற்காக இடிந்து போகாதீர்கள்.

பிறர் கேட்கிறார்கள் என்பதற்காக ஒரு காரியம் செய்துவிட்டுப் பின்னால் அவர்கள் நம்மை இப்படிச் செய்ய வைத்தார்களே என வருத்தப்படாதீர்கள். முதலிலேயே முடியாது என தைரியமாகக் கூறுங்கள்.

எதற்கும் மன்னிப்புக் கேட்கும் மனோபாவம் கொள்ளாதீர்கள். மற்ற எல்லா ஜீவராசிகளைப்போல் உங்களுக்கு இவ்வுலகில் வாழும் உரிமை கொடுக்கப் பட்டிருக்கிறது.

எதற்கும் உங்களையே நொந்துகொண்டு, தன் நிலைக்குப் பரிதாபப்பட்டு சித்ரவதை செய்து கொள்ளா தீர்கள். பிறர் உங்களைக் குழந்தையாகப் பாவித்து உச்சி மோந்து, சீராட்டி, பாராட்டி, தாலாட்டும் நிலையில் உங்களைப் பிறரிடம் பறிகொடுக்காதீர்கள்.

இவை எல்லாம் எந்தக் குறைபாடுகளை நம்மிடம் காட்டுகின்றன? நம்மை நமக்கே பிடிக்கவில்லை என்பதை; நம்மீது நமக்கே ஏராள வெறுப்பு என்பதை; நமக்கு இருக்கும் பொறுப்பைத் தட்டிக் கழிக்க மேற் கண்ட வழிகளில் நாம் தந்திரங்களைக் கையாளுகிறோம் என்பதை; மாறுபட்ட நிலையைச் சமாளிக்க முடியாத பயமும் பலவீனமும் நம்மிடம் இருக்கிறது என்பதை.

7

அதிருப்தியைச் சமாளிக்கும் வழிகள்

பிறர் அபிப்பிராயத்தைத் தேடி, அதற்கேற்ப வாழ்க்கையை அமைத்துக்கொள்ள முயல்பவர்களுக்கு ஓர் அழகிய கதையைச் சொல்லவேண்டும்.

ஒரு சாமியார் பூனையிடம் ஒரு சீடப் பூனை போய் முறையிட்டுக் கொண்டது: "குருவே! எனது வாலைப் பிடித்துக் கடித்து என் கையிலேயே வைத்துக் கொள்ள வேண்டும்போல் ஆசையாயிருக்கிறது. அதற்காகத் தினமும் நான் என் வாலைத் துரத்திக்கொண்டு சுற்றிச் சுற்றி வருகிறேன். வால் கையில் அகப்படுவதில்லை. தேவரீர் திருவுளமிரங்கி என் வால் என் கையில் அகப்படும்படி அருள் செய்யவேண்டும்" என்றது.

அதற்கு சாமியார் பூனை சொன்னது: "என் உடன் பிறப்பே! நான் இந்த உலக ஆசாபாசங்களை எல்லாம் அறிந்து ஆராய்ந்து வந்திருக்கிறேன். எனக்கும் அப்படி ஓர் ஆசை அடிக்கடி எழுகிறது. ஆனால், ஒன்று நான் கண்டு கொண்டேன். இந்த சள்ளை பிடித்த வாலைச் சுற்றி வராமல் நாம் நம் வழியில் போவோமானால், வால் நமக்குப் பின்னால் நம்முடன் பதவிசாய் வந்து கொண்டிருக்கும். இதை நீ உணர்ந்து கொள். நிம்மதியடை" என்றது.

பிறர் பாராட்டையும், ஆமோதிப்பையும், அங்கீகாரத்தையும் பற்றி லட்சியம செய்யாமல நாம நம்

பணியில், கொள்கையில் ஈடுபடுவோமானால், பாராட்டும் புகழும் பூனை வால்போல் நம்மைத் தொடர்ந்து வரும்.

பிறரது அபிப்பிராயங்களை நாம் மறுத்துக் கூறும் போது பிறர் நம்மீது அதிருப்தி கொள்ளுகிறார்கள். கோபம் அடைகிறார்கள். ஏதோ நாம் அவர்களுக்குத் துரோகம் செய்ததுபோல் சீற்றம் கொள்கிறார்கள். அந்தச் சமயங்களில் நம்மை எப்படிக் காத்துக்கொள்ள வேண்டும். அத்தகைய சம்பவங்களை எப்படி சமாளிக்க வேண்டும் என்பதுபற்றி மன சிகிச்சை நிபுணர்கள் சில நல்ல யோசனை கூறுகிறார்கள்.

□ "நீங்கள் கோபமடைந்திருககிறீர்கள். நான் இபபடிப் பேசக்கூடாது என்று நீங்கள் நினைக்கிறீர்கள். இது உங்கள் நினைப்பு. உங்கள் கோபத்திற்கு நீங்கள்தான் காரணம். நானல்ல" என்று அதிருப்தியின் காரணத்தைப் பிறர்மீது திருப்பிவிட வேண்டும். அப்போது எதிரி சற்று சிந்திக்கத் துவங்குகிறார்—"நாம் நமது கொள்கைகளைப் பிறர்மீது சுமத்துவது சரியா?" என, நாமும் இதன் மூலம் எதிரியின் உணர்வுகள் நம்மைப் பாதிக்காதவாறு காத்துக் கொள்கிறோம்.

□ "உங்களைத் திருப்திப்படுத்துவதற்காக நான் என்கொள்கையை மாற்றிக்கொள்ள முடியுமா. அப் போது நான் உண்மையானவனாக இருக்கமாட்டேன். அதை நீங்கள விரும்பமாட்டீர்கள். உங்கள் உணர்ச்சிகளின் காரணத்தைப்பற்றி நீங்கள்தான் சிந்தித்துப் பார்க்கவேண்டும்."

□ பிறர் நமது செயலைப்பற்றி விமரிசனம் செய்து குறைகளை எடுத்துக்காட்டுகிறார்கள் என்றால் அப்போது

தாராள மனதுடன், "நன்றி! உங்கள் யோசனை எனைனத் திருத்திக்கொள்ள உதவும். மிகவும் நன்றி!" என்று கூறுங்கள்.

□ சில சமயம் பிறர் நம்மைச் சீண்டுவதற் கென்றே கோபமூட்ட வென்றே இடையிடையே நம்மை மடக்கக்கூடும். கோபமூட்டும், அவமானமூட்டும் சுடு சொற்களை வீசக்கூடும். "சரி. நீங்கள் ஏன் அப்படிப் பேசுகிறீர்கள் என்பதையும் புரிந்துகொண்டேன்" என்று கூறிவிட்டு, கண்டு கொள்ளாதவாறு மேலே செல்லுங்கள் என்கிறுர்கள் மனநூலார்!

□ "அந்தக் கோடி வீட்டு அம்மா அப்படித்தான் புலம்புவார், அவர் குணம் அப்படி. அது அவர் இயல்பு. எனக்கும் அதற்கும் எந்த சம்பந்தமும் கிடை யாது" என்று நமக்கு நாமே சொல்லிக்கொள்ள வேண்டும்.

□ "இவர்கள் என் கருத்தை ஆமோதித்தால் அதன் மூலம் என்ன சாதித்துவிடப் போகிறேன்? இவர்களின் அபிப்பிராயம் என்ன பெரிய விஷயம்?" என்று சிலசமயம் நம்மை நாமே கேட்டுக்கொள்வது நல்லது.

□ வெறும் விவாதத்திஞலோ, ஆதாரம் காட்டியோ பல சமயம் நம் கட்சியை நாம் நிலைநாட்ட முடியாது. ஏன்? பல சமயம் எதிரிகள் எந்த வாதத் தையும் புள்ளி விவரங்களையும் ஏற்றுக்கொள்ளும் மன நிலையில் இருப்பதில்லை. மனத்திலே அறிவுக்கு முன் சுவர் எழுப்பிவிட்டு உட்கார்ந்திருக்கிறுர்கள் அவர்கள். அந்நிலையில் அவர்கள் ஆமோதிப்பைப் பெற முயல்வது வீண் வேலை.

ே எதற்கும் மன்னிப்புக் கேட்கும் ஒரு மன நிலையை வளர்த்துக் கொள்ளாதீர்கள் என்கிறார்கள் மனோதத்துவ நிபுணர்கள். நமது ஊரிலோ, நாம் செய்யாத குற்றத்தையும் ஏதோ நாம் செய்துவிட்டதாகப் பாவித்து, "என்னால்தான் உங்களுக்கு இப்படி எல்லாம் வந்தது" என்று நாமும், "அதெல்லாமில்லை. இது என் அதிர்ஷ்டம், நான் செய்த தீவினை" என்று நமது நண்பர்களும் மாறி மாறிக் கூறும் பண்பை ஒரு விசித்திர விளையாட்டாக வளர்த்துக் கொண்டிருக்கிறோம். உதாரணம்: "என்னால் உங்களுக்கு எவ்வளவு இடைஞ்சல், தொந்தரவு!" "சே! அதெல்லாமில்லை. நான்தான் இந்தக் காரியத்தைச் செய்ய முடியாததற்கு உங்களிடம் மன்னிப்பு கேட்கவேண்டும்." "நான் வந்திருக்கவே கூடாது." இப்படித் திரும்பத் திரும்பக கூறுவதற்குப் பதில் இருவரும் ஒருவர் காதை ஒருவர் பிடித்துக் கொண்டு தோப்புக்கரணம் போடுவது நல்லது என்று அபிப்பிராயப்படுகிறார் ஒரு மனோதத்துவப் பேராசிரியர். உண்மை நிலையை மறைத்து விளையாடும் இப்போலி விளையாட்டு மனத்துக்கு உகந்ததல்ல.

பிறரது அதிருப்தி என்பது பாராட்டின் மறுபக்கம். அது நமது தனித் தன்மையைப் பறித்துவிடுவதாக நாம் விட்டு விடக்கூடாது. பிறர் பாராட்டும்போது எப்படி அதை ஏற்றுக் கொள்கிறோமோ அதே போல நிச்சலனமாகப் பிறரது அதிருப்தியையும் கண்டனத்தையும் ஏற்றுக்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் நம்மை ஆட்டுவிக்கும் சூத்திரக்கயிறு பிறர் கையிலிருந்து இயங்கும். நாம் ஆட்டுவிக்கப்படுவோம்.

அதேபோல வாழ்வில் இடர்ப்பாடுகள் நேரிடும் போது பலர், "நான் துரதிர்ஷ்டசாலி" என்றும், "துக்

கத்தை அனுபவிக்கவென்றே பிறந்த பெண் ஜென்மம்'' என்றும், ''என் வினை என்னைத் தொடர்கிறது'' என்றும் பல்வேறு விதங்களில் தங்களைப்பற்றி முத்திரை குத்திக் கொள்கிறார்கள். ''நான் சோனி'' ''நான் கையாலாகாதவன்'' ''நான் பிறர் பரிதாபப்பட வேண்டிய பிறவி'' என்று பலர் தங்களை முத்திரையிட்டுக் கொண்டு அந்த இலக்கணங்களுக்கேற்ப பரிதாபச் சின்னமாய்த் தங்களைத் தாங்களே ஆக்கிக் கொள்கின்றனர்.

சில தோல்விகளிலிருந்தோ, சில குறைபாடுகளினாலோ, அல்லது பிறர் ஆமோதிப்பைப் பெறாததனாலோ இவர்கள் இப்படியொரு தண்டனையைத் தங்களுக்கே அளித்துக் கொள்கிறார்கள். ஏதோ கடவுள் உலகில் நம்மையே தேர்ந்தெடுத்துக் கஷ்டங்களை அள்ளிக் கொடுப்பது போல் கற்பனை செய்து கொண்டு அவதிப்படுகின்றனர்.

கடவுள் என்ன செய்வார், பாவம்!

அவருக்கு வேறு வேலை இல்லையா?

8

கடந்த வாழ்க்கைப் பாதை

நம்மை நாமே 'தோல்வியாளன்' 'இயலாதவன்' என்று முத்திரையிட்டுக்கொண்டு நமது எதிர்காலத்தைச் சில எண்ணங்களால் முடக்கி விடுகிறோம்.

உதாரணமாக, ஒரு மாணவன்—இளைஞன்—ஒரு பெண்ணுடன் பழக முயல்கிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். உதாசீனம் செய்யப்படும்போது, அவன் ஆசை நிறைவேறாதபோது, 'பெண்களுடன் பழகவே லாயக்கற்றவன், என்று தன்னைத்தானே தீர்மானித்துக் கொளகிறான்; எண்ணி மனம புழுங்குகிறான்; அவமானப்படுகிறான். உண்மையில் குறை அவனுடையதாக இருந்திருக்காது. நமது சமுதாயக் கோட்பாடுகள் குறுக்கே நின்றிருக்கலாம். பேச இயலாத கூச்சப்படும் சுபாவம் தடையாய்த் தோன்றியிருக்கலாம். ஏதோ உலகின் கடைசிப் பெண் சாணுமல் போய்விட்டதாகக் கரைவதும் உருகுவதும் நமது இள உள்ளங்களின் இயல்பாக இருக்கிறது. தமிழ் நாவல் உலகில்—தமிழ் சினிமா உலகில்—கதாநாயகனுக்கு இதனால் பைத்தியம் பிடிக்கிறது அல்லது ஓர் அசாதாரண தியாகம் செய்கிறான். இப்படிப் போகின்றன நம் கதைகள.

நடைமுறை உலகிலோ, இளைஞன் சிலநாள் இது பற்றி எண்ணி ஏங்கிவிட்டுப் பிறகு உப்பு மிளகாய் புளி உலகத்தில் வாழத் துவங்குகிருன். நடைமுறை உலகத்தை நாம் சரிவரப் பார்க்க முடியாதவாறு நமது தமிழ் இலக்கிய, நாடக சினிமா உலகம் நம்மைத் திசை திருப்பிக் கொண்டிருக்கிறதோ என நான் எண்ணுவதுண்டு.

ஒரு சமயம் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியர் சங்கப் பாடல்களில் தலைவன்—தலைவியின் ஊடல்களைப்பற்றி விளக்கிக் கொண்டிருந்தார்.

தோழி கூறுகிருள்: "தலைவனே! நீ இப்படி வந்து பார்ப்பது நன்ருயில்லை. எனது தலைவிக்கு இழுக்குத் தருவதாய் இருக்கிறது. உனக்கு மணம் செய்து கொள்ள வேண்டுமென்ற உண்மையான நோக்கமும் இருப்பதாகத் தெரியவில்லை. எனது தலைவி கோப முற்று இருக்கிருள். இனி அவளைப் பார்க்க வராதே. அவளுக்கு உன்னைப் பார்க்கப் பிடிக்கவில்லை." இப்படிப் பேராசிரியர் விளக்கிக் கொண்டிருந்தபோது அருகிலிருந்த மாணவ நண்பன் கூறினுன்: "அதனுல் என்ன? தலைவி அவ்வளவு பிகு பண்ணிக் கொண்டால் தோழி எங்கே போனுள்? 'அவள் போகட்டும். நீ என்ன சொல்கிருய்?' என்று கேட்கவேண்டியதுதானே!" என்று உரக்கச் சொல்ல வகுப்பு சிரிப்பால் அதிர்ந்தது.

பேராசிரியர் கூறினுர்: "நாளை கிடைக்கும் பலாக் காயைவிட இன்று இருக்கும் களாக்காய் மேல். அனுபவ ரீதியான சிந்தனை (Practical thinking)" என்ருர். வகுப்பு மீண்டும் அதிர்ந்தது.

நடைமுறை உலகைப்பற்றி எண்ணும்போது என்து நண்பனின் கூற்று நினைவுக்கு வராமல் தப்பு

வதில்லை. மேற்சொன்ன சம்பவத்தின் நியாய வாதங்களைப் பற்றி நான் இங்கு தீர்ப்புக்கூற வரவில்லை. நமது கலாச்சாரப் பண்புகள்—சமுதாயக் கோட்பாடுகள்—பொதுவாக நடைமுறை உலகை ஒட்டி நம்மைச் சிந்திக்கத் தூண்டுவதில்லை. ஆசிய மக்களின் கலாசாரப் பண்புகளைப் பற்றி ஆராய்ந்த நக்காநிஷி என்ற ஜப்பானியப் பேராசிரியர், இந்தியர்களாகிய நாம் பொதுவாக எதையும் லட்சிய உலகை ஒட்டிச் சிந்திப்பவர்கள் என்றும், மாறாக சீனர்கள் நடைமுறை உலகை ஒட்டிச் சிந்திப்பவர்கள என்றும் கூறுகிறார். சீனாவில் எப்படி சமீபகாலத்தில் கிராமப்புற மக்களை அனுசரித்துத் தொழில்களும் வளர்ச்சியும் ஏற்பட்டன என்பதைச் சற்று சிந்தித்துப் பாருங்கள்.

ஒருவன் தொழில் துவங்கி இருமுறை நஷ்டமடைகிறான் என்றால் மூன்றாம் முறை துரதிர்ஷ்டத்தை அவனுடன் பிணைத்து விடுகிறோம். "முன்பு இப்படித் தான் தோற்றுவிட்டேன்" என்ற எண்ணத்துடன் காரியத்தை அணுகும்போது மறுபடியும் தோற்க நம்மைத் தயார் செய்து கொள்கிறோம். அதற்குப் பதிலாக 'புருசும் சிலந்தியும்' கதையை நாம் நினைவில் கொண்டு வரவேண்டும். சிலந்தி எப்படித் திரும்பக் கீழே விழுந்து விழுந்து வலை பின்னியது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். முன்பு இரண்டு முறை தோற்றுவிட்டதால் மூன்றாவது முறையும் தோற்க வேண்டும் என்று எங்கே சொல்லியிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். எந்தக் கஷ்டம் திரும்பத் திரும்ப வந்தாலும் அதைரியம், அவநம்பிக்கை, பயம் போன்ற எண்ணங்களை அவற்றுடன் சேர்த்து நம்

மனத்தில் புக அனுமதிக்கக் கூடாது. அதுதான் முன்னேற்றத்திற்கு முதல் படி.

"ஏழைக் குடும்பத்தில் பிறந்து விட்டேன்" "பணம் இருந்தால்தான் பணத்தைச் சேர்க்க முடியும்" என்ற சமாதானங்களில் சிலர் வாழ முயல்கிருர்கள். அது உண்மையல்ல. "என் தந்தை ஒரு முன்கோபி. அது தான் நானும் அப்படியிருக்கிறேன்" என்று சிலர் பாரம்பரியத்தின் மீது பழியைப் போட முயல்கிருர்கள். உண்மையிலிருந்து தப்பிக்கும் மனோபாவம் இது. நம் செயலுக்கும் முடிவுகளுக்கும் நாம்தான் காரணம் என, நாம் உறுதியாய் மனத்தில் எண்ணி என்று வாய் விட்டுச் சொல்கிருேமோ அன்றுதான் நம் வாழ்க்கை நம் கையில் இயங்கும்.

"பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்" என்ற தமிழ்ப் பழமொழியைச் சற்று எண்ணிப் பாருங்கள். குடும்பத்தில் ஒரு சரிவு, ஒரு நஷ்டம், ஒரு கஷ்டம் வந்தவுடன் மனத்தில் ஒரு பயமும் இருளும் சூழ்கிறது. மேலும் இப்படி நிகழ்வதை எளிதாக்குகிறது நமது பயம். மேலும் கெட, 'பட்ட காலிலே படும்' என்பன போன்ற பழமொழிகள் நம் மனத்தில் ஒரு சூழ்நிலையை உருவாக்குகின்றன. இந்தப் பழமொழி மட்டுமல்ல; தமிழ்ச் செய்யுள், இலக்கியம் என்ற பெயரில் எத்தனையோ பேதைமைகளை நாம் நம் மனக் கிடங்கில் விலைக்கு வாங்கிச் சேர்த்து வைத்திருக்கிருேம். பழமொழிகளும் கவிதைகளும் ரத்தினச் சுருக்கமான அமைப்பு — இசை அமைப்பு — காரணமாக நிரந்தர உண்மை கூறும் கருவூலங்களாய் நம்மை ஏமாற்றி விடும் தன்மை கொண்டிருக்கின்றன. கவிதை வடிவினுல் விஷயங்கள் உண்மையாவதில்லை.

ஜி. டி. நாயுடு ஒரு முறை கூறினர்: "எதற்கு இந்த 1330 குறள்கள்? மொத்தம் 30 குறள்களில் எல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது, அது போதும். பாக்கி எல்லாம் தூக்கி எறிந்து விடலாம்." தமிழுலகம் அதை ஏற்றுக் கொள்ளாமல் போகக்கூடும். அது வேறு விஷயம். ஆனல் அவர் துணிச்சலைப் பாருங்கள். பிறர் அபிப்பிராயத்தை லட்சியம் செய்யாத அந்த உள்ளம்-அந்தத் துணிச்சல் நமக்குத் தேவை.

அதே போல், நமது பழமொழிகளும் இலக்கியங்களும் மூதாதையார் விட்டுப் போன கலாசாரப் பண்புகளும் வாழ்க்கைக்கு உதவாத போது — அதைரியத்தையும் அவலத்தையும் உள்ளத்தில் நிறைக்கும் போது — அஞ்சாமல் அவற்றைத் தூக்கி எறிந்து விடும் தைரியம் நமக்கு வேண்டும்.

"படிக்காதவனு யிருந்து விட்டேன்", "ஏழையாய் இருந்து விட்டேன்" என்று நேற்று வரை வாழ்ந்த இறந்த காலத்தை எண்ணிப் புலம்பாதீர்கள். "நேற்று வரை அப்படி இருந்தது உண்மைதான். நாளை வேறு விதமாக—நல்லவிதமாக இருக்கப் போகிறது" என்று நம்புங்கள்.

பழைய தோல்விகளை எண்ணுமல் வெற்றிகளை எண்ணுங்கள். வாழ்ந்து கெட்ட பாதையைத் திரும்பிப் பார்க்காதீர்கள். முன்னேக்கி—ஒளி நோக்கி-நடவுங்கள். அப்படித்தான் மருத்துவ மன சிகிச்சை நிபுணர்கள் அனைவரும் ஏகோபித்துக் கூறுகின்றனர்.

9

குற்ற உணர்வுகள்...

மனித வாழ்வை ஆட்டிப் படைக்கும் இரு வேண்டாத நிலைகள் குற்ற உணர்வும், கவலையும் ஆகும் என மன சிகிச்சை நிபுணர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். நேற்று நடந்து போன விஷயங்களை எண்ணி, "நான் நேற்று அப்படி பேசியிருக்கக் கூடாது, இப்படி நடந்து கொண்டிருக்கக் கூடாது' என்று எண்ணிக் குமைதலை 'குற்ற உணர்வு' என்று குறிப்பிடுகிறார்கள். அதே போல் கவலை என்பது, "நாளை நடக்கும் விஷயம் எப்படி ஆகுமோ" என்று பல விஷயங்களையும் எண்ணிப் பயந்து வாழ்வதாகும்.

குற்ற உணர்வு, நேற்று நடந்த விஷயங்களினால் ஏற்படுவது. கவலை, நாளை நடக்கப் போகும் விஷயங்களால் ஏற்படப் போவது. ஆக நேற்றும் தவறு செய்து விட்ட வருத்தம்; நாளையும் என்ன நேரிடுமோ என்ற பயம். மொத்தத்தில் இதன் மூலம் மனிதன் நிகழ் காலத்தை — வாழ்வின் பொன்னான பகுதியைக் — கோட்டை விடுகிறான். மனக் கஷ்டப்படுவதன் மூலமோ அழுது வருத்தப்படுவதன் மூலமோ நேற்று நடந்த சம்பவங்களை மாற்றிவிட முடியுமென்றால், உலகம் வேறு விதமாயிருக்கும். நேற்று நடந்த சம்பவங்கள் நடந்து போன நிகழ்ச்சிகள். நேற்று நடந்தது, கடந்து

போன சரித்திரம். நடந்து போன சரித்திரத்தை யாரும் மாற்ற முடியாது. இந்த உண்மை நிலையை நன்கு உணர்ந்து மனத்தில் கொள்ளும் போது, அனுபவ பூர்வமாக சூழ்நிலைக்கேற்ப நம்மால நடக்க முடிகிறது. திருத்த முடியாத விஷயங்களுக்கு—மாற்ற முடியாத விஷயங்களுக்கு — புலம்புவது புத்திசாலித்தனமல்ல; பேதைமை.

ஒரு பெரிய நிறுவனத்தின் நிர்வாகி மன சிகிச்சை நிபுணரிடம் போனார். மன சிகிச்சை நிபுணர், நிர்வாகியின் கதையைக் கேட்டுவிட்டுக் கூறினார்: "ஐயா! எத்தனை பெரிய நிர்வாகி நீங்கள்? உங்கள் வயதென்ன? அனுபவம் என்ன? ஏன் அந்தப் பெண்ணுடன் உறவைத் துவங்கி தினமும் இப்படி அலைக்கழித்துக் கொள்கிறீர்கள்? முதலில் உங்கள் பெண் செக்ரட்டரியை மாற்றித் தொலைத்துத் தலைமுழுகுங்கள். எல்லாம் சரியாய்ப் போகும்'' என்றார். பல விஷயங்கள் சரியான முன்யோசனை இல்லாததால் நாமே வருவித்துக் கொள்ளும் துன்பங்கள்.

தனது தந்தை மரணப் படுக்கையில் இருந்தபோது அவரருகில் இல்லாது, அப்போது மனைவியுடன் படுக்கை அறையில் இருந்து விட்டதாக மகாத்மா காந்திக்கு ஒரு குற்ற உணர்வு. இது பற்றித் தம் சுய சரித்திரத்தில் அவர் குறிப்பிடுகின்றார். அதே போல் நாட்டுக்காகப் பாடுபட்டு விட்டுத் தன் பிள்ளைகளைச் சரியாக வளர்க்காமல் போய் விட்டோம் என்ற ஒரு குற்ற உணர்வும் காந்திக்கு அந்திம காலத்தில் இருந்தது. "நான் காதலித்தேன், அந்தப் பெண்ணை. துணிச்சல் இல்லாமல் கை விட்டு விட்டேன்'' என்று வாழ்நாள் பூராவும் குற்ற உணர்வால் தன்னைச் சாடிக்கொள்ளும் மனிதர்கள் நம் சமுதாயத்தில் ஏராளம்.

எல்லோரும் ஒவ்வொரு சமயமாவது, ''நான் செய்த தவற்றை எப்படி மறக்க முடியும்? நான் என்ன பிராயச்சித்தம் செய்வேன்? எந்தக் காவேரி தண்ணீரில் என் பாவத்தைக் கழுவமுடியும்?'' என்று மனம் துன்பப்படுவது உண்டு. இதன் மூலம் நாம் எவ்வளவு மனிதத் தன்மையுடன் இருக்கிறோம் என்பதை நமக்கு நாமே காட்டிக்கொள்கிறோம் என்று மனநூலார் அபிப்பிராயப்படுகின்றனர்.

குற்ற உணர்வுகளும், கவலைகளும் நமது நேரத்தை வீணடிக்கின்றன. நமது சக்தியை வடித்து விடுகின்றன. நமது எண்ணங்கள் தனது சுதந்திரத் தன்மையை இழந்து இதனால் முடக்கப்படுகின்றன. இத்தகைய எண்ணங்களும் நினைவுகளும் சிறிது நேர வருத்தத்தில் இருந்து, சித்தபேதம்வரை நம்மைக் கொண்டு சென்று விடுகின்றன.

பழைய சம்பவங்களை—நேற்று நடந்துபோன இடர்ப்பாடுகளை—அலசி, ஆராய்ந்து, ''இப்படிச் செய்வேன் இனி'' என்று அதிலிருந்து பாடம் கற்றுக் கொள்ள முயல்வது தவறல்ல. அது நல்லது. நமக்கு வளர்ச்சி தருவது. மாறாக, சும்மா உட்கார்ந்து வருந்துகிறோமே, அதுதான் கெடுதல பயப்பது. பலனில்லாதது.

குற்ற உணர்வுகள் சின்ன வயதிலேயே நம்மிடம் உண்டாக்கப்படுகிறது என்கிறார்கள். சிறு வயதில் அடுத்த வீட்டுப் பையனுடன் பழகுவதைத் தவறு என்று அம்மா கண்டிக்கிறார். குற்ற உணர்வுடன் ஆண் உலகத்தையே இளம் பெண் கண்டு அஞ்சத் துவங்குகிறாள். 'நீ இப்படிச் செய்தாயோ, நீ ஒரு

கெட்ட பையன்!' என்று அப்பா குழந்தைகளைத் திருத்த குற்ற உணர்வை ஒரு கருவியாய் உபயோகிக்கிறார். "ஏய்! நீ உட்கார்ந்து பேப்பர் படி. நான் மாடிப்படி ஏறி இறங்குகிறேன். தடியா, இதற்கா உன்னை பெற்றேன்?'' என்று அம்மா கூறுகிறார். "என் வாழ்க்கையையே உனக்காகத் தியாகம் செய்தேன்'' என்று விதவைச் சகோதரி கூறுகிறார். "உனக்காக, ஊருக்காகக் குடித்தனம் பண்ணினேன், அந்த தெண்டச் சோற்று மனிதருடன்'' என்று தாய் தன் தவற்றினை மகன்மீது குற்றமாகச் சுமத்துகிறார். "நீ அவளைக் கல்யாணம் செய்து கொண்டால் நான் தூக்குப் போட்டுக் கொள்வேன்'' என்று தந்தை கூற, அப்பா தூக்குப் போட்டுக் கொள்ளும் பாவத்திற்கு ஆளாக நேரிடுமோ என்ற குற்ற உணர்வால், மகன் தன் எதிர் காலத்தைக் கோட்டை விடுகிறான். மாமாவுக்கு ஆஸ்த்மா. அவர் கூறுகிறார்: "உன்னோடு மாரடித்து மாரடித்து எனக்கு மூச்சு பிடித்துக் கொண்டதடா பாவி!''

கவனியுங்கள். குற்றங்களைப் பிறர்மீது சுமத்த—பிறரைக் குற்றவாளியாக்க—நாம் தயாராயிருக்கிறோம். இரண்டாவது, குற்ற உணர்வை ஒரு கருவியாக உபயோகித்துப் பிறரை ஆட்டிப் படைக்க முயல்கிறோம்.

நிர்வாண நிலையில் தன்னைத்தானே முதன் முறையாகப் பார்த்துக் கொள்ளும்போது ஏற்படும் குற்ற உணர்வு. எதெது நமக்கு இன்பத்தையும் சந்தோஷத்தையும் கொடுக்குமோ, அதிலெல்லாம் பாவம் இருக்கிறதென்ற நமது நினைப்பு—இப்படிப் பல விதத்தில் பத்தாம் பசலித்தனமாக நம்மை நாமே குற்றவாளியாக்கிக் கொண்டு அஞ்சி வாழ்கிறோம்.

நமது உளுத்துப்போன பல சமுதாயக் கோட்பாடுகளும் நம்மைக் குற்ற உணர்வுடன் வாழ வைக்கின்றன. சூழ்நிலையைத் தெளிவாக ஆராய்வதன் மூலம் இந்த வேண்டாத மன உளைச்சலைப் போக்கிக் கொள்ளலாம் என நிபுணர்கள் கூறுகிறார்கள்.

பள்ளியில், கல்லூரியில் ஒரு பையன் ஒரு பெண்ணுக்குக் காதல் கடிதம் எழுதுகிறான். அந்தப் பெண்ணோ தன் கற்பே பறி போய்விட்டதாக அழுகிறாள்; புலம்புகிறாள். பையனோ, எங்கே ஓடிப்போகலாம் அல்லது எப்படித் தற்கொலை செய்துகொள்ளலாம் என்று எண்ணுகிறான். தலைமையாசிரியர் தேவசகாயம் வருகிறார்: "என்ன அம்மா இது? ஏன் இதற்கு ஊரைக் கூட்டுகிறாய்? அந்தப் பையன் என்ன கெடுதல் செய்து விட்டான்? உன்பேரில் ஆசையிருக்கிறது என்று தன் எண்ணத்தை வெளியிட்டான். நீ சொல்லேன், உனக்குப் பிரியமிருக்கிறதா இல்லையா என்று. அத்துடன் விஷயம் முடிந்துவிட்டது. அதற்கு மேலும் ஏதாவது நடந்தால் என்னிடம் வா" என்கிறார். என்ன அனுபவ பூர்வமான பேச்சு!

சமுதாயக் கோட்பாடுகள் ஏற்படுத்திவிட்ட குற்ற உணர்வுகளை மேற்கண்ட சம்பவத்தில் காண முயலுங்கள்.

குற்ற உணர்வுகள், நம்மை வடித்துவிடும் நோய் நிலை. அவற்றைப் பிறர் நம்மிடம் உண்டுபண்ண விழைந்தால், நாம் சிரிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். நாமே அது உண்டாகக் காரணமானால் காவேரியில் முழுக்குப் போட்டு மறக்கக் கற்றுக்கொள்ளவேண்டும்.

10

மன சிகிச்சை காட்டும் மார்க்கம்

இத்தனை நாள், எதற்கெடுத்தாலும் கவலைப் படுவது என்று ஒரு வழக்கத்தை வைத்துக்கொண்டு, திடீரென்று ஒரு கட்டுரையைப் படிப்பதன் மூலம் கவலைகளை விரட்டிப் புதிய மனிதராய் உலவி விடலாம் என்று சிலர் எண்ணுகிறார்கள். கவலை—சில சமயம் மனப் பழக்கமாய்ப் போய்விடுகிறது. பழக்கம் என்பது சிறிது சிறிதாக நாளடைவில் ஏற்பட்ட ஒன்று. அத்தகைய கெட்ட பழக்கங்களைப் போக்குவதும் சிறிது சிறிதாகச் செய்யவேண்டிய நாட்பட்ட செயல் தான். கட்டுரை உதவக் கூடும். நாள்பட்ட பயிற்சி தான் அதைப் போக்கக்கூடும்.

கவலைப்படும்போது அத்துடன் பல்வேறு உணர்வுகள் நம்முள் எழுந்து நமது மனநிலையைக் கெடுத்துவிடுகின்றன. அப்போதெல்லாம், "ஏன் இப் படித் திடீரென நான் துயரமாகி நிற்கிறேன்" என்று ஒரு கேள்வியை எழுப்பி நமது சிந்தனை ஓட்டத்தைப் பினனுக்குத்தள்ளினால் நாம்கவலைப்படுவதன் காரணம் விளங்கும். எதற்கும் காரணம் தெரியும்போது பரிகார மும் கண்டுபிடிப்பது எளிது.

சர்ச்சிலிடம் போய் உலக மகாயுத்தத்தின்போது—(குண்டுகள் லண்டன் நகரின்மீது விழுந்தபோது)

எப்படித் தன்னம்பிக்கையுடனும் கவலைப்படாமலும் இருந்தீர்கள் என்று கேட்டதற்கு அவர், "கவலைப்படுவதனால் நான் என்ன சாதித்துவிட முடியும்?" என்றார்.

ஏராள பிரச்னைகள் உள்ள ஒருவனை ஆறு மாதம் கழித்துச் சந்தித்தபோது அவனது பல பிரச்னைகள் தீர்ந்துபோயிருந்தன. "எப்படி உன் கவலைகள் எல்லாம் பறந்துபோயின?" என்று கேட்டதற்கு, அவன் நிதானமாகப் பதில் கூறுகிறான். "எல்லாம் என் மனத்தில் இருந்தன; அவ்வளவுதான்" என்று.

பல கவலைகள் நம் மனத்தில்தான் இருக்கின்றன. நம் கற்பனையில் இருக்கின்றன. பல கவலைகள் நம் மனத்தால் விஸ்தரிக்கப்பட்ட பயங்கள்; சகஜமாக நிகழ்ந்துவிட முடியாத கற்பனைகள்.

நான்காண்டுகளுக்கு முன் அமெரிக்காவில் வாழும் ஒரு குறிப்பிட்ட இனமக்கள் இன்னும் 45 நாளில் உலகம் ஒரு முடிவுக்கு வரப்போவதாகவும், எல்லாரும் அழிந்து விடுவார்கள் என்றும், எண்ணி கலிபோர்னியா மலைப்பொந்தில் 45 நாள் சென்று வாழ்ந்தனர். 45 நாட்கள் கழித்து அவர்கள் வெளி வந்த போது உலகம் ஓடிக் கொண்டுதானிருந்தது. அதே பிரச்னைகள்! அதே சங்கடங்கள்!

கவலைகளைப் போக்க நமது ஊரில் நம் முன்னோர் பல அருமையான உத்திகளை கையாண்டார்கள். எங்கள் ஊர் விளாநகர் கிராமத்தின் தல விருட்சம் விழல் என்ற கோரைப்புல். சிறுவனாயிருந்தபோது, அங்கே பலர் சென்று அதில் முடிச்சுப் போடுவதைக் கவனித்திருக்கிறேன். ஏதாவது வேண்டிக்கொண்டு முடிச்சுப் போடலாம அல்லது ஏதாவது பிரச்னை இருந்தால்

அது தீர அதில் முடிச்சுப் போடலாம். அடுத்த தடவை வந்து பார்க்கும்போது நாம் போட்ட முடிச்சு இருக்காது என்று சொல்வார்கள். தலவிருட்சமோ சுமார் இருபது முடிச்சுகளைத் தாங்கும் சிறு செடி. ஆகவே புதிதாக வருபவர்கள் முன்பிருந்த பல முடிச்சுக்களை அவிழ்த்துவிட்டு, புதிய முடிச்சுக்களைப் போட்டுவிட்டுச் செல்வார்கள். ஆக, நாம் மறு முறை பார்க்கும்போது நமது முடிச்சுக்கள் இருப்பதில்லை. 'நம் கவலைகள் போய்விட்டன' என்று நம் மனத்தை நம்பவைக்க நம் முன்னோர்கள் கையாண்ட அற்புத மான உபாயம் இது!

அதே தத்துவத்தைத்தான் மனநூலார், 'உங்கள் கவலைகளைத் தாளில் எழுதி ஒரு பெட்டியில் போட்டு விடுங்கள்' என்று சொல்கிறார்கள்.

கவலையைச் சமாளிக்க முடியாதவன் பிரச்னை களுக்கு வழி காண முடியாதவன் என்ன மனநிலை கொள்கிறான்? பலர் விரக்தி அடைகின்றனர். "போனால் போகட்டும் போடா" என்ற பாடலைச் சில முறை பாடிப் பாருங்கள். தத்துவத்தின் சார்பில் ஒரு விரக்தி கொண்ட கையாலாகாத மனிதனை அங்கே காண முடியும். ஓர் இனம் கையாலாகாத இனமாகப் போவ தற்கு அங்கு நிலவும் சூழ்நிலையும் எண்ணங்களும்தான் காரணம். கவலையினால் குமைவதைவிட விரக்தி கொண்டு தத்துவம் பேசுவது மேல். ஆனால் விரக்தி நம்மை நாம் சமாதானம் செய்துகொள்ள உதவும் ஒரு சாதனம். நமது ஊர் சாமியார்களை எல்லாம் கூட்டி ஒரு 'சர்வே' செய்தால் வாழ்வின் மூல தாத்பரியத்தைக் காணும் நோக்கில் துறவறம் பூண்டோர் எத்தனை பேர் இருப்பார்கள்? வாழ்வில் விரக்தி கொண்டு சாமியா ரானோர் எத்தனை பேர் இருப்பார்கள் என்று எண்ணிப்

பாருங்கள். விரக்தி என்ற காவியப்போர்வையில் கவலை நம் சமுதாயத்தில் அதிகம் ஒளிந்திருக்கிறது.

கவலைப்படும்போது, எந்தக் காரியத்தைத் தள்ளிப் போட இதை சாக்காக உபயோகிக்கிறோம் என்று எண்ணிப் பாருங்கள்.

நமது கவலை நிகழ்ந்தவற்றை அல்லது நிகழப் போகிறவற்றை எதையாவது மாற்றுமா என்று யோசித்துப் பாருங்கள்.

கவலைப்பட என்று சிறிது நேரம் ஒதுக்கிக் கொள்ளுங்கள். மாலையில் அதற்கென்று பத்துநிமிடம் ஒதுக்கிக் கொண்டு அன்றைய கவலைகளையும், நாளைய கவலைகளையும் பற்றி வரிசைக்கிரமமாகக் கவலைப் படுங்கள். கன்னத்தில் கையை வைத்துக்கொண்டு, முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு கவலைப் படுங்கள். பத்து நிமிடம் ஆனவுடன், "இன்றைக்குக் கவலைப்பட்டாயிற்று" என்று தாளைக் கசக்கித் தூக்கி எறியுங்கள். இதன் மூலம் மற்ற நேரங்களை மகிழ்ச்சியுடன் செலவிடலாம்.

நேற்றுக் கவலைப்பட்டதை எல்லாம் சில மாதங்கள் கழித்துப் புரட்டிப் பார்த்தால் எப்படி உப்புப் பெறாத விஷயங்களுக்கெல்லாம் கவலைப்படுகிறோம் என்பது தெரியவரும்.

மக்களது கலாச்சாரப் பண்புகளையும் அவர்கள் கவலைகளையும் பற்றி அமெரிக்காவில் ஓர் ஆராய்ச்சி செய்தார்கள். மற்ற ஐந்து நாடுகளுடன் ஒப்பிட்டதில்

அமெரிக்க மக்கள் கவலை குறைந்த இனமாக முடிவு செய்தார்கள். அதாவது அமெரிக்க மக்கள் அதிகம் கவலைப்படுவதில்லை. காரணம்? வளமான பொருளாதார வாழ்வும், நேர்மை நிறைந்த ஓர் அரசியலும், நல்ல வாய்ப்புக்கள் தரும் ஒரு சமுதாய அமைப்பும் இருப்பதுதான் முக்கியக் காரணம் என்ற முடிவுக்கு வந்தார்கள்.

அந்த மூன்றிலும் நம் நாடு முன்னேறுவதற்கு நிறைய இடம் இருக்கிறது.

11

நெஞ்சிற் கவலைதனை நிதமும் பயிராக்கி...

மனத்தில் எழும் மற்ற உணர்வுகள் நேற்று நடந்த விஷயங்களைப்பற்றி இருக்கின்றன. கவலை நாளைக்கு நடக்கப்போகும் விஷயங்களைப்பற்றி ஓடுகிறது. ஆக குற்ற உணர்வுகள் மூலம் நேற்றைய நாளையும் கவலைப் படுவதன் மூலம் நாளைய நாளையும் நினைக்க நினைக்க, மனிதன் நிகழ்காலத்தைக் கோட்டை விடுகிறான். கவலைப்படுவதன் மூலம் நமது மன எண்ணங்கள் முடக்கப்படுகின்றன. முடக்கப்பட்ட மனம் மூலையில் ஒதுங்கிக் கிடக்கிறது. மேலும் கவலைப்படுவதன் மூலம் நமது பழைய பயங்கள் சந்தேகங்கள் வெளிவரு கின்றன. பயம் பெரிதாகிறது. பயத்தை மேற் கரித்துக் கொண்டு வருவதற்குப் பதில் கவலை நம்மை மீண்டும அதிக பயத்தில் தள்ளுகிறது.

எதிர்காலத்தைப் பற்றித் திட்டமிடுவது வேறு. கவலைப்படுவது வேறு. கவலைப்படுபவன் குழம்பிய நிலையில் உள்ளவன்; தெளிவற்றவன்; பயப்படுபவன். எதிர்காலத்தைப் பற்றித் திட்டமிடும்போது நமது ஆசைகள் வெளி வருகின்றன. லட்சியங்கள் வெளி வருகின்றன. செயலுக்கான திட்டங்கள் தயாரா கின்றன. மனத்தில் ஒரு துடிப்பும் வேகமும் எழுகிறது

சாதனையின் வெற்றியை எண்ணி மனம் சுவை போடுகிறது. செயலில் முனைகிறது.

கவலைப்படுவதை அன்பு செலுத்துவதற்குச் சமமாகப் பலர் நினைக்கிறார்கள். 'நீ வரவில்லையே எனக் கவலைப்பட்டேன்', 'நீ பாசாகவில்லையோ எனக் கவலைப்பட்டேன்', 'உன்னிடமிருந்து கடிதம் வரவில்லையே எனக் கவலைப்பட்டேன்', 'ஆயுசு பூராவும் கல்யாணமாகாமல் நிற்பாயோ பெண்ணே என்று கவலைப்பட்டேன்' என்று பலவாறாகக் கவலைப்படுகிறோம்.

கவலைப்படுவது அன்பு செலுத்துவதற்குச் சமம் என்று பலர் எண்ணுகிறார்கள். நாம் கவலைப்படுவது, நாம் அன்பு செலுத்தும் நபருக்கு எந்தவித வலுவையும் நம்பிக்கையையும் தருவதில்லை. ஆக இது பயன் தராத செயல். நாம் அன்பு செலுத்துவதைக் காட்டிக் கொள்ள வேண்டுமென்றால் அதற்கு எத்தனையோ வழிகள் இருக்கின்றன.

"உங்களுக்கு இது பிடிக்கும் என்று சமைத்தேன்" எனலாம்.

"உனக்கு இது அழகாக இருக்கும் என வாங்கி வந்தேன்" எனலாம்.

"நான் ஏதாவது உதவ முடியுமா என்று சொல்லுங்கள்" எனக் கேட்கலாம்.

கவலைப்படுவதன் மூலம் ஒரு கடுகளவு விஷயங்களை மாற்ற முடியாது. "எழுதும் விதி விரல்தான் எழுதிக்கொண்டே நகரும். அழுது புலம்பி நின்றாலும் அரற்றிப் பதறிப் புரண்டாலும், அரை வரிகூட

அழியாதே'' என்கிறுர் ஓமர் கயாம் என்ற அராபிய கவிஞர்—தத்துவ ஞானி.

பழைய நாளில் நமக்கு முன் வாழ்ந்தவர்கள் கவலைப்பட்டார்கள். என்ன ஆயிற்று? அவர்களை மயானத்திற்கு அனுப்பிவிட்டு உலகம் ஓடிக் கொண்டிருக்கிறது. அதேபோல் நாளை நம்மையும் மயானத்திற்கனுப்பிவிட்டு உலகம் ஓடிக்கொண்டிருக்கும். இதில் இருக்கின்ற நாளைச் சிரித்து மகிழ்ந்து பிறருக்கு உதவி வாழவேண்டாமா? அழுது பயந்து கவலைப் பட்டா வாழ்வது?

நமது கட்டுப்பாட்டுக்குள் உள்ள விஷயங்கள் பற்றி நமது கவலை என்ருல் அதற்கான பரிகாரத்தை நாம் காண முயலவேண்டும். கவலையைப் போக்கும் வழிமுறைகள்—கவலையைப்பற்றி ஆராய்தலும், அதைப் போக்கத் திட்டமிடுதலும் பின் அதைச் செயற்படுத்தலும்தான்.

நமது கட்டுப்பாட்டுக்குள் இல்லாத விஷயத்தைப் பற்றிக் கவலைப்படுவது அறியாமை ஆகும். மழை வராமல் பயிர் வறண்டு போகுமோ என, புயல் வருமோ என, வெள்ளம் வந்தால், தீப்பிடித்தால் என்ன செய்வது என பலவிதத்திலும் சில சமயம் கவலை ஏற்படுகிறது. இவை எல்லாம் நம் கைக்கு அப்பாற்பட்ட கவலைகள். இதுபற்றி நாம் ஏதும் செய்ய முடியாது. கவலைப்பட்டுப் பயனில்லை.

மனேதத்துவ ரீதியில் மற்றொரு விஷயத்தையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும். 'வேலை போய் விடுமோ?' என்று ஒருவன் பயந்தால், 'பரீட்சையில் தவறி விடுவேனே' என்று கவலைப்பட்டால் அதுவே

நிகழும் என்பதுதான். மனம் எதை நினைக்கிறதோ அதை நிறைவேற்றுகிறது. பயப்படுபவர்கள் தோற்பது ஏன் என்பதை இது விளக்குகிறது. ஆகவே நாம் நடக்க வேண்டிய நல்ல காரியங்களை, நல்ல முடிவுகளைப்பற்றி மனத்தில் எண்ணி அதனை அடைய என்ன திட்டம் தீட்டலாம் என்று மன எண்ணங்களை ஊறப்போட வேண்டுமேயல்லாது கவலையை அல்ல; பயத்தை அல்ல.

மனிதக் கவலைகளை அழகாகப் பட்டியல் போட்டுத் தருகிறார்கள் மனோதத்துவ நிபுணர்கள். நம் கவலைகள் அங்கே பிரதிபலிப்பதைக் கண்டு நகைக்கலாம்.

"பெண் குழந்தை கல்லூரி போய் வருகிறாளே... அங்கே ஏதாவது நடந்து விடுமோ?"

"மனைவியைத் தனியாக விட்டுவிட்டு ஆபீஸ் வந்து விட்டேனே."

"பிறக்கும் குழந்தை கூன் குருடு செவிடாகப் போனால் என்ன செய்வேன்?"

"விலை இப்படி ஏறிக்கொண்டு போனால் எப்படிக் குடும்பம் நடத்துவது?"

"இவ்வளவு ஒல்லியாக (சதையாக) இருக்கிறேனே பிறர் என்ன நினைப்பார்கள்?"

"வயதாகிவிட்டதே. தலை நரைத்து வழுக்கை விழுந்து வருகிறதே!"

"மார்பை வலிக்கிறது" என்று கவலைப்படுவது எளிது. டாக்டர் வீட்டிற்குப் போய் சோதித்துக் கொள்வதுதான் கவலைக்குப் பதில். இதே போல மேற்

சொன்ன ஒவ்வொன்றிற்கும் சரியான பதிலை—பரிகாரத்தைச் சிந்தித்துப் பாருங்கள். அடுத்த முறை கவலை ஏற்பட்டவுடன் மனம் அதன் பரிகாரத்தை—பதிலை சிந்திக்கப் பழக்கப்பட்டிருக்கவேண்டும்.

கவலைப்பட்டு பட்டு வயிற்றில் புண் ஏற்படுத்திக் கொண்டோர் ஏராளம். கவலையும் நெருக்கடி மனோநிலையும் உடனடியாக வயிற்றைத்தான் பாதிக்கிறது. சில சமயம் புண் தோன்றுகிறது. வலி ஏற்படுகிறது. சில சமயம் ரத்தக் குழாய்கள் வெடித்து ரத்த பேதியும், ரத்த வாந்தியும் ஏற்படுகிறது. ரத்த அழுத்தம் கவலையின் மற்றோர் பரிசு. தலைவலி, முதுகுவலி, வயிற்றுப் புரட்டல் எல்லாம் நெருக்கடி மனோநிலையின் உடன் பிறப்புக்கள். நம்மை நாமே இப்படிச் சித்திரவதை செய்து கொள்வதை எண்ணிப் பார்க்கவேண்டும். நம்மை நோக்கி நாமே நகைக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

காரியங்களைத் தள்ளிப் போடும்போது கவலை ஏற்படுகிறது. காரியம் செய்யாமலிருக்க கவலை ஒரு சாக்காக உதவுகிறது. காரியங்களைச் செய்யும்போதோ மனப்பாரம் குறைகிறது.

ஒரு மனிதன் தன் கவலைகளை எல்லாம் எண்ணிப் பார்த்து, தற்கொலை செய்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்கு வந்தான். ஆற்றுப் பாலத்தின்மீது நின்று ஆற்றில் குதித்து உயிர்விடத் தயாரானான். அந்த வழியே வந்த வழிப்போக்கன், அவனை இடைமறித்து, "ஏன் ஆற்றில் குதிக்கிறாய்?" என்று கேட்டான். அவன் தனது பிரச்னைகளையெல்லாம்—கவலைகளை எல்லாம் கூறியபோது வழிப்

போக்கன் கூறினன்: "என்னுடைய கவலைகள் உன்னுடைய கதைகளைவிடப் பத்துப் பங்கு அதிகம். ஆக நான்தான் முதலில் தற்கொலை செய்து கொள்ள வேண்டும். நீ இந்தப் பக்கம் வா. முதலில் நான் குதிக்கிறேன்" என்று ஆற்றில் குதித்தானும்.

அவன் நீந்தத் தெரிந்த மனே சிகிச்சை நிபுணனுயிருக்க வேண்டும்!

'வீட்டுக்கு வீடு வாசற்படி' என்கிருர்களே, அந்தத் தத்துவத்தை நாம் கவலைப்படும்போது நினைத்துக்கொள்ள வேண்டும். ஏதோ உலகில் கடவுள் நம்மை மட்டுமே தேர்ந்தெடுத்து எல்லாத் துன்பங்களையும் துயரங்களையும் நமக்கு அளித்து விட்டாற்போல் எண்ணுவது மடமையாகும்.

சில சமயம் தத்துவங்களும், சாவும் பிறப்பும்கூட நமது கவலைகளின் சிறுமையைப் புலப்படுத்தும்.

12

வாழ்வில் புதுமையை ஊட்டுங்கள்

மனித மனம் பலவிதங்களில் முடக்கப்படுகிறது. புதியனவற்றை வரவேற்பதில் இருக்கும் பயம் ஒரு வகை முடக்கம். இது தெரிந்த விஷயம், இது தெரிந்த பாதை என்று பாதுகாப்பாகச் செயல்படுகிறோமே அது ஒரு வகை முடக்கம். வாழ்க்கையில் சில கட்டுப்பாடுகளை வைத்துக்கொண்டு அதன் பின்னால் அன்றாட வாழ்க்கையை அமைத்துக்கொண்டு பத்திரமாக நெருக்கடியுடன் வாழ்கிறோமே அதுவும் முடக்கம்தான்.

எல்லாவற்றிலும் முதலில் நம் மனத்தை முடக்கி விடுகிறோம். சிறகு ஒடிந்த பறவைபோல நம் மனம் புரியாத விஷயங்களைப் பயத்துடன் அண்ணாந்து நோக்குகிறது. இப்படி முடக்கப்பட்டவர்களாலேயே இவ்வுலகம் நிரம்பி இருக்குமானால் உலகம் முன்னேறி இருக்காது. புதுமை பிறந்திருக்காது.

''மனிதன் எப்படிப் பறக்கமுடியும்? பறப்பதாயிருந்தால் கடவுள் சிறகைத் தந்திருக்க மாட்டாரா?'' என்று கேட்பார்கள் முடக்கப்பட்டவர்கள்; அவர்கள் எண்ணங்களால் முடக்கப்பட்டவர்கள். ''மனிதன் இதுவரை பறந்ததில்லை. ஆகவே மனிதன் பறக்க முடியாது'' என்ற காரண காரியம் காட்டும் நடை

முறை உலகில் வாழ்பவர்கள் அவர்கள். காலடியைப் பார்த்துக் கொண்டு குனிந்து செல்பவர்கள் அவர்கள்.

"பறவை பறக்கிறது. ஏன் மனிதன் பறக்கக் கூடாது?" என்ற கேள்வியை எழுப்பினனே அவன் புதுமை விரும்பி. துணிச்சல் நிறைந்தவன். கற்பனை மிகுந்தவன். சாதாரண உலகின் கட்டுப்பாடுகள் அவனைச் சங்கிலிபோட்டுப் பிணைப்பதில்லை.

அத்தகைய அசாதாரண மனிதர்களினலேயே சாதனைகள் பிறந்திருக்கின்றன. தொலைபேசியும், டெலிவிஷனும், காரும், விமானமும், சந்திரமண்டலப் பயணமும் அவனலேயே சாத்தியமாயிருக்கிறது. அவனால்தான் உலகம் வளர்கிறது.

அந்தத் துணிச்சல், அந்தக் கற்பனை, சமுதாயக் கோட்பாடுகளையும் சூழ்நிலையையும் உடைத்தெறியும் அந்தப் புதுமை மனோபாவம் நம் எல்லோரிடமும் இருக்கிறது. ஆனல் அதை நமது பயம் முடக்கிவிடுகிறது. "நம்மால் முடியுமா?" என்ற சந்தேகம் ஒடுக்கிவிடுகிறது. "பிறர் என்ன சொல்வார்களோ?" என்று எண்ணும் பேதைமை நம்மை முன்னேருதபடி செய்துவிடுகிறது. "எனக்கேன் வம்பு? போகிறபடி போகட்டும்" என்று பாதுகாப்பையும் பத்திரத்தையும் நாடும் போக்கு நம வளர்ச்சிக்குக் குறுக்கே நிற்கிறது.

ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் என்ற விஞ்ஞானி கூறுகிருர். "உலகில் நாம் அனுபவிக்கும் அழகு—அதில் இருக்கும் புதிர்தான். அந்தப் புதிரை விடுவிக்கும் முயற்சியில்தான் கலையும் விஞ்ஞானமும் வளருகிறது" என்று.

வாலிப வயதில் ஏற்படும் இனக்கவர்ச்சி இருக்கிறதே, அது அறியப்படாத புதிர். அழகு தேங்கி நிற்கும் புதிர். ஒரு சிறுவன், புதிதாக வாங்கிவந்த கடிகாரத்தைச் சற்று நேரத்தில் அக்குவேறு ஆணி வேருகப் பிரித்துப் போட்டுவிட்டான். கேட்டதில் அவன் சொன்னுன்; "எங்கேயிருந்து 'டிக்' 'டிக்'கென்ற சப்தம் வருகிறதென்று பார்த்தேன்" என்று. உள்ளேயிருந்து வரும் சப்தம் அறியப்படாத புதிர்.

பிற நட்சத்திரங்களில் மனிதர்கள் இருக்கிருர்களா?—அறியப்படாத புதிர். "இப்படியொரு கனவு கண்டேன்" என்று விழித்தெழுந்து கொண்டு கனவுக்கு விளக்கம் தேடுகிருேமே அது புரியாத புதிர்.

துருவித் துருவிப் புதிர்களுக்கு விடை காண்பது தான் மனித இயல்பு. அதற்கேற்ப ஒரு மனேநிலையை —துணிச்சலே, கற்பனேயை—நாம் வளர்த்துக்கொண்டிருந்தோமானுல் நம் வாழ்க்கை இனிய சவாலாய் அமையும். மலர் தினமும் புதிதாக விரிவதைப்போல், ஆண்டு தோறும் பருவகாலம் புதிது புதிதாக வருவதைப்போல் வாழ்வு அழகுடன் அமையும்.

அப்படி ஒரு மனேநிலேயை வளர்க்காவிட்டால் என்ன ஆகிவிடும்? ஒன்றும் ஆகிவிடாது. வாழ்க்கை செக்குமாடுபோல் ஆகிவிடும். வாழ்க்கையைத் தாலுக்கா ஆபீஸ் குமாஸ்தாவில் தொடங்கி வயதேறிய தாலுக்கா ஆபீஸ் குமாஸ்தாவாக வேலே ஒய்வு பெற்றவர்களேப் பார்த்திருக்கிறீர்களா? பள்ளி ஆசிரியராகத் துவங்கிப் பத்திரமாக அதிலேயே காலத்தை முடித்துக் கொண்டவர்களேப் பார்த்ததில்லேயா?

"பாதுகாப்பு பாதுகாப்பு" என்று அலருதீர்கள் என்கிருர்கள் மனேதத்துவ நிபுணர்கள். என்ன

ஆகுமோ என்று பயப்படாமல் சற்று வேறுவிதமாகக் காரியங்களைச் செய்து பாருங்கள்.

வழக்கமாகச் செல்லும் பாதைக்குப் பதில்—காந்தி நகரில் 'வாக்' போவதற்குப் பதில்—சைதாப்பேட்டை மறைமலையடிகள் பாலத்தினடியில் இருக்கும் குடிசைப் பக்கம் ஒருநாள் நடந்து பாருங்கள். பாலசரஸ்வதியின்—கமலாவின்—நாட்டியம் என்றால் உங்களுக்கு உயிரா? ஒருநாள் மனைவியை அழைத்துக்கொண்டு ஒரு காபரே நடனத்திற்குப் போய் வாருங்கள். என்ன தான் அங்கே நடக்கிறது என்று பாருங்கள். ஒருநாள் வயிற்றைப் பட்டினி போட்டுப் பாருங்கள்.

இப்படி எல்லாம் செய்யும்போது உலகமே வேறு விதமாகத் தெரியும். வேறு நோக்குகள் நமக்குப் புலப் படும். உலகத்தையும் வாழ்வையும் மேலும் நன்றாக ரசிக்க நம்மால் முடியும்.

இங்கிலாந்தில் படித்த பாரிஸ்டரான காந்தி—ஆங்கில உடை அணிந்து பழகியவர்—வெறும் அரைத் துண்டு கட்டி உலவி வந்ததை எண்ணிப் பாருங்கள். அமெரிக்காவில் சுகமாக வாழ்ந்த டாக்டர் ஷ்வைஸ்டர், ஆப்பிரிக்காவில் குடியேறி மருத்துவமனை திறந்து தொண்டாற்றியதைக் கொஞ்சம் கற்பனையில் நிலவ விடுங்கள்.

மனித மனம் பயத்தால் அடிபட்டிருக்கும்வரை, பாதுகாப்பு பாதுகாப்பு என்று அதை எண்ணி அலறும் வரை, எந்தப் பெரிய காரியத்தையும் செய்யமுடியாது.

காது கேட்காதவர்களுடன் நின்று நிதானித்துக் கவனித்து அவர்கள் பேசுவதைப் புரிந்துகொள்ள முயன்றிருக்கிறீர்களா? அல்லது "செவிடன் இவன்,

இவனிடம் மாட்டிக் கொண்டோமே'' என்று எண்ணி யிருக்கிறீர்களா?

பிறமொழி பேசுபவர்களை அனுதாபத்துடன் நோக்கி அவர்களுக்கு உதவ முற்பட்டிருக்கிறீர்களா? கைகால் முடக்கப்பட்டவர்களுடன் சற்று நின்று பேசி உறவாடியதுண்டா? மனத் தெளிவு அற்றவர்கள் முன் உட்கார்ந்து அவர்களது பிரச்னைகளை அறிய முயன்றதுண்டா?

அவையெல்லாம் புதிய அனுபவம். நம்மை மனித ளுக உயர்த்தும் அனுபவங்கள். செக்குமாடு போல், ஒரே வாழ்க்கையைச் சுற்றிச் சுற்றி வர முயலாது நாம் புதிய அனுபவங்களை வரவேற்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

எனது காரைக்குடி நண்பர் ஒருவர் கூறுவார். அந்தப் பக்கம் போய், ''ஐயா வீட் டிலிருக்கிருர்களா?'' என்று கதவைத் தட்டினல், மூன்று கட்டுக்கு அப்பால் கதவு திறக்குமாம். ஒரு பெண்ணின் முகம் கதவுக்குப் பின் தெரியுமாம். 'இல்லியே, வெளியே போயிருக்கிருக' என்று சொல்லிவிட்டு 'டபக்'கென்று கதவைச் சாத்தி விடுவார்களாம். ஏதோ ராவணன், சீதையைத் தூக்கிச் செல்லத் தெருவில் நிற்பதுபோல கதவைச் சாத்திவிடு வார்கள் என்று சொல்லிச் சிரிப்பார்.

மாருக, மயிலாப்பூர் பக்கம் போய், ''வீட்டில் ஐயா இருக்கிருரா?'' என்று கேட்டால், ''இல்லை. வெளியே போயிருக்கிருர். உட்காருங்கள். என்ன வேணும்? என்ன விஷயமாக வந்தீர்கள்? நான் அவர் வந்ததும் சொல்கிறேன்'' என்பார்கள்.

வாசலில் வந்திருப்பவர் வரக்கூடாத மனிதராயிருக்கலாம். வரக்கூடாத சந்தர்ப்பமாக இருக்கலாம்.

கவனத்துடன் இருப்பது வேறு; வழக்கத்திற்கு மாருகக் காரியங்களைச் செய்யப் பயப்படுவது வேறு. பழக்கம், வழக்கம், பயம், பாதுகாப்பு என்ற வார்த்தைகளைச் சமாதானமாக உபயோகித்து நம் வாழ்க்கையை முடக்கிக் கொள்ளக்கூடாது.

13

மனத் துணிச்சல் உண்டா நம்மிடம்?

எனது நண்பர் பரஞ்சோதி சுமார் பத்தாண்டு களுக்கு மேல் ஆசிரியராயிருந்தார். அவர் கூறுவதைக் கேளுங்கள். "சுமார் ஐந்து, ஆறு ஆண்டு காலம் நான் ஆசிரியராக வளர்ந்தேன். பின், என் ஆசிரிய வாழ்க்கை சலித்துவிட்டது. செய்யவேண்டிய புதிய புதிய விஷயங்களை முதல் ஐந்தாண்டு காலத்தில் வேக மாகச் செய்தேன். தலைசிறந்த ஆசிரியர் என்ற சர்டிபி கேட் பெற்றேன். அதற்கு மேல் என்ன செய்ய இருக் கிறது? ஆகவேதான் ஒரு நாள் திடீரென வேலையை விட்டுவிட்டேன். புதிய மேய்ச்சல் நிலத்தை நோக்கி நடந்தேன்" என்றார்.

பல ஆசிரியர்கள், பல குமாஸ்தாக்கள், இருபது வருஷம் வேலை பார்த்திருக்கக்கூடும். பல சமயம் அது, முதல் வருஷத்தைத் திரும்பத் திரும்ப இருபது தடவை வாழ்ந்ததாயிருக்குமே தவிர, இருபது வருஷ மொத்த அனுபவம் பெற்றதாயிருக்காது.

அதே போலத்தான் பத்திரிகை உலகமும், பத்தி ரிகை ஆசிரியர்களும், நாவலாசிரியர்களும். அவர் களும் மனிதர்கள்தான்! அவர்களுக்கும் அலுத்து விடுகிறது. வேறு வழி தெரியாதபோது, எருமை மாடு, தின்றதை மீண்டும் கொண்டுவந்து அசை

போடுவதுபோல் எழுதியதையே இவர்கள் எழுதிக் கொண்டிருப்பார்கள். அதே போராட்டங்கள், அதே சூழ்நிலை, அதே காதல் மோதல் என எத்தனை பேர் இன்னும் அத்தைப் பாட்டிக் கதை எழுதிவருகிறார்கள்? எத்தனை நாவலாசிரியர்கள் இன்னும் வெறும் பெண்ணின் 'கவர்ச்சிப் பிரதேச'த்தை வருணித்துக் கொண்டு காலத்தை ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள்? நண்பர் அகிலன் இதைக் குறிப்பிட்டு, "இது இலக்கிய மல்ல. வெறும் "சதை—சதை" என்று கூறுவார்.

கற்பனை வற்றிவிடுகிறது.

புதிய கற்பனைகள் பிறக்க வேறு இலக்கியங்களை அவர்கள் படிப்பதில்லை. புதிய அனுபவங்களுக்குத் தங்களை ஆளாக்கிக் கொள்வதில்லை. இவர்களெல்லாம கட்டுப் பெட்டிகள். இலக்கியம் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று எண்ணி அதை ஒரு கட்டுத்திட்டத் திற்குள் அடக்கி அதன் பின்னல் நடக்கிறார்களோ, அவர்களெல்லாம் கட்டுப் பெட்டிகள்.

இதே போலத்தான் நமக்கு முன்னுல் வாழ்ந்த வர்கள் சமுதாயத்தைப் பல சாதிகளாகப் பிரித்து, சில கட்டுத் திட்டங்களை வகுத்து மக்களைப் பாகுபாடு செய்தார்கள். நமது சாதிப் பாகுபாடுகள் போல் உலகில் வேறெங்கும் கோட்பாடுகள் மனித சமுதா யத்தை ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு இப்படி நெருக்கியதில்லை. கட்டுப்பாடுகள் மனிதனின் சுதந் திரத்தைப் பறித்து விடுகின்றன. மனிதனின் ஆக்க சக்தியை முடக்கி விடுகின்றன. ஒரு குறிப்பிட்ட சாதியினர், சில விஷயங்களைச் செய்யக்கூடாது; வேறு சிலர், சில தெருக்களில் நடக்கக்கூடாது; தண்ணீர் மொள்ளக்கூடாது என்று மனித செயலை—

இயல்பை—முடக்கிவிடுகிறேம். மனித மனம் முடக்கப் படுகிறது. அவர்களையெல்லாம் தாழ்த்தப்பட்டோர் என்று சொல்வதற்குப் பதில் 'முடக்கப்பட்டோர்' என்று சொல்வது பொருத்தமாக இருக்கும்.

எப்படி மனிதன் முடக்கப்படுகிறுன்? மேலேயுள்ள ஒரு வலுவான மனிதன் பயமுறுத்திக் கீழே உள்ள வனை முடக்குகிறுன். கீழே உள்ளவன் தனது பயத் திஞலும் அறியாமையிஞலும், அதை 'ஆண்டவன் கட்டளை' என்று ஏற்றுக் கொள்ளும்போது தன்னைத் தானே முடக்கிக் கொள்ளுகிறுன்.

இதில் யார் தவறு அதிகம் என்று மனநூலார் ஆராய்ச்சி செய்யும்போது, "பயந்து போய், ஏற்றுக் கொண்டவனே" ஆண்மையற்றவன் என்று அபிப் பிராயப்படுகிறுர்கள். அப்படியொரு சூழ்நிலையில் தோன்றி சாதிச் சடங்குகளை எல்லாம் எதிர்த்த பெரியார் ராமசாமிக்கு எத்தனை துணிச்சல், கற்பனை இருக்கவேண்டுமென்பதை எண்ணிப் பாருங்கள். அதேபோல நம் வாழ்க்கையைப் பிறர் அபிப்பிராயங் கள் முடக்கிட நாம் அனுமதிக்கக்கூடாது.

பெரியாருக்கு மாருக, மகாகவி பாரதியைப் பாருங்கள். ஆதி திராவிட இனத்தில் பிறந்த ஒரு மனிதரை அழைத்து மயிலாப்பூர் குளத்தில் குளிக்கச் செய்து, சில அனுட்டானங்களைக் கற்றுக் கொடுத்து, "நீ இன்று முதல் பிராமணன்!" என்ருராம் பாரதி. ஆகா! என்ன துணிச்சல்! என்ன தைரியம்! அதனுல் தான் பாரதியைப் புதுமைக்கவி, புதுமை மனிதர் என்கிறேம்.

கவிஞர்கள் எல்லோருக்குமே இத்தகைய அசாதாரணப் போக்குகள் உண்டு. இதுதான் ஆக்க

சக்தியின் பிறப்பிடம். இதுதான் அவர்களை மகாகவியாக்குகிறது. இதுதான் அவர்களை வேறுபடுத்திக் காட்டுகிறது.

பாரதியின் வீட்டுமுன் ஒரு குடுகுடுப்பைக்காரன், "நல்ல காலம் பொறக்குது ஐயாவுக்கு" என்கிறான். பாரதி கட்டியிருந்த வேஷ்டியை அவனுக்கு இனமாக அளித்து விடுகிறார்!

மார்கழி மாத பஜனை போல, ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் வீட்டின் முன் ஓர் இசைக்கூட்டம் வந்து பாடுகிறது. ஐன்ஸ்டைன் உள்ளே போகிறார். தன் பெட்டியிலிருக்கும் வயலினை எடுத்துக்கொண்டு வந்து அந்தத் தெருப் பாடகர்களுடன் தானும் சேர்ந்து கொள்கிறார்!

அமெரிக்க சிந்தனையாளன் எமர்சன் கூறுகிறான்: "அதோ, தோப்பில் பாம்பு நெளிகிறது. எங்கே போகிறது? இரைதேட அல்ல. ஏதோ மனம்போன வாக்கில். சும்மா, ஊர் சுற்றப் போகிறது. புதிய இடங்கள்! புதிய அனுபவங்கள்!" தும்பியைத் தேடி ஓடும் சிறுவன், பறந்து திரியும் சிட்டுக் குருவி, ஆர்ப்பரித்து ஓடும் நதி இவற்றிற்கெல்லாம் ஏதேனும் காரணம் இருக்கிறதா? ஏதாவது அர்த்தம் இருக்கிறதா?

எல்லாவற்றிலும் அர்த்தத்தைத் தேடி அலையாதீர்கள். எல்லாவற்றுக்கும் காரணம் காரியம் காட்டி வாழ முயலாதீர்கள். வாழ்வில நடக்கும் எல்லாச் சம்பவங்களுக்கும் சமாதானமும் காரணமும் தேடி அலையாதீர்கள்.

போதும் இந்தக் காரணம் காரிய வாழ்க்கை. சும்மா ஒரு நாள் காலபோன வாக்கில் செல்லுங்கள். ஆகா

யத்தை அண்ணாந்து நோக்குங்கள். ஆகாயத்தில் விளையும் தகத்தகாயத்தை எத்தனை முறை பார்த்து ஆனந்தப்பட்டிருக்கிறீர்கள்? அதிசயப்பட்டிருக் கிறீர்கள்? உங்களை நீங்களே அவிழ்த்து விடுங்கள். மனமும் உடலும் சுதந்திரமாய்ப் பறந்து திரியட்டும். அந்த விடுபட்ட உணர்ச்சி மனத்துக்கும் உடலுக்கும் இதமானது. ஆக்க சக்திகள் நம் உள்ளே புக இதை விட வேறு வசதியான வாய்ப்பை உங்களுக்கு நீங்களே அளித்துக் கொள்ள முடியாது.

உடல் தனது நெருக்கடி நிலையைத் தாண்டும் போது ஏற்படும் கட்டவிழ்ந்த நிலை, நமது ஆயுட் காலத்தை அதிகப்படுத்தும், நமது புலன்களின் அறியும் சக்தியை அதிகப்படுத்தும்.

"இல்லற சுகத்தில் வேறு வேறு நிலையில் உறவாட முயன்றதுண்டா?" என்ற ஒரு கேள்வியை அமெரிக்க மன சிகிச்சை நிபுணர் கேட்கும்போது, "இந்த வேலை கெட்ட அமெரிக்கர்களுக்கு செக்ஸ் ஒன்றுதான் நினைப்பு, சதா" என்று எண்ணத் தோன்றுகிறது. வாழ்வில் இன உணர்ச்சிகள் நம்மைப் பெரிதும் ஆட்டுவிக்கின்றன. இன உணர்ச்சியினாலேயே இவ்வுலகம் தோன்றி நீண்டு செல்கிறது. நமது முன்னோர்கள் காம சூத்திரம் என்று புத்தகத்திலும், கோயில் என்று சிற்பங்களிலும் விட்டுவிட்டுப் போயி ருக்க, உள்ளதை இல்லையென்று மறுக்க ஏன் நாம் பழக்கப்பட்டிருக்கிறோம்? எண்ணிப் பாருங்கள்.

நம் வாழ்க்கை பலவித சனாதன கட்டுப்பாடுகளால் முடக்கப்பட்டிருக்கிறது. பல விஷயங்களைக் கேட்கவே பயப்படுகிறோம்; சிந்திக்கவே பயப்படுகிறோம். கொஞ் சம் சிந்தித்துப் பாருங்கள்!

14

நெஞ்சமே அஞ்சாதே நீ!

சுதந்திரமான வாழ்க்கை வாழ, நமக்கு முதலில் சுதந்திரமான மனம் வேண்டும். நமது எண்ணங்களும் பழக்க வழக்கங்களும் சமுதாயக் கோட்பாடுகளும் பலவிதங்களில் நமது விடுதலை மனோபாவத்தை—ஆக்க சக்தியினை—குறைத்து விடுகின்றன.

புதிய மனிதர்களைக் கண்டு பழகத் தயங்கும் மனோபாவம், புதிய இடங்களில் போய் வசிப்பதற்கு ஏற்படும் பயம், நெறி—திட்டம்—என்று நம் வாழ்க்கையை நெருக்கிக்கொண்டு வாழும் போக்கு, தோல்வி ஏற்பட்டு விடுமோ என்ற அச்சத்தில் புதிய விஷயங்களைத் துவங்கத் தயங்குதல் என்று பல வழிகளில் நம் மன இயக்கத்தை நாம் முடக்கி வைத்திருக்கிறோம்.

"அவன்—(அவள்)—வேறு சாதி. நீ கல்யாணம் செய்து கொள்ள முடியாது; நீ கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது" என்று நம் இளைஞர்களின் மன ஓட்டத்தை நாம் முடக்கி வைத்திருக்கிறோம். வேறு சாதியில் கல்யாணம் செய்தால் அவர்கள் பழக்க வழக்கம் எப்படி இருக்குமோ என்ற பயம். பிறர் அதைப் பற்றிக் கேவலமாகப் பேசி விடுவார்களோ என்ற

அச்சம். இவற்றிற்குப் பயந்து கொண்டு சொந்த சாதிக்குள்ளேயே சுழன்று சுழன்று வாழ்கிறோம். எதெல்லாம் பற்றி நமக்குத் தெரியாதோ அதிலிருந்தெல்லாம் ஒதுங்கிக்கொள்ள முயல்கிறோம். பயத்தின் பெரும் காரணம் நமது அறியாமைதான். நம் அறியாமைதான் நம்மைக் கட்டிப் போட்டுவிடுகிறது. நாம் கட்டுப் பெட்டிகளாய் வாழ்க்கை நடத்துகிறோம். கடல் தாண்டிச் சென்றவர்களை சாதிப்பிரஷ்டம் செய்தார்கள் காந்தி வாழ்ந்த நாட்களில். மோகன்தாஸ் காந்தி அதனால் முடங்கிவிடவில்லை. இங்கிலாந்து சென்றார்; தென் ஆப்பிரிக்கா சென்றார்; தலைவராகத் திரும்பினார்.

“என்னை சென்னைக்கு மாற்றாதீர்கள். சென்னை பெரிய நகரம். என்னால் வாழ முடியாது. வரும்படி போதாது” என்று மன்றாடினார் ஒரு நிறுவனத்தின் அதிகாரி. கம்பெனி அவர் வாதங்களுக்கு இசையவில்லை. அதிகாரி சென்னைக்கு மாற்றப்பட்டார். சென்னை சென்றதால் அவருக்குப் பெரிய மனிதர்களின் தொடர்பு ஏற்பட்டது. நிறைய வாய்ப்புக்கள் ஏற்பட்டன. வாழ்வில் பலமுறை உயர்வு ஏற்பட்டது.

ஒரு சீன உணவையோ அல்லது மெக்சிகன் சாப்பாட்டையோ, “எப்படி இருக்கிறது என்று முயற்சி பண்ணிப் பார்க்கப் போகிறேன்!” என்று சொல்லும் துணிவு—ஒரு மனோபாவம்—நம்மில் எத்தனை பேருக்கு இருக்கிறது. ஒரு சிலர், “பாகற்காய் கசக்கும், எனக்குப் பிடிக்காது” என்கிறார்கள், ஒரு சிலரோ, “பாகற்காய் கசப்பின் ருசியே தனிதான்” என்று ரசித்து மகிழ்கிறார்கள். பாகற்காய் பாஷாணமல்லவே. ஒரு தரம் அதைச் சுவைத்துப் பார்த்தால் என்ன முழுகிப் போயிற்று?

மற்ருேர் வகை மனமுடக்கம், திட்டப்படி வாழ்த லாகும். ஒருநெறி ஏற்படுத்திக்கொண்டு அதற்கு அடிமையாகிவிடுதல். "என்ருல் அப்படிச் செய்ய முடியாது. என் பழக்கம் அது" என என்றைக்குச் சொல்லத் துவங்குகிருேமோ அன்றே நம் பழக்கம் நம்மை அடிமைப்படுத்திக் கொள்ள அனுமதித்து விட்டோம்.

எனக்குத் தெரிந்த கல்லூரித் தலைவர் ஒருவர் இருந்தார். கல்லூரியின் எதிர்காலத்தைப் பற்றித் திட்டம் வகுக்க மாநாடு கூட்டினுர். பிரமாதமாகத் திட்டம் வகுத்தார்கள். இருநூறு பக்க அளவில் திட்டத்தை அழகாக அச்சடித்தார்கள். ஆண்டு பூராவும் அவர் அப்புத்தகத்தைக் காட்டித் தன் திட்டங்களைப் பற்றிப் பேச ஆரம்பிப்பார். இதேபோல் ஆண்டுதோறும் 'திட்ட மாநாடு' நடத்தி வருகிருர் அவர். ஒரு சமயம் அவர் வீட்டுக்கு அவருடன் போனபோது அவர் மனைவி கேட்டார். "கல்லூரித்தலைவரே! இன்றென்ன திட்டம் வகுத்தீர்கள்?" என! தினமும் திட்டம் போட்டுக்கொண்டு போனுல் எப்படி? அதைச் செயலாற்ற வேண்டாமா? செயலாற்றும் போதல்லவா திட்டத்தின் பலன் கிடைக்கும். வெறும் திட்டத்தினுல் அரிசி விளைவதில்லை.

திட்டமில்லாத வாழ்க்கை பயனற்றது—உண்மை தான். அதற்காகத் திட்டம் திட்டம் என்று வாழ்க்கையின் சுதந்திரத்தைப் பறித்துவிடக் கூடாது. திட்டம் மனிதர்களுக்காக இருக்கிறதே தவிர, மனிதர்கள் திட்டங்களுக்காக இல்லை. சமுதாயக் கோட்பாடுகளும் சடங்குகளும் மனிதர்களுக்காக இருக்கின்றனவே அன்றி, அவற்றிற்காக நம் வாழ்க்கையைத் திசைதிருப்பிக்கொள்ளக் கூடாது.

நெறியான வாழ்க்கை வேண்டியதுதான். ஆனால் நெறியான வாழ்க்கை என்ற பெயரில் அம்மை குத்திக் கொள்வதற்குக்கூட ஆட்சேபம் தெரிவிக்கும் பிரதமர் மொரார்ஜி தேசாயைப் பற்றி எண்ணிப் பாருங்கள். நெறியுடன், திட்டப்படி வாழ்வதில் ஒரு பத்திரம் இருக்கிறது. ஒரு பாதுகாப்பு இருக்கிறது. அந்த நெறியுடன் கூட வளர்ந்து கொடுக்கும் ஒரு மனோபாவம் இழைய வேண்டும்.

ஜெயகாந்தன் ஒரு கதை எழுதியிருந்தார். ஒரு பிராமண வீட்டில் ஓர் இளம் விதவைப் பெண் வசிக்கிறாள். நெறிகள் மிகுந்த சனாதன வீடு அது. ஆனால் அந்தப் பெண்ணின் தாயோ, வேறொருவனைத் தன் மகள் நேசிக்கிறாள் என்று தெரிந்ததும், அவன் பின்னால் மகள் ஓடிவிட உரிய காலத்தில் தன் பெண்ணை அனுமதிக்கிறாள். நெறிகள் மிகுந்த தந்தைக்கு இது தெரியாது. ஏன்? அவர் இப்படிப் போவதை அனுமதிக்க மாட்டார். ஆனால் அந்தத் தாயோ பிராமண குலத்தின் நெறிகள் சிறிதும் தவறாதவர்தான். எனினும் அந்தத் தாயின் உள்ளத்தில் ஒரு நியாயம்—நடைமுறை உலக நியாயம் பிறக்கிறது. சமயத்தில் தேவைப்படும்போது நெறிகளையும் மீறும் நியாயம் இருக்கிறதே அது புனிதமானது. அங்கே மனம் சுதந்திரமாக—தெய்வீகமாக—ஆக்க சக்தியுடன்—இயங்குகிறது. ஜெயகாந்தனின் கதைகள் மாறும் சமுதாயப் போக்கினைத் தெள்ளத் தெளிய எடுத்துக் காட்டுகின்றன. சமுதாயம் மாற அவை உதவுகின்றன.

"எது எப்படி நடக்கும், எப்படி முடியும்?" என்று எல்லாவற்றையும் தெரிந்து வைத்திருப்பதில் ஒரு பத்திரம் இருக்கிறது. ஒரு பாதுகாப்பு இருக்கிறது.

ஆனால் அங்கே புதுமை இல்லை. சவால் இல்லை. யோசித்துப் பாருங்கள். இந்த உலகில் யார் பத்திரமாயிருக்கிறார்கள்? உயிரைவிட்டு, தலையைப் போட்டார்களே அவர்கள்தான் பத்திரமாயிருக்கிறார்கள்! பத்திரம், பாதுகாப்பு என்ற வார்த்தைகள் நம் வாழ்க்கையை முடக்கவிடாதீர்கள்.

வெளி உலகப் பாதுகாப்பை நாடித்தான் உலகிலுள்ள அதிக மனிதர்கள் வாழ்கிறார்கள். வேலை பத்திரமாக இருக்குமா, வருமானம் நிரந்தரமாக இருக்குமா, குடும்பம் பத்திரமாக இருக்குமா என பலவகைகளில் மனிதன் பாதுகாப்பை நாடி ஓடுகிறான் வாழ்நாளில்.

ஆனால் அவற்றிற்குமேலாக நம்மிடம் மனபத்திரம் —மனப் பாதுகாப்பு—வேண்டும். எதையும் சமாளிக்கலாம் என்ற மன எண்ணம் இருக்கிறதே அதுதான் பாதுகாப்பைத் தரும்; பாதுகாப்புக்கு வழி வகுக்கும். பாதுகாப்பு எங்கே இருக்கிறது? நம் மனத்தில்.

வேலை போய் விடுமோ, வீடு தீப்பிடிக்குமோ, நிலை குலைந்து போய்விடுமோ என்று பயப்படுபவர்கள் கம்பனையும் ஔவையையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

கமபர் பாடினார், "மன்னவனும் நீயோ, வளநாடும் உன்னதோ? உன்னை யறிந்தோ தமிழை ஓதினேன்?" என்று. எந்தப் பாதுகாப்பை நாடுகிறார் கவிஞர், பாருங்கள்!

"இட்டமுடன் என் தலையில் இன்னபடி என்றெழுதிய சிவனும் செத்துவிட்டானோ? முட்ட முட்டப் பஞ்சமேயானாலும், பாரம் அவனுக்கு அன்னாய், நெஞ்சமே அஞ்சாதே, நீ!" என்று பாடினார் ஔவையார். எங்கே இருந்தது பாதுகாப்பு ஔவையாருக்கு? எண்ணிப் பாருங்கள்!

15

தோல்விக்கு அளவுகோல் ஏது?

புகழ்பெற்ற விஞ்ஞானி எடிசன் சின்ன வயதில் செய்தித்தாள் விற்று வந்தார். அவர் செய்து வந்த ரசாயன சோதனைகளைக் காரணம் காட்டி அவரை ரயில் பெட்டியிலிருந்து, செய்தித் தாள்களுடனும் சாமான்களுடனும் தூக்கி எறிந்தார்கள். மனிதர் இடிந்து போகவில்லை. பின்னால் எடிசன் எப்படி மின்சார ஒளி விளக்கேற்றினார் என்ற கதை உங்களுக்குத் தெரியும். கெட்ட சூழ்நிலை ஏற்படும்போது, "இதுவும் ஏதோ நல்லதுக்குத்தான்!" என்று தீவிரமாக எண்ணிப் பாருங்கள்; நிஜமாக நம்பிப் பாருங்கள். எண்ணம் போலவே எல்லாம் நன்மையாக முடியும்.

சிகாகோவில் மார்ஷல் என்பவரின் கடை தீக்கிரையாகி விட்டது. அந்தக் காலத்தில் இப்போதுபோல இன்ஷ்யூரன்ஸ் எல்லாம் கிடையாது. கடை எரிந்த மறுநாளே, "இதைவிடப் பெரிய கடையாக இதே இடத்தில் திறப்பேன்" என்று கூறிக் கொண்டார் மனிதர். இரண்டாண்டுகளில் மிகப் பெரிய கட்டடம் எழுந்தது அங்கே. நன்மையும் தீமையும் விஷயங்களில் இல்லை. நிகழும் சம்பவங்களில் இல்லை. நாம் அவற்றை எப்படி எடுத்துக் கொள்கிறோம் என்பதைப் பொறுத்துத்தான் நன்மையும் தீமையும் நேர்கின்றன.

சில சமயம் நாம் போட்ட திட்டப்படி நடவாது, எதிர்பாராதவாறு காரியங்கள் நிகழ்ந்து நமக்கு அதிர்ச்சியை ஏற்படுத்துமானால் என்ன செய்யலாம்? அதிர்ச்சியை எண்ணி அனுபவித்துப் புலம்பலாம். மாறாக, இதுவும் ஏதோ ஒரு நன்மைக்குத்தான் என்று எண்ணி எடுத்துக் கொள்ளலாம்... அதுவே நம் எதிர் கால நல்வாழ்வின் திருப்புமுனையாக, ஆரம்ப கட்ட மாக இருக்கும். இதை நாம் அப்போது உணர முடி யாது. காலம் மட்டுமே அதன் நன்மையை விளக்கும்.

திடீரென்று நம்மை, நம் ஊரைவிட்டு, உறவினரை விட்டு, அலுவலகத்தைவிட்டுத் தூக்கிக் கொண்டு போய் மாமிச பட்சிணிகள் வாழும் நியூகினிக்கு அருகில் உள்ள தீவில் கொண்டுபோய்ப் போட்டு விட்டால் என்ன ஆகும்? நம்மால் சமாளிக்க முடியுமா? விலாசம் கொடுக்க முடியாத இடத்திற்கு நம்மால் போகமுடியுமா? தயிர்சாதமும், அப்பளமும், சாம்பாரும் இல்லாமல் நம்மால் உலகைச் சுற்றிவர முடியுமா?

நம்மை நாமே புதிய அனுபவங்களுக்குத் தயார் செய்துகொள்ள வேண்டும். அந்த மனோபாவம் வாழ்க் கையை ருசி மிகுந்ததாக்கும்.

அதே போலவே 'தோல்வி'பற்றி நம் சமுதாயத்தில் நிலவும் கருத்துக்களும் நம் எண்ணங்களை முடக்கி, நமது முன்னேற்றத்தைத் தடை செய்துவிடுகின்றன; "வெற்றி நோக்கி எண்ணங்களைத் திருப்புங்கள். வெற்றி நோக்கி நடவுங்கள்" என்று தன்னம்பிக்கை யூட்டும் அத்தனை புத்தகங்களும் கூறுகின்றன. பகலுக்குப் பின் இரவு வருவதுபோல், வாழ்வில் சில சமயம் தாழ்வும், தோல்வியும், கஷ்டங்களும் வரத்தான் செய்கின்றன. அவற்றை நாம் எப்படிச் சமாளிக்கிறோம்

என்பதைப் பொறுத்தே நமது அடுத்த வெற்றி அமைகிறது.

தோல்வி என்பது என்ன?

தோல்வி என்பது பிறர் அபிப்பிராயம்.

இன்னது இப்படிச் செய்யப்பட வேண்டும் எனப் பிறர் தீர்மானித்த அபிப்பிராயம் அது. அதற்காக அது சரியாக இருக்கவேண்டுமென்பதில்லை.

ஒரு மாணவன் பள்ளித் தேர்வுகளில் தோல்வியுறு கிருன். அதனுலே அவன் உதவாக்கரை ஆகி விடு வானு? ஒரு பெண் தன்னைப் பார்க்க வந்த வரன்களால் நிராகரிக்கப்படுகிருள். அதற்காக அவள் வசீகர குணங்களே அற்றவள் என்ருே, பின்னுல் ஒரு குடும் பத்தை நிர்வகிக்கத் தகுதியற்றவள் என்ருே ஆகி விடுமா? மோகன்தாஸ் காந்தி மிகச் சிறந்த வழக் கறிஞராக சட்டமன்றத்தில் வாதாடியது இல்லைதான். அதனுல் அவர் மனிதத் தன்மைக்கு ஏதும் மாசு ஏற்பட்டதா? கணித மேதை ராமானுஜம் குடந்தைக் கல்லூரியில் ஆங்கிலப் பாடத்தில் 'பெயி'லானுர். பின்னுல் கணிதத்தில் உலகம் புகழ் மேதையாவதை அது தடை செய்யவில்லை.

சிவாஜி கணேசனைப் பார்த்து, "பையனுக்கு குதிரை மூஞ்சி, இவரை வைத்துப் படம் எடுத்தீர்கள் என்ருல் நான் அதில் பங்குதாரராக இருக்க விரும்ப வில்லை" என்ருராம் ஒரு படத் தயாரிப்பாளர் அந்தக் காலத்தில். படத்திற்கு சிவாஜி தகுதியற்றவர் என்றது சிவாஜியின் திறமையை மறைத்ததா?

நினைவில் கொள்ளுங்கள். தோல்வி என்பது பிறர் அபிப்பிராயம். அவர்கள் ஒரு சின்ன அளவுகோல்

வைத்திருக்கிறார்கள். ஐந்தடி ஐந்தங்குலம், 140 பவுண்டு என்று இத்தியாதி சாமுத்திரிகா லட்சணங்களா. அது அவர்கள் அபிப்பிராயம். பிறர் அபிப்பிராயத்தை வைத்து நாம் வாழ்க்கை நடத்த முயலக் கூடாது. சில விமரிசகர்கள் எழுதுகிறார்கள் என்பதனால் ஒரு படம் படுத்து விடுவதில்லை. சிலர் மட்டம் தட்டுகிறார்கள் என்பதனால் ஒரு நடன ஆசிரியரின் முத்திரைகளின் மாற்று குறைந்து விடுவதில்லை. ஏதோ ஒரு படத்தில்—முதல் படத்தில்—ஒரு பையனோ பெண்ணோ நன்றாக நடித்துப் பிரகாசிக்க முடியவில்லை என்று அவர்கள் நடிப்புத் திறமையையே அதன் மூலம் முடிவு கட்டுவது தவறு. அந்தப் படத்தில் நடிக்கவில்லை, சிறக்கவில்லை, அவ்வளவுதான்.

ஆரம்பித்த புதிதில் ஓர் இளம் மனைவி சுடும் இட்லியையோ, பலகாரத்தையோ கண்டு பரிகாசம் செய்வதோ, சமைக்கவே தெரியாது என்று கிண்டல் செய்வதோ சரியல்ல. அங்கே ஓர் எதிர்கால மீனாட்சி அம்மாள் இருக்கக்கூடும்.

வான்கோழியைப் பார்த்து மயில்போல் இல்லை என்று கூறுகிறார்கள் பலர். மொரார்ஜியைப் பார்த்து நேரு போல் இல்லை என்பது சரியா? மயில் வேறு, வான்கோழி வேறு. படைப்பில் அவை வெவ்வேறு பரிணாம வளர்ச்சியில் தோன்றியவை. வேறு வேறு வாழ்க்கைக்காகப் பிறந்தவை. அதைப் புரிந்து கொள்ளாமல் உள்ளூர் நாயனக்காரர் காருகுறிச்சி போல் ஊதவில்லை என்றால் எப்படி? உள்ளூர் நாயனக்காரர் உள்ளூர் விசேஷங்களுக்கும் கோயில் உற்சவங்களுக்கும் நாயனம் வாசித்து மகிழ்ச்சி தருபவர். கோடையும், மழைக் காலமும், பனிக் காலமும் எப்படி

வேறு வேறு ரசிக்கத்தக்க பருவங்களோ அதுபோல மனிதர்கள் பல் பல திறமைகளால் படைக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தந்த நிலையில் அததை ரசிக்க நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

வீட்டில் பெரிய பையன் படிப்பில் முதல் என்றால், யாராவது வரும்போது, "பெரிய பையன் பள்ளிக்கூடத்தில் மிகுந்த கெட்டிக்காரன்" என்று பாராட்டுங்கள். அதற்காக இரண்டாவது பையனையோ பெண்ணையோ பிடித்துக்கொண்டு, "இது சுத்த மக்கு" என்று ஒப்பிட்டுக் கேவலப்படுத்தாதீர்கள்.

வானில் எத்தனையோ நட்சத்திரங்கள் இருக்கின்றன. பூமியில் எத்தனையோ சின்னஞ்சிறிய புற்செடிகள் முளைத்திருக்கின்றன. இப்பிரபஞ்சத்தில் எல்லாம் இணைந்துஇயங்குகின்றன. எல்லாவற்றிற்கும் இடம் உண்டு. ஒன்றுடன் ஒன்றை ஒப்பிட்டு, பிறரைக் கஷ்டப்படுத்தாதீர்கள். உங்களைத் தாழ்த்திக் கொள்ளாதீர்கள்.

16

புதிய நோக்கு தேவை

தோல்வி என்பது ஒரு பாடம். முயற்சியின் உரைகல். செயல் திறனைச் சோதிக்கும் ஒரு கால கட்டம். நம் துணிவைத் தூண்டிவிடும் ஒரு நிகழ்ச்சி, நம் துணிவுக்குச் சவால் விடும் ஒரு சந்தர்ப்பம்.

வெற்றி என்பது என்ன? நாம் எண்ணிவந்த எண்ணங்கள் சரியானவை என்பதை நாம் அடையும் வெற்றி நிரூபிக்கிறது. அவ்வளவுதான். ஆனால் தோல்வியானது நாம் எண்ணிவந்த எண்ணங்கள், செய்துவந்த முயற்சிகள் சரியானவை அல்ல என்பதைத் தெளிவுபடுத்துகிறது. ஆகவே தோல்வியிலிருந்து தான் நாம் கற்றுக் கொள்ள முடியும். பற்பல தோல்விகளிலிருந்துதான் பல வெற்றிகளும் வந்திருக்கின்றன. விமானம் செய்தவர்கள், கார் செய்தவர்கள் எல்லோரும் எத்தனையோ தோல்விகளிலிருந்து கற்றுக் கொண்ட பாடங்களாலல்லவா விமானத்தையும் காரையும் மேலும் நல்ல அமைப்பாக மாற்ற முடிந்தது! அதனால்தான் கூறுகிறார்கள், தோல்வி வெற்றிக்கு முதல்படி என்று.

தோல்வியை எதிர்பார்க்காதீர்கள்; ஆனால் தோல்வி நேரும்போது அதற்காகக் கலங்காதீர்கள். இவ்வுலகில் வெறும் வெற்றியால் ஆன வாழ்க்கை என்று பூராவும்

வெற்றியால் எதுவும் அமைந்துவிடுவதில்லை. 'தோல்வி ஏன் நேர்ந்தது, எங்கே தவறு செய்தோம்?' என்று ஆராய்ந்து தெளியும்போது நாம் நம தோல்வியைப் பயன்படுத்திக்கொள்கிறோம். தோலவி நமக்கு உதவு கிறது. தோல்வியைக் கண்டு நொந்து கலங்குபவர் கள், பல துறைகளிலும் முன்னேறிய தலைவர்களின், விஞ்ஞானிகளின் சுயசரித்திரங்களைப் படிக்க முயல வேண்டும். அவர்களுக்கு நேர்ந்த கஷ்டங்கள் நமக்கு ஆறுதலைத் தரும். "அதையும் மீறி முன்னேறியிருக் கிறார்கள், ஆகவே முடியாதது ஒன்றுமில்லை" என்ற துணிவு நமக்கேற்படும். துரதிர்ஷ்ட-வசமாக சரித்திரங் களை எழுதும் போது, 'அதில் நமக்கு ஒரு பிடிப்பு ஏற் படும்படி அனுபவித்து உணர்ந்து எழுதுபவர்கள் இல்லையோ நம் நாட்டில்' என நான் எண்ணுவதுண்டு. சரித்திரம் படிப்பது 'அறுவை அனுபவமாக' அமைய வேண்டியதில்லை. சரித்திரம் நம்மை முன்னேக்கி நடக் கவும் சிந்திக்கவும் தூண்டும் ஒரு புத்துணர்ச்சிப் புத்த கம்.

எல்லாவற்றிலும் பூரணத்வத்தை எதிர்பார்க்கா தீர்கள் என்று யோசனை கூறுகிறார்கள் மனநூலார். எதிலும் பூரணத்வத்தை, அற்புதமான படைப்பை நோக்கி உழைப்பது நல்லது. அதற்காக 'பூரணத்வம், பூரணத்வம்' என்று கூறிக்கொண்டு எழுதி எழுதி கிழித்துப் போடும் ஒரு கதாசிரியன் ஒரு நாளும் எந்தக் கதையையும் எழுதிமுடிக்கமாட்டான். அழித்து அழித் துச் சிலையைச் செய்யும் ஒரு சிற்பி தன் வாழ்நாளில் அந்த அற்புதச் சிலையை முடிப்பானு என்பது சந்தேகமே. மாணவன் பூரணமான அறிவுபெறவில்லை என்று ஆசிரியர் தீர்மானித்தால் எங்கே அவன் பள்ளி

யைக் கடந்து வெளிவருவது? அதனுல்தான் 35 சதம் மதிப்பெண்கள் பெற்ருல் 'தேறியவன்' என்று ஒரு நடப்பு முறையை நம் பள்ளிகள் வைத்திருக்கின்றன.

பூரணத்வம் என்று நாடி மனத்தை அலேக்கழிப்பது வீண் வேலேயாகும். கடவுள் ஒருவர்தான் இவ்வுலகில் பரிபூரணமாக இருக்கிருர். இப்பிரபஞ்சத்தையும் வாழ்க்கையையும், உயிர்களேயும் பார்க்கும்போது, எங்கும் மாறுதலும் வளர்ச்சியுமே தென்படுகிறது. மாறுதலும், பரிணும வளர்ச்சியும் (Evolution) தான் இவ்வுலகின் அடிப்படை உண்மைபோல் படுகிறது. உயிர்கள் பூரணத்வத்தை நோக்கி நடைபோடுகின்றன.

நடனமாடுவதில் கமலா போல் இல்லே என்ருே, இசையில் எம். எஸ். போல இல்லே என்ருே, நடனத்திலும் இசையிலும் அனுபவிக்கக்கூடிய சொந்த இன்பங்களேப் பறிகொடுத்துவிடாதீர்கள்.

தமிழ் வாசகம் ஒன்று கூறுகிறது, 'செய்வன திருந்தச் செய்' என்று. முடிந்தவரையில் திருத்தமாகச் செய்ய வேண்டும். அவ்வளவுதான். அதற்காக 'செய்வனவற்றை அரைகுறையாகச் செய்துவிட்டு, 'இது போதும்' என்று சொல்லிக் கொள்வது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகும்.

சுதந்திரமான நிலேயில் மனம் இயங்கச் சில வழிகள் உள்ளன. சில பயிற்சிகள் உள்ளன. துணிச்சலாக, வழக்கங்களே மாற்றி அமைப்பதும் செயலாற்றுவதும் நம் மனத்தின் ஆக்க சக்திகளே வெளிப்படுத்தும்.

ஆரிய பவனிலேயே சாப்பிட்டு அனுபவப்பட்ட நீங்கள் ஒரு நாள் மதுரை முனியாண்டிவிலாசில் எப்படி டீ போட்டுத் தருகிருர்கள் என்று ஒருமுறை முயன்று பாருங்கள்.

விகடன், குமுதம் என்றும் ஹிந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ் என்றும் படிக்கும் நீங்கள், ஒருநாள் 'விடுதலை' தினத்தாளை வாங்கிப் படியுங்கள். என்ன தான் சொல்கிறார் வீரமணி என்று அறிந்து கொள்ளுங்கள். மாறுபட்ட கருத்தைச் சீர்தூக்கிப் பார்க்கக் கற்றுக்கொள்ளுங்கள்.

எப்போதும் விமரிசனத்தைப் படித்துவிட்டோ அல்லது பிறர் சொல்லக் கேட்ட பிறகோ நல்ல படத்திற்குப் போவது என்று கொள்ளாமல் துணிச்சலாக்; ஒரு புதிய படத்திற்கு முதல் நாளே போய்ப் பாருங்கள்.

எட்வர்ட் எலியட்ஸ் ரோடிலும், பீச்சிலும், மற்றும் நகர எக்ஸ்டென்ஷகளிலும் 'வாக்' போவதற்குப் பதில் காலாற குடிசைப பகுதிகளிலும் சேரிகளிலும் நடந்து செல்லுங்கள் பத்து நாளைக்கு. அவர்களது வாழ்க்கை முறையை, கஷ்ட நஷ்டங்களைப் புரிந்து கொள்ள முயலுங்கள். இது அமைச்சர்களுக்கு நல்லது.

காரசாரமாக மாறுபட்ட அபிப்பிராயம் சொல்லுப வர்களைப் பார்த்து, "இவன் குரங்கன். திருந்தமாட்டான். மூளை கெட்ட பயல்" என்று விமர்சிப்பதற்குப் பதில், "அடேடே! இப்படி இது நாள் வரை நான் எண்ணிப் பார்த்ததில்லையே" என்ற மனோபாவத்துடன் அணுக முயலுங்கள்.

மனிதர்களை நிறத்தை உருவத்தைக் கண்டு எடை போடாதீர்கள். மாயூரத்திற்கருகில் நல்லடை என்ற கிராமத்திலிருந்து கணேசன் என்ற மாணவர் என்னுடன் படித்தார். பிள்ளைமார் வகுப்பைச் சேர்ந்த அம் மாணவர் அப்பளக் குடுமி வைத்துப் பின்னால் 'பம்'

மென்று தலைமயிரை முடிந்திருப்பார். அவரிடம் பழகினால் பிறர் பரிகாசத்திற்கு ஆளாக நேரிடும் என்று நானு அவருடன் பழகவே இல்லை. ஒருநாள் நெருங்கிப் பேசிப் பழகியதும் அவர் உருவத்தை, தலைமயிரை, கொண்டையை நான் காணவில்லை. உற்சாகம் நிறைந்த தன்னம்பிக்கை மிகுந்த நண்பரைத்தான் கண்டேன்.

அதே போலத்தான் நமதுஊரில் திருமணத்திற்குப் பெண் பார்ப்பதும். வெறும் அழகை, நிறத்தை, உயரத்தை, படிப்பை, சொத்தை மட்டுமே பார்த்துப் பலர் மயங்குகிறார்கள. வாழ்க்கைக்கு வேண்டியவை குணம் அன்பு, நிறை, பொறுமை, இனிமை. கறுப்பான பெண்களைக் கல்யாணம் செய்துகொள்பவர்கள், பழகியதற்குப் பின் கறுப்பு நிறத்தைக் கண்டே இருக்க மாட்டார்கள்.

சாதாரணமாக காண்பவைகளை மீறி நாம் காணப் பழகிக்கொள்ள வேண்டும்.

செய்கிற வேலை உங்களுக்குப் பிடிக்கவில்லை என்றால் அதிலேயே தேங்கிக் கிடக்காதீர். ''தேங்கிக் கிடந்த தண்ணீர் நாற்றமெடுத்துவிடும். வில்லைவிட்டுப் புறப்படாத அம்பு எதையும் செய்யாது'' என்கிறான் ஓர் அரபு நாட்டு ஞானி. வாழ்க்கையை ஒரு முறைதான் வாழ்கிறோம். அதை அற்புதமாக நமக்குப் பிடித்தவாறு நாட்டுக்குப் பயன்படுமாறு வாழ்ந்துவிட வேண்டும்.

17

சுய விமரிசனம்

உண்மை — பரம்பொருள் — என்பதைத் தவிர அந்த உலகில் நிரந்தரமானது ஏதும் இல்லை. குழந்தையாகப் பிறந்து வாலிபனாக வளர்ந்து வயோதிகர்களாக மாள்கிறோம். பருவ காலங்கள் மாறிக்கொண்டிருக்கின்றன. நேற்றுடன் ஒப்பிடும் போது இன்று புதிய நாள்; வேறுபட்ட நாள்; புத்தம் புதிய நாள். இந்த உலகின் மாறுபடும் தன்மையை—ஏதோ ஒன்றை நோக்கி வளரும் தன்மையை—நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இதைப் புரிந்து கொள்ளும்போது உபயோகமற்ற சட்ட திட்டங்களால் அர்த்தமற்ற பழக்க வழக்கங்களால் நம்மைச் சித்திரவதை செய்து கொள்வது நம் வாழ்க்கைக்கும், மனநலத்திற்கும் நல்லதா என்பதை நாம் யோசிக்க வேண்டும். நெறி என்ற பெயரால், இப்படித்தான் இத்தனை நாள் செய்து வந்திருக்கிறேன் என்ற பெயரால், இப்படி நடந்துகொண்டால் உலகம் ஏற்காது என்ற பெயரால், மனிதன் தன் சுதந்திரத்தைச் சிறைப்படுத்தி விடுகிறான். நமது சாதி மதக் கட்டுப்பாடுகளும் அந்த வகையைச் சார்ந்தவையே.

ஒரு ஹரிஜன் பொது நீர்க்குளத்தில் குளிக்கக் கூடாது, தண்ணீர் மொள்ளக்கூடாது என்பது என்ன கட்டுப்பாடு, என்ன நியாயம் என்பதை யோசித்துப் பாருங்கள். யோசித்தும் பார்த்தால், இப்படி இது நாள்

வரை எண்ணிப் பழகப் பழக்கப்பட்டுவிட்டோம்; ஆகவே வேறுவிதமாக எண்ண, சிந்திக்க நம்மால் முடியவில்லை. "இது இப்படித்தான்" என்று கூறும் தலைவர்கள், குடும்பஸ்தர்கள் தங்களை நீதிபதி இடத்தில் தாங்களே நியமித்துக் கொள்கிறார்கள். தங்கள் வாழ்வையும் பிறர் வாழ்க்கையையும் சின்னா பின்னப்படுத்துகிறார்கள் —சிறைப்படுத்துகிறார்கள். நமது சாதி மதக் கட்டுப்பாடுகள் ஒரு வகைப் பாதுகாப்பு அளிக்கின்றன; உண்மைதான். ஆனால் அந்தக் கட்டுப்பாடுகள் துன்பத்திற்கும், மன உளைச்சலுக்கும், குற்ற மனோபாவத்திற்கும் காரணமாக அமைய விடக்கூடாது.

ஒவ்வொரு சந்தர்ப்பமும் புதிய சந்தர்ப்பம்; ஒவ்வொரு நிகழ்ச்சியும் புதிய நிகழ்ச்சி. அந்தந்த சமயத்தில் நம்மால் என்ன செய்ய முடியுமோ, எது நல்லதோ அதைச்செய்ய முயலவேண்டும். "இவை இப்படித்தான் செய்யப்பட வேண்டும்" என்று சமுதாயம் இட்டிருக்கும் நெறிகளுக்காக உண்மையை, நன்மையை, மகிழ்வை நாம் பறிகொடுத்து விடக்கூடாது. மனிதன் வாழப் பிறந்திருக்கிறான். மகிழ்வுடன் வாழ்வதே வாழ்வின் குறிக்கோள். மகிழ்வுடன், வாழ்வில் பலனும் இருக்குமானால் அது உயர்குறிக்கோளாகும். வாழ்வின் நீண்ட காலக் குறிக்கோளை வைத்து வாழ்க்கை நடத்த முயலவேண்டுமேயன்றி, அர்த்தமில்லாத தாற்காலிகச் சடங்குகளுக்குள் மாட்டிக் கொண்டு விழிக்கக்கூடாது

மாற்ற முடியாத சட்ட திட்டங்களைப் பழக்க வழக்கங்களாகக் கொண்டு நாம் வாழ முயல்வோமானால், நாம் வெளிஉலகத்தால்—புறப்பொருள்களால் ஆளப்படுபவர்களாவோம். மாறாக, நாம் நம் உள்ளுலகத்தால்—மனச்சாட்சியால்—விடுதலை பெற்ற சுதந்திர உணர்

வால்—வாழ்வின் அடிப்படை லட்சியத்தால் ஆளப்பட வேண்டும்.

"என் பெற்றோர் என்னைச் சரிவர நடத்தவில்லை" என்று நம் குறைகளுக்குப் பிறரைக் குற்றம் காண்பது நல்லதல்ல. அப்படிச் சொல்வதன் மூலம் பிறர் நம்மை ஆட்கொள்ள அனுமதித்திருக்கிறோம் என்பதே மறைமுகமாக வெளிப்படுகிறது. "என் அதிர்ஷ்டம் அப்படி" என்று தன்னைத்தானே வருத்திக் கொள்பவனும், "என் அதிர்ஷ்டம் லாட்டரியில் பரிசு கிடைத்தது" என்பவனும் பிற விஷயங்களால், புறப்பொருள்களால் ஆளப்படுபவர்களே.

பொதுவாக நம்மிடம் நம்மைப் பற்றியே ஒரு சந்தேகம் தோன்றுகிறது. பெரிய தன்னம்பிக்கை கொண்ட தலைவர்கள் என்று நாம் நம்பிக் கொண்டிருப்பவர்கள்கூட பேச்சு முடிந்தவுடன், "பேச்சு எப்படி இருந்தது? நன்றாக அமைந்ததா?" என்று பிறரைக் கேட்கிறார்கள். தலைவனுக்கும் சாதாரண மனிதனுக்கும் உள்ள வித்தியாசம், வாழ்நாளில் எத்தனை முறை எத்தனை விஷயங்களுக்கு சாதாரண மனிதன் தன்னம்பிக்கை இழக்கிறான், அதைரியப்படுகிறான் என்பதிலே அடங்கியிருக்கிறது. அத்தகைய சமயங்களிலெல்லாம் "என் வாழ்க்கை என் கட்டுப்பாட்டில் இருக்கிறது. நான்தான் அதன் நிர்வாகி" என்று நான்கு முறை நமக்கு நாமே சொல்லிக் கொள்வது தன்னம்பிக்கை யூட்டும் மனச் சிகிச்சை என நிபுணர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். அப்போது நாம், புற விஷயங்களால் பாதிக்கப்படாத 'உள் மனிதனாக' வெளி வருகிறோம்.

அமெரிக்காவில் சுமார் 75 சத மக்கள் புற விஷயங்களால் ஆளப்படுபவர்கள் என்றும், சுமார் 25 சத

மக்களே தங்களது உணர்ச்சிகளைத் தங்களது உள் மனத்திறத்தினுல் கட்டுப்படுத்துபவர்கள் என்றும், ஒரு செய்தி வந்தது. தனிமனிதனை விட்டுவிட்டுச் சமுதாயத்தைப் பார்த்தாலும் அதே விதமான மனப் பாங்குதான் வெளிப்படும்.

சில ஆண்டுகளுக்கு முன் நடந்த உலக நிதியமைச்சர்கள் மாநாட்டில், "ஏழை நாடுகளின் பஞ்சத்திற்கும் பசிக்கும் காரணம் பணக்கார நாடுகள் தங்கள் வளத்தை ஏழை நாடுகளுடன் பங்கு போட்டுக் கொள்ளாததால் தான்" என்று திரு. சவான் வெளுத்து வாங்கினுர். கவனியுங்கள்! ஏழை நாடுகள் முன்னுக்கு வராதது ஏழை நாட்டின் கையில் இல்லையாம்! நாம் நமது குறைகளை உணரவும் ஒத்துக் கொள்ளவும் மறுக்கிறோம். மாருகப் பிறரைப் பார்த்துக் குற்றஞ் சொல்கிறோம். இதன் மூலம் நமது கையாலாகாத் தனத்தை மறைக்க முயல்கிறோம்.

"நம் நாட்டின் மக்கள் மனுேபாவம் மாறவில்லை. திட்டங்களை நாம் நிறைவேற்றவில்லை. பாடுபடவில்லை" என்ற எண்ணம்—சுயவிமரிசனம்—பலன் தந்திருக்கும். உண்மைகளை மறுப்பதன் மூலம் நம் எதிர்காலத்தை ஒத்திப் போடுகிறோம்.

சில மனுேபாவங்களைக் கவனியுங்கள். "ஐயா! என் பெண் பொல்லாதது. உங்கள் பையனிடம் சொல்லி வையுங்கள், பதிலுக்குப் பல்லிளிக்க வேண்டாமென்று" என்கிருர் ஒரு தந்தை.

"பாசாகவில்லை. நல்ல மார்க் கிடைக்கவில்லை. உண்மைதான். எல்லாம் அந்தப் பாழாய்ப்போன ஆசிரியரால் வந்தது. ஏதாவது சரியாகச் சொல்லிச்

கொடுத்திருந்தால் அல்லவா தேறுவதற்கு? வாத்தியார் மோசம்'' என்கிருன் ஒரு மாணவன்.

''மக்களே பாருங்கள்! எல்லாம் அவர் ஆட்சியில் விளைந்த கேடுகள். மாதம் மும்மாரி பெய்யவில்லை. பள்ளிகள் மூடப்பட்டன. ரயில்கள் தடம் புரண்டன. எல்லாம் அவராட்சி! அவர் ஆட்சி!'' என்று மூலைக்கு மூலை வீராவேசமாகக் கனல் கக்குகிருர் அரசியல்வாதி.

பிறரைக் குற்றம் சொல்வது எளிது. குறை கூறுவது சுலபம். அது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ள உதவுகிறது. அரசியல்வாதிக்குப் பிறரை ஏமாற்ற உதவுகிறது. உண்மையான பிரச்னைகளிலிருந்து மக்களைத் திசை திருப்ப அது உதவுகிறது.

நம் செயல்தான் நம் விதியை நிர்ணயிக்கிறது என்பதை உணர்ந்து, என்று செயல்படுகிருேமோ அன்றுதான் நாம் உண்மையைத் தரிசிப்போம். முன்னேற்றத்தின் முதல் படியில் நாம் காலை வைக்க முடியும்.

18

வழிபாட்டு மனோபாவம்

நாம் என்ன எண்ணங்களை மனத்தில் கொண்டிருக்கிறோமோ அதற்கேற்பவே நமது சூழ்நிலை அமைகிறது. நம் எண்ணங்களுக்கேற்பவே நமது குண நலன்கள் அமைகின்றன; பழக்க வழக்கங்கள் அமைகின்றன. நேர்மையான எண்ணங்கள் கொண்டவன் நேர்மையான யோக்கியம் நிறைந்த மனிதனாக வாழ்கிறான், கெடுக்கும் எண்ணங்கள் கொண்டவன் முடிவில் தானே கெட்டுப் போகிறான். கள்ள எண்ணங்கள் கொண்டவன் திருடனாக மாறுகிறான். அவன் சொம்பு திருடுபவனாக ஆகக்கூடும் அல்லது பாங்கு நிர்வாகியாக இருந்தால் பொதுப் பணத்தைக் கையாடுபவனாக முடியும். எண்ணம்தான் வாழ்க்கை.

தைரியமான எண்ணங்கள் கொண்டவன் முகத்தில் வீரம் வெளிப்படுகிறது. உண்மை வழி எண்ணங்கள் போகும்போது முகத்தில் உண்மைஒளி தென்படுகிறது.

தனி மனிதர்களால் ஆன கூட்டம்தான் சமுதாயம். ஆகவே சமுதாயத்தையும் அந்தத் தனி மனிதர்களின் குண வேறுபாடுகள் பற்றிக்கொள்கின்றன. வெறும் பேச்சு—வெட்டிப் பேச்சு—கல்லிப் பேச்சு—பேசும் தனி நபர்கள் கொண்ட சமுதாயம் எதையும் சாதிக்காது. சுலபமாக அரசியல் தலைவனிட

யிருந்து சலுகைகள் பெற்று வாழ்ந்துவிடலாம் என நம்பும் சமுதாயத்தில் உழைப்பவர்கள் அதிகம் இருக்க மாட்டார்கள். அந்த நோக்கில், படித்தவர்கள் எல்லாம் நமது சமுதாயத்தின் பொது குணநலம் என்ன என்பதைப்பற்றித் தீவிரமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அதிகம் நம்மையோ, நம் சமுதாயத்தைப் பற்றியோ நாம் சுய விமரிசனம் செய்வதில்லை. ஏன்? ஏதாவது நமக்குப் பிடிக்காத விஷயங்கள் வெளிவரக் கூடும். நாம் நம் மனப்போக்கை, நடவடிக்கைகளை இதன் விளைவாக மாற்றிக்கொள்ள வேண்டியிருக்கும். இது சுலபமான விஷயமல்ல. இதைவிட பொதுவாக 'தமிழர்கள் புத்திசாலிகள்' என்று நேரு சொல்லியிருக் கிறார் எனச் சொல்லிக் கொண்டிருப்பதில் ஒரு பிடிப்பு இருக்கிறது சுலபம். ஐ. ஏ. எஸ். பரீட்சைகளில் தமிழன் கோட்டை விடுகிறான் என்பது நடைமுறை உண்மை யானாலும் நேரு சொன்னதைக் கூறி நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ள முடியும. 'வடவேங்கடம் தென் குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்' என்று வருணிக்கும் போது ஏதோ தமிழகத்தில் பொன்னும், மணியும், நெல்லும், கரும்பும் பூத்துக் குலுங்குவது போல் ஒரு பிரமை. நமது முன்னோர் இமயத்தில் புலிக் கொடி நாட்டினார் என்பதிலும், கங்கையையும் கடாரத் தையும் கொண்டார்கள் என்பதிலும், யவன மிசிர, சாவக நாடுகளுடன் வாணிபம் செய்து வந்தார்கள் என்பதிலும்—பெருமைப்பட நிகழ்காலத்தை மறக்க நிறைய இருக்கிறது.

நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளும் இத்தகைய எண்ணங்கள் மூலம் நமது தமிழ்ப் பண்டிதர்களும்,

அரசியல் வாதிகளும் நம் எதிர்காலத்தை அறியாமையால் சூறையாடுகிறார்களோ என நான் கவலைப்படுவதுண்டு.

நமது சமுதாய மனோபாவம்—தனிப்பட்ட நபர் மனோபாவம்—பெரும்பாலும் வழிபாட்டு மனோபாவமாக இருக்கிறது.

மன நூல் வல்லுநர்கள் கூறுகிறார்கள். "பிறர்மீது குற்றம் காண்பது மிகச் சுலபம். நம் பொறுப்பைத் தட்டிக்கழிக்க நல்ல வழி. அதேபோல தலைவர்களிடம் வழிபாட்டு உள்ளத்துடன் நடந்து கொள்வதும் சுலபம். நம் பொறுப்பைத் தலைவன்மீது சுமத்திவிடும் நல்ல வழி அது. ஆக இரண்டு வழியிலும் நாம் செயல் படாத நிலைக்கு, நம் கையாலாகாத்தனத்திற்கு நல்ல சமாதானத்தை வைத்திருக்கிறோம்' என்கிறார்கள்.

இன்று நாம் கற்காலத்தில் வசிக்கவில்லை. அல்லது அதிகம் விஞ்ஞான அறிவு பரவாத சங்ககாலச் சோழன் நாட்களில் நாம் இல்லை. அவ்வளவு நாகரிகம் பரவாத ஆப்பிரிக்க நாடுகளைப் போலவோ, அவ்வளவு படிப்பறிவு பெறாத ஆஸ்திரேலியப் பழங்குடி மக்களைப் போலவோ நாம் இல்லை. எனினும் ஒரு தலைவனை எடுத்துக்கொண்டால் காந்தியை, நேருவை, இந்திரா காந்தியை, காமராஜரை, அண்ணாவை—அவர்களிடம் நாம் கொண்டுள்ள வழிபாட்டு மனோபாவம் நம்முள் சதையும் ரத்தமுமாக ஓடுகிறது. இது நாட்டின் பாரம்பரியமா? வறுமையினால் விளைந்த கேடா? பயத்தினால் விளைந்த கோளாறா? ஏன்? ஏன்?

அமெரிக்காவில் யார் வீட்டுக்குள் நுழைந்தாலும் ஒரு அரசியல் தலைவன் படத்தை நாம் பார்க்க முடி

யாது. ஒரு சினிமா நட்சத்திரத்தின் படத்தை நாம் காண முடியாது. ஆனால் நமது ஊரிலோ வீட்டுக்கு வீடு அரசியல்தலைவர்படம், சினிமா நட்சத்திரங்களின் கவர்ச்சிப் படம் வீட்டை அலங்கரிப்பதைக் காணலாம்.

நோபல் பரிசு பெற்ற ஒருவிஞ்ஞானியைப் பார்க்கப் போன ஓர் இந்திய விஞ்ஞானியிடம் அந்தக் காரியதரிசி சொன்னார். "அவரும் நம்மைப் போன்ற மனிதர்தான். சாதாரண குணங்கள் கொண்டவர்தான். ஒரு மகத்தான விஷயத்தைத் தற்செயலாகக் கண்டுபிடித்தார்; அவ்வளவுதான். அதற்காக உங்களை இழந்து விடாதீர்கள்" என்று எச்சரித்தார்.

நாம் நமக்கே தலைவனாயிருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். நாம் இசையை ரசிக்கலாம்; ஒரு நாட்டியத்தை அனுபவிக்கலாம்; ஓர் அரசியல் வாதியின் பேச்சைச் சுவைக்கலாம். அதற்காக அவர்கள் நம்மைவிட ஆயிரம் பங்கு மேல் என்று நம்மைத் தாழ்த்திக் கொண்டு நிற்கும் மனோபாவம் நம் நாட்டில் ஒரு நோயாகப் பரவி இருக்கிறது.

அரசியல் தலைவன் என்றல்ல. ஆசிரியரைப் பற்றியும் சரி, நமது மேலதிகாரியைப் பற்றியும் சரி, நாம் இந்தவிதத்திலேதான் அணுகுகிறோம். வழிபாட்டு மனோபாவம், ஒரேயடியாகப் பாராட்டுவது அல்லது ஒரேயடியாக இகழ்வது, தூற்றுவது என்ற இரண்டிற்கும் இடையில்தான் நமது பொதுமக்கள் உலவுகிறார்கள்; பத்திரிகைக்காரர்கள் எழுதுகிறார்கள்; படித்தவர்கள் நடந்துகொள்ளுகிறார்கள். ஆனால் நம்இலக்கியமென்னவோ, 'குணம் நாடி, குற்றம் நாடி, மிகை நாடி, மிக்க கொளல்' என்பன போன்றவற்றால் நிறைந்திருக்கிறது. நேருவின் காலில் விழுவது என்றில்லை; நேரு

வுக்குப் பத்து பங்கு தரம் குறைந்த தலைவர் காலிலும் விழுகின்ற கூட்டத்தைப் பார்க்கும்போது, "யார் காலி லாவது விழுவது என்பதுதான் தொழிலா? வாழ்வின் நோக்கமா?" என்ற ஆச்சரியம் நம்முள் எழுகிறது.

திருமணம் என்பது ஒரு மனிதன் தன் சொந்த வாழ்க்கையைத் துவங்கும் ஒரு புனித ஆரம்பம். அங்கே என்ன காண்கிறோம்? ஒழுக்கத்தில் குறை பாடுள்ள ஒரு பெருந்தலைவனைக் கண்டுபிடித்து அவன் தலைமையில், அவன் ஆசியில் நமது ஊரில் திருமணம் என்ற புனிதப் பயணம் துவங்குகிறது. மக்களுக்கு விவஸ்தை இருப்பதாகக் காணோம். தலைவனுக்கும் 'இது செய்யலாம், இது செய்யக்கூடாது' என்ற ஒரு தெளிவோ, தாரதம்மியமோ இருப்பதாகத் தெரிய வில்லை.

வழிபாட்டு உள்ளத்தின் காரணம், நமது தன் மையில் நமக்கு நம்பிக்கை இல்லாதது. நம்மிடம் சுய மதிப்பு இல்லை. தன்மானம் இல்லை. இதற்குப் பதில் பிறரை நம் தலைமீது ஏற்றி, நாம் ஈடுகட்ட முயல் கிறோம். வழிபாட்டு மனோபாவம் நம் நாட்டில் ஒரு சமுதாய நோயாக இன்று பரவி நிற்கிறது. சமுதாயத் திற்கு இன்று மனசிகிச்சை தேவை.

19

தனித்தன்மையை வளருங்கள்

ஒரு கார்ட்டூன் போட்டிருந்தார்கள். அது ஒரு படுக்கையறை. படுக்கை அறையைச் சுற்றிலும் புத்தகங்கள் நிறைந்திருக்கின்றன. "ஏன் இப்படிப் படுக்கையறையில் போய்ப் புத்தகங்களை நிரப்பி வைத்திருக்கிறீர்கள்?" என்று கேட்டதற்கு, "என் மனைவி என்னுடன் சதா வாதிடுகிறாள். அவள் சொல்வது சரியல்ல என்று நிரூபிப்பதற்காகத்தான் இப்படிப் புத்தகங்களை வாங்கி அடுக்கியிருக்கிறேன்!" என்கிறான் கணவன். பாவம் கணவன்!

'நாம்தான் சரி' நாம் சொல்வதுதான் சரி என்று நிரூபிக்க வேண்டிய தாகம் உங்களுக்கு ஏற்பட்டிருக்கிறதா? உலகில் பல விஷயங்கள், அபிப்பிராயங்கள். உலகில் எத்தனை மனிதர்கள் இருக்கிறார்களோ அத்தனை அபிப்பிராயம் இருக்க வழியுண்டு. ஒரே விஷயத்தைப் பல மக்கள் பல்வேறு நோக்கில் காண்பார்கள். மக்களின் சுவை வேறுபட்டது. அவரவர்கள் தாங்கள் வளர்ந்த விதத்திற்கேற்ப அனுபவத்திற்கேற்ப எதைப் பற்றியும் தனி அபிப்பிராயம் கொள்ள உரிமையுண்டு.

மாறுபட்ட அபிப்பிராயம் கொண்டிருப்பதற்காக நண்பனைத் தூற்றுவதும், நமக்குப் பிடிக்காத தலையங்கத்தை எழுதினார் என்பதற்காகப் பத்திரிகையின் சந்தாவை நிறுத்துவதும் குழந்தைத்தனமான செயல்கள். 'நான்தான் சரி' என்று வாதிட முயலாதீர்கள். நீங்கள்

ஏற்ற கட்சி தவறு என்று நிரூபிக்கப்படும் போது, உங்கள் கொள்கைகளுக்கே பெரிய ஆட்டம் ஏற்படுகிறது. பிடிவாதம் அதிகமாகும்போது இரக்கமும் அதிகமாகிறது.

மனிதர்களது தனித்தன்மையை நாம் மதிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். புடைவை கட்டிக்கொண்டு வரும் ஊரில் ஒருபெண் கால்சட்டை போட்டுக்கொண்டு வந்தால், அதனுல் அவளது புனிதம் பாழாகிவிடுவதில்லை. உடை என்ருல் இப்படித்தான், உணவு என்ருல் இப்படித்தான், வீடென்ருல் இப்படித்தான் என்று நாம் எல்லாவற்றையும் அறுதியிட்டுக்கொண்டு—எல்லாவற்றையும் நம் அளவுகோலால் அளக்கவும் மதிப்பிடவும் முயல்வது அறியாமை.

ஒரு சமயம், குடந்தையில் கணபதி விலாசில் ஒரு நிகழ்ச்சி நடந்தது. எதிரே உட்கார்ந்திருந்த மனிதர் சற்று கிராமத்து மனிதர் போலக் காட்சி அளித்தார். பலகாரங்கள் அடுக்கி வைத்திருந்த தட்டைப் பார்த்தார். அதிலே பாதாம்பூரி அழகாகத் தென்பட்டது. அதை ஒரு பிளேட் கொண்டுவரச் சொன்னுர். அது வந்தவுடன், 'சாம்பார் கொண்டுவா' என்ருர் சர்வரைப் பார்த்து. சர்வர் விழித்தார் முதலில். பின் கொண்டு வந்தார். பாதாம் பூரியின் நடுபள்ளத்தில் ஒருகுளத்தை வெட்டிச் சாம்பாரைத் தேக்கினுர் அவர். சர்வரின் கண்கள் வெளியேவந்துவிட்டன. என் கண்களும்தான். சாப்பிட்டுவிட்டு இறங்கி வரும்போது நானுக நினைத்துக் கொண்டேன். 'அவருக்குப் பாதாம் பூரியும் சாம்பாரும் சேர்ந்த கலவை பிடிக்கிறதென்ருல் அவர் சாப்பிடுவதில் என்ன தவறு? ஏன் கூடாது? சர்வருக்கு என்ன இடைஞ்சல்? எனக்கென்ன நஷ்டம்?' என்று நானே கேட்டுக்கொண்டேன்.

என்ருவது, எங்காவது எனக்குப் பிடித்த விஷயத்தை நான் செய்யத் துவங்கும்போது, பிறரது அபிப்பிராயங்களை நான் லட்சியம் செய்ய விரும்பாதபோது—அந்த மனிதரைத்தான் நினைத்துக் கொள்வேன்.

பாதாம்பூரியும் சாம்பாரும்தான் என் கண்முன் வரும்!

உண்மையில் சொல்லப்போனல், இப்படி மாறுபட்ட மனோபாவம் கொண்டவர்களாலேதான் உலகம் முன்னேறியிருக்கிறது. உலக முன்னேற்றமே சமுதாயத்தையும் நிகழ் உலகத்தையும் எதிர்த்துப் போராடியவர்களாலேயே உருவாகி இருக்கிறது. ஏற்றுக்கொண்டவர்களால் அல்ல. இருக்கிறதை இருக்கிறபடி ஏற்றுக் கொண்டவர்கள் ஆட்டுமந்தைக் கூட்டம்; சாய்கிற பக்கமே சாயும் செம்மறியாடுகள். எதிர்ப்பவர்களும், புது வழி கண்டுபிடிப்பவர்களுமே முன்னோடிகள்.

உடன்கட்டை ஏறுவதை எதிர்த்த ராஜாராம் மோகன்ராய், இந்தியப் பெண்கள் உலகத்திற்கே நன்மை செய்தார். ஹரிஜனங்களுக்காகப் போராடிய காந்தி, வெள்ளைக்காரன் ஆட்சியை எதிர்த்த கட்டபொம்மன், சுய மரியாதைக்காகப் போராடிய பெரியார் ராமசாமி—இவர்களெல்லாம் முன்னோடிகள். தனித்தன்மை கொண்டவர்கள். நாம் நம் தனித் தன்மையை வளர்க்கவேண்டும். பிறர் என்ன சொல்வார்களோ என அதை அமுக்கி, கூட்டத்துடன் சேர்ந்து கோயிந்தா போடக்கூடாது.

தனித்தன்மை பற்றிப் பேசும்போது அத்துடன் தைரியமும் வீரமும இணைந்து நிற்பதைக் காணலாம். நமது தனித்தன்மையை நிலைநிறுத்த எல்லோரும் புரட்சி வீரர்களாக மாறவேண்டியதில்லை. நாட்டில் எமர்ஜென்சி வந்தபோது எத்தனை பேர் எதிர்த்தார்கள்?

ஜெயப்பிரகாஷ் எதிர்த்தார்; பர்ணுண்டஸ் எதிர்த்தார். பலர் உள்ளத்தில் எதிர்த்திருக்கக்கூடும். சரியான சமயத்திற்காகக் காத்திருக்கக்கூடும்.

ஓர் அநியாயமான வரியை எதிர்த்து தோரோ என்ற அமெரிக்க அறிஞர் ஒருநாள் சிறை சென்றார். அவர் ஊரைக் கூட்டவில்லை; புரட்சிக் கூட்டம் நடத்தவில்லை.

மனோதத்துவ நிபுணர்கள் கூறுகிறார்கள். "ஊரைக் கூட்ட வேண்டுமென்பதல்ல. உள்ளத்தால் பணியாதீர்கள். விஷயத்தைச் சுற்றிவாருங்கள். போராடத்தான் வேண்டுமென்பதல்ல. உங்கள் தனித் தன்மையை இழக்காத வகையில் நடந்து கொள்ளுங் கள்'' என்று கூறுகிறார்கள். நம் தனித்தன்மையை இழக்கக்கூடாது என்று சொல்லும்போது, நாம் நம்மைத் தலைவனாக உயர்த்திக்கொள்ள வேண்டு மென்றோ நம் வீரத்திற்கு அதுதான் உரைகல் என்றோ யாரும் கூறவில்லை.

மின்சார விளக்கைக் கண்டுபிடித்த எடிசனும், முதல் விமானத்தைப் பறக்கவிட்ட ரைட் சகோதரர் களும், புதுமைக் கவிஞன் பாரதியும் தங்கள் தனித் தன்மை மூலம்தான் கூட்டத்திலிருந்து தனித்து இன்று சரித்திரத்தில் நிற்கிறார்கள்.

முள்ளிலே மலரும் மலர், சுற்றியிருக்கும் முட்களுக் காகக் கவலைப்படுவதில்லை. காட்டிலே விரியும் ஒரு மலர் தன் மணத்தை ரசிக்க யாரும் இல்லையே எனக் கவலைப்படுவதில்லை. உளுத்துப்போன சம்பிரதாயங் களை மறந்துவிட்டு சுதந்திரமான மன நிலையில் ஒரு கவிதை எழுதத் தொடங்குங்கள். உள்ளம் சமுதாய விலங்குகளிலிருந்து விடுபடட்டும். உலகின் ஆக்க சக்திகள் நம்முள் பிரவகிப்பதை, "உலகின் அதி அற்புத மனிதனாக நாம் உயருவதை நீங்கள் உணரக்கூடும்.

20

நல்லெண்ணங்களைத் தேர்ந்தெடுங்கள்

பழக்கடையில் பழங்களை அழகாக அடுக்கி வைத்திருக்கிறார்கள். நாம் நமக்குப் பிடித்த பழங்களை வாங்கிக் கொள்கிறோம். பூக்கடையில் விதவிதமான பூக்களைக் கொட்டி வைத்திருக்கின்றனர். நாம் நமக்குப் பிடித்தமான பூக்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறோம். பெரிய ஓட்டல்களில் விதவிதமான உணவுகளைச் சமைத்து அடுக்கி வைத்திருக்கின்றனர். நமக்குப் பிடித்த உணவைத் தட்டிலேற்றிக் கொள்கிறோம்.

அதேபோல் உலகில் பலவகையான எண்ணங்கள் நிறைத்து வைக்கப்பட்டிருக்கின்றன. சுக நினைவுகளை எழுப்பும் எண்ணங்கள், துக்கத்தை மூட்டிவிடும் எண்ணங்கள், சுறுசுறுப்பையும் உற்சாகத்தையும் தரும் எண்ணங்கள், சோகத்தையும் சோர்வையும் உண்டுபண்ணும் எண்ணங்கள், என்று உலகில் நம் கண்முன் பலவற்றை அடுக்கி வைத்திருக்கின்றனர். காற்றில் மிதக்க விட்டிருக்கின்றனர். நாம் எதைத் தேர்ந்தெடுக்கிறோம்?

நமக்குப் பிரியமானது எது?

கோபக்காரன் என்று பெயர் பெற்றவனையும், தன்னம்பிக்கை இல்லாதவன், கையாலாகாதவன், கவலைப் படுபவன் என்று அழைக்கப்படுபவனையும் பார்த்தால் அவன் உள்ளம் எந்த விதங்களால் நிறைக்கப்பட்டிருக்கிறது என்பது தெரியவரும். சிலரது முகத்தைப் பார்த்

தாலே சொல்லிவிடலாம், துக்கம் கோடுகளைப் போட்டிருக்கிறதா, உற்சாகம் தன்னம்பிக்கையை நிலவ விடுகிறதா என்று. அவர்கள் அழுகிய பழத்தை வாங்குபவர்கள், விலை குறைவாக. வாடிய பூவைத் தெருவிலிருந்து பொறுக்குபவர்கள். ஊசிப்போன உணவை மென்று விழுங்குபவர்கள்.

அவர்கள் எதைத் தேர்ந்தெடுத்தார்கள்? துக்கத்தை, துயரத்தை, பிரச்னைகளைச் சமாளிக்க முடியாத அவலத்தை.

இந்தக் கீழ்ப்பட்ட எண்ணங்களைத் தேர்ந்தெடுப்பவர்கள் அதில் ஆழ்ந்து போகிறார்கள். மாறாக மேம்பட்ட எண்ணங்களைத் தேர்ந்தெடுப்பவர்கள் வாழ்க்கையின் வெற்றிப்பட்டியலில் இடம் பெறுகின்றனர்.

"எனக்கேற்பட்ட நிலை அப்படி. நான் வருத்தப்படாமல் என்ன செய்ய முடியும்?" என்று சிலர் கேட்பது காதில் விழுகிறது. வருத்தப்படுவது பிரச்னைகளுக்கு வழி காட்டுவதில்லை. வருத்தத்தை விட்டுவிட்டு, "இது நிலைமை. இதிலிருந்து மீள நான் என்ன செய்யலாம்?" என்று சிந்திக்கும்போதுதான் வழி பிறக்கிறது.

வருத்தப்படுவதன் மூலம் நமக்கு நாமே தண்டனை அளித்துக் கொள்கிறோம். அப்படி தண்டனை அளித்துக் கொள்வதில் ஒரு சிறு சந்தோஷம். வருத்தப்படுவதன் மூலம் பிறர் அனுதாபத்தைப் பெற முயல்கிறோம். அதில் சிறு சந்தோஷம். இவை இரண்டும் வழி தெரியாதவன் நடக்கும் தடுமாற்றப் பாதைகளே.

பயம், கோபம், பொறாமை, குற்ற உணர்வு, கவலை இவற்றைக் கீழ் உணர்ச்சிகள் (Negative Emotions) என்று கூறுகிறார்கள். இந்தக் கீழ் உணர்வுகள் மனிதனது சிந்திக்கும் திறனை, சிந்திக்கும் அமைப்பை முடக்கி விடுகிறது என்று கூறுகிறார்கள் மன சிகிச்சை மருத்துவர்கள். முடக்கப்பட்ட மனம் செயலற்றுப் போகிறது. முடக்கப்படுவது மட்டுமல்ல; நமக்கு நல்ல யோசனைகளையும் நம்பிக்கையையும் கொண்டு தந்து

உதவக் கூடிய பெருமனத்தின் வாயில் கதவை இவை சாத்தி விடுகின்றன.

"ஒருவர் வீட்டுக்குப் போகிறீர்கள். அவர் உங்களை மதிக்கவில்லை" என்று வைத்துக்கொள்ளுங்கள். நமது கௌரவம் பாழ்பட்டதாகப் புழுங்குகிறோம். கோபமடைகிறோம். அந்த மனிதரைத் திட்டுகிறோம். பழி வாங்கத் துடிக்கிறோம். அதாவது அந்த மனிதர் உரிய கௌரவத்தை உங்களுக்குத் தரவில்லை. அதனால் உங்கள் கௌரவம் திடீரென்று இறங்கிவிட்டதா? இல்லை. நீங்கள் நேற்று இருந்த அதே மனிதர்தான். அவர் கொடுப்பதனால் வருவதில்லை கௌரவம், நம்மை நாமே மதிப்பதால், புரிந்து கொண்டிருப்பதால் வருவதுதான் அது. அது ஒரு சிறு சம்பவம், நிகழ்ச்சி. அது நம்மைப் பாதிக்க நாம் அனுமதிக்கலாம். அல்லது ஏதோ தூசு காற்றில் பறப்பதைப்போல நாம் அதைச் சாதாரணமாக எடுத்துக்கொள்ளலாம். ஏற்பட்ட மன வேதனை நிகழ்ந்த சம்பவத்தால் ஏற்பட்டதல்ல. அதை நாம் எப்படி எடுத்துக் கொண்டோம் என்பதைப் பொறுத்தே வருகிறது.

புத்தர் ஒரு வீடடுக்குப் பிச்சை கேட்கப் போனார். அந்த வீட்டுக்காரன் அவரைத் திட்டினான். புத்தர் கூறினார். "ஐயா! சற்று நில்லுங்கள். பிச்சை போட்டிருந்தீர்களேயானால் அந்த அரிசி யாருக்குச் சொந்தம்? எனக்குத்தானே! அதேபோல நீங்கள் போட்ட பிச்சையை வாங்க மறுத்திருந்தால் அந்த அரிசி யாருக்குச் சொந்தம்? உங்களுக்குத்தானே! அதே போல நீங்கள் போட்ட திட்டுக்களை ஏற்க மறுக்கிறேன் அவை உங்களுக்கே சொந்தம். எடுத்துச் செல்லுங்கள். நான் உங்களை—ஒரு நண்பனை—இழந்தேன்" என்று சொல்லிவிட்டு நடக்கிறார்.

புத்தர் அவமானப்பட்டாரா என்பதை யோசித்துப் பாருங்கள். எல்லாம் ஒரு சொல்லை, ஒரு சம்பவத்தை, ஒரு பிரச்னையை எப்படி எடுத்துக் கொள்கிறோம் என்பதையே பொறுத்து இருக்கிறது.

நேற்று என் நண்பர் கூறினார். "நல்ல விஷயத்தை சொல்லுவோமே அல்லாததை ஏன் சொல்லவேண்டும்?" என்றார்.

'கனியிருப்ப காய் கவர்ந்தற்று' என்று வள்ளுவர் கூறுகிறார். உண்மைதானே, கனியிருக்க, புளிகரும் காயைக் கடிப்பானேன்? மனத்திற்குள்ளே விடும் சரியான எண்ணங்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு நம் கையில் இருக்கிறது. பரீட்சையில் பெயிலாகிவிட்ட மாணவன் ஒருவன் தற்கொலை செய்து கொள்கிறான். பெயிலான மற்றொரு மாணவனோ, 'கணித மேதை ராமானுஜத்தைக்கூட ஆங்கிலத்தில் கும்பகோணம் கல்லூரியில் பெயிலாக்கவில்லையா? என்ன யோக்கியதை இருக்கிறது, இந்தப் பரீட்சை முறைக்கு?'' என்று எடுத்துக் கொள்கிறான். எது நல்லது என்பதை நீங்கள் சிந்தித்துப் பாருங்கள்.

'என் மனைவியுடன் வாழ முடியவில்லை. ஓடி வந்து விட்டேன்' என்று சொன்னான் ஒருவன்.

தத்துவஞானி சாக்ரடீஸ் தன் நண்பருடன் நின்று கொண்டு உரையாடிக் கொண்டிருந்தபோது சாக்ரடீஸின் மனைவி முதலில் குப்பையைக் கூட்டி மேல் மாடியிலிருந்து அவர் தலையில் கொட்டினாள். சற்று நேரம் கழித்து ஒரு வாளி தண்ணீரைக் கொண்டு வந்து அவர் தலையில் உயரே இருந்து ஊற்றினாள். சாக்ரடீஸ் சமாதானமாகக் கூறினார், "முன்பு இடி இடித்தது. இப்போது மழை பெய்கிறது'' என்று.

இந்த வெளி விஷயம் சாக்ரடீஸின் உள்ளத்தைப் பாதிக்கவில்லை. விஷயங்களில், அதற்குள்ளாக நன்மை தீமை ஏதும் இல்லை. நாம் அதை எப்படி எடுத்துக் கொள்கிறோம் என்பதைப் பொறுத்தே நம் உணர்ச்சிகள் புறப்படுகின்றன.

ஜீவன் பிரஸ் சென்னை - 5